# உதயன்

வானிலை
கூ.வெ. 30°C
கு.வெ. 29°C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 223 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 22, செவ்வாய்க்கிழமை 07.07.2015


## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அம்பாறையில் வேட்புமனு

அம்பாறை, ஜூலை 7
வேட்பு மனுக்கள் கையேற்கும் முதல் தினமாகிய நேற்றுத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முதலாவது வேட்புமனு அம்பாறை மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டது.
8ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக் கையேற்கும் நிகழ்வு நேற்று முதல் ஆரம்பமானது. இதனை அடுத்து கிழக்கு மாகாணத்தில் முதலாவது தமிழ்க் கட்சியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று அம்பாறை மாவட்டத்தில் செல்லையா இராசையா தலைமையில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது. (த-101)

# கூட்டமைப்பின் இலக்கு 20 எம்.பி. ஆசனங்கள்

### வவுனியாவில் சம்பந்தன் நேற்று எடுத்துரைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 7
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் 20 ஆசனங்களைப் பெற வேண்டும். இதனைப் பெறுவதன் ஊடாக நாடாளுமன்றில் பேரம் பேசும் சக்தியாக நாம் மாற முடியும். நிரந்தர அரசியல் தீர்வையும் விரைவில் பெற்றுக்கொள்ளமுடியும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத் தேர்தலில் ஆசனப் பங்கீடு, தேர்தல் அறிக்கை மற்றும் வடக்கு– கிழக்கில் தேர்தல் பரப்புரைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் கூட்டமைப்பின் உயர்பீடக் கூட்டம் வவுனியா 'வன்னி இன்' விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. பக்.24

## வெள்ளியன்று கூட்டமைப்பு வேட்புமனு தாக்கல் செய்யும்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு – கிழக்கின் 5 தேர்தல் மாவட்டங்களிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், அங்கத்துவக் கட்சித் தலைவர்களின் கூட்டம் வவுனியாவில் நேற்று முழு நாள் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே ஆசனப் பங்கீடு தொடர்பில் ஆராயப்பட்டு இணக்கம் எட்டப்பட்டது.
அதன் பின்னரே, வேட்பு மனுத் தாக் கல் செய்வது தொடர்பில் பேசப்பட்டது. எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு – பக்.24

## உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 7
கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து 25 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தின் பின்புறமாக உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சடலம் 20 நாள்களின் முன்னர் கொலை செய்யப்பட்ட ஒருவருடையதாக இருக்கலாம் எனவும், துர்நாற்றம் எதுவும் வீசாமல் இருப்பதற்காக குறித்த நபர் கொலை செய்யப்பட்ட பின்னர் இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்தி இருக்கலாம் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.
சம்பவ இடத்துக்கு அருகாமையிலே கிளிநொச்சி பொதுச் சந்தை இருப்பதுடன் நாள்தோறும் 5000 இற்கும் மேற்பட்ட பயணிகள் இந்த வீதியூடாகப் பயணிக்கின்றனர். அதேபோன்று சம்பவ இடத்தை அண்மித்து காலை 6 மணி முதல் இரவு 9 பக்.24

# தேர்தலின் பின்னர் தீர்க்கமான முடிவ

### அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில்

யாழ்ப்பாணம், ஜூலை 7
அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில், தேர்தலின் பின்னர் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும். அதேபோல் காணாமற்போனவர்கள் தொடர்பில் அவர்களது உறவினர்களின் ஆதங்கங்களை நாங்கள் அறியாதவர்கள் அல்லர். இந்த விடயங்களை, இனியும் நீடித்து இழுத்துச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது. தேர்தலின் பின்னர் அமையும் புதிய அரசின் ஊடாக இந்த விடயங்களுக்கு நிச்சயம் நிரந்தரத் தீர்வு பெற்றுத் தரப்படும். பக்.24

# முடிவுக்கு வந்தது ஆசனப் பங்கீடு

### தேர்தலுக்கு கூட்டமைப்புத் தயார்

யாழ்ப்பாணம், ஜூலை 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையிலான ஆசனப் பங்கீடு நேற்று அனேகமாக முடிவுக்கு வந்தது. வன்னித் தேர்தல் தொகுதி தொடர்பில் காணப்படும் சிறு இழுபறி இன்று தீர்க்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவுள்ளது. வடக்கு – கிழக்கிலுள்ள ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களிலும், பக்.24

# பாதுகாப்புத் தீவிரம்



நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியுள்ளதைத் தொடாந்து வடக்கில் உள்ள உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகங்கள் அமைந்துள்ள மாவட்டச் செய லகங்களுக்கான பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
ஆயுதம் தாங்கிய பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் அங்கு நிறுத்தப்பட்டுள்ளனர். கலகம் அடக்குவதற்கான தயார் நிலையில் கண்ணீர்புகைக் குண்டுகள் சகிதம் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். குழப்பங்கள், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்து நோக்கில் தண்ணீரைப் பீச்சியடிக்கும் வாகனங்களும் முற்பாதுகாப்பு நடவடிக்கையாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது.
வழக்கத்துக்கு மாறாக இம்முறை மாவட்டச் செயலகங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் வடக்கில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (உ-101)

# யாழ்ப்பாணத்தில் நேற்று முதல் வேட்பு மனு தாக்கல்

### தேரர் தலைமையிலான கட்சி மும்முரம்



யாழ்ப்பாணம், ஜூலை 7
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்பது நேற்று ஆரம்பமாகிய நிலையில், யாழ். மாவட்டத்தில் முதலாவது வேட்புமனு பத்தரமுல்ல சீலரட்ன தேரர் தலைமையிலான பக்.24

# 29 கிலோ நிறை கஞ்சா மன்னார் கடலில் மீட்பு

### 4 இந்திய மீனவர்களும் கைது

மன்னார், ஜூலை 7
இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட தாகக் கூறப்படும் ஒரு தொகுதி கஞ்சா போதைப் பொருளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதனை இலங்கைக்குக் கொண்டு வந்தார்கள் என்று பொலிஸார் கூறும் இந்திய மீனவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். கடலில் இருந்து 29 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரி பக்.24

# மின்சார சபையில் பிழை எனில் இழப்பீடு தருவதற்கு நாம் தயார்

### சுன்னாகம் நிலத்தடி நீர் மாசு விவகாரத்தில் மின்வலு எரிசக்தி அமைச்சர் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7
சுன்னாகத்தில் நிலத்தடி நீர் மாசடைந்ததற்கு இலங்கை மின்சார சபை காரணமாக இருந்தால் அதற்கான இழப்பீட்டை நாம் தருவோம் என்று நேற்று யாழ்ப்பாணத்தில் கூறினார் மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க.
"சுன்னாகத்தில் நிலத்தடி பக்.24

# மஹிந்த என்ன அவருடைய தகப்பனே வந்தாலும் ஐ.தே.கட்சிக்கு சிக்கலில்லை

### யாழ்ப்பாணத்தில் இப்படிச் சொன்னார் அமைச்சர் பாலித்த

மஹிந்த அல்ல அவருடைய தகப்பனே மீண்டும் அரசியலுக்கு வந்தாலும் எமக்கு எந்தச் சிக்கலும் இல்லை. மஹிந்தவும் அவருடன் உள்ளவர்களும் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்.
இவ்வாறு தெரிவித்தார் மின்சக்தி எரிபொருள் இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்க பண்டார.
ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட தேர்தல் அலுவலக திறப்பு மற்றும் மின்சார சபை கட்டட திறப்பு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சரிடம் தேர்தல் நிலமை பக்.24

# வருட இறுதிக்குள் வடக்கில் 100 சதவீதம் மின்சாரம்

## மின்சார சபை புதிய கட்டட திறப்பு விழாவில் அமைச்சர் சம்பிக்க உறுதி



யாழ்ப்பாணம், ஜூலை 7

தற்போது 90 வீதமான மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த வருட இறுதியில் 100 வீத மின்சாரம் வழங்க எதிர்பார்க்கிறோம். வவுனியா, மன்னார் ஊடாக புதிய மின்சாரத் திட்டத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம் என்று மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் வட மாகாண அலுவலகத்துக்கான புதிய கட்டடத் தொகுதி பழைய பூங்கா வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தக் கட்டடத்தை 2010 இல் அமைக்க ஏற்பாடாகியிருந்து நீண்ட இழுபறியின் பின்னர் நிறைவேறியுள்ளது. இதனை நிர்மாணிப்பதற்கு யப்பான் அரசும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் உதவியிருந்தது. கடந்த 25 வருடங்களாக யாழ்ப்பாணம் மின் பெறுவதில் சிக்கலில் இருந்தது.

கடந்த காலங்களில் 50 வீதத்துக்கே மின்சாரம் வழங்கக்கூடியதாக இருந்தது. அதுவும் 24 மணித்தியாலங்களும் வழங்க முடியவில்லை. சுமார் 5 மணித்தியாலங்கள் வரை மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

அந்த நாள்களில் மின்சாரத்துக்கான எண்ணெய்க்காக ரூபா 160 கோடியைத் தாண்டியிருந்தது. தனியார் மின்சாரிடமிருந்து மின்சாரம் பெறுவதனை நிறுத்த முடியாதிருந்தது. பின்னர் சுன்னாகம் வரை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது சுன்னாக மின்நிலையம் ஊடாக கடந்தகால நட்டத்தை ஈடு செய்ய முடிகிறது என்று தெரிவித்தார்.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார, இலங்கை மின்சார சபைத தலைவர் எஸ். வியஜபால உள்ளிட்ட மத்திய சபையின் அதிகாரிகளும் வடமாகாண, மாவட்டங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். மாணவர்களது கலை நிகழ்வு மூலமாக சுண்டிக்குளிச் சந்தியிலிருந்து விருந்தினர்கள் புதிய கட்டடத்துக்க அழைத்து வரப்பட்டிருந்தனர். புதிய கட்டடத்தைத் திறந்து வைத்த பின்னர் ஒன்றுகூடலில் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. அதில் வடமாகாண ஆளுநர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ற-4)

# இடமாற்றத்தைக் கண்டித்து மாணவர்கள் போராட்டம்

## வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில்



யாழ்ப்பாணம், ஜூலை 7

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபரது இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி அந்தக் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அங்கு முன்னர் பணியாற்றிய அதிபர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அதனையடுத்து வேறொரு அதிபர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் முன்னைய அதிபரையே அந்தப் பாடசாலையில் நியமிக்குமாறு கோரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த அதிபர் 12 வருடங்கள் அந்தப் பாடசாலையில் பணியாற்றியுள்ளார் என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். அது தொடர்பில் இன்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதுதவிர சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் தொடர்பான விடயம் விசாரணையில் உள்ளதாகவும் இரவீந்திரன் தெரிவித்தார். அதிபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள தோடு சில கோரிக்கைகளை முன் வைத்துக் கடிதம் தரப்பட்டுள்ளதாகவும் அதனை விசாரிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## சட்டவிரோத மீன்பிடி ரூ.40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 8 பேருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

காக்கைதீவு, சாவற்கட்டு பகுதிகளைச் சேர்ந்த குறித்த மீனவர்கள் புங்குடுதீவு, குறிகட்டுவான் கரைகளில் அவ்வாறு மீன்பிடியில் ஈடுபட்டபோதே நேற்றுமுன்தினம் கடற்படையினர் அவர்களைக் கைது செய்து யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்ததாக அதன் உதவிப் பணிப்பாளர் பா.றமேஸ்கண்ணா தெரிவித்தார்.

அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றில் அவர்கள் தம்மீதான குற்றத்தை ஏற்றுக் கோண்டதனையடுத்து அவர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட மீன்கள் அழிக்கப்பட்டன. (ற-4)

# அமரர் வீரசிங்கம் நினைவாக விரைவில் தபால் முத்திரை

## அமைச்சர் பொ.ஐங்கரநேசன் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 7

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் நினைவாக விரைவில் தபால் முத்திரை ஒன்று வெளியிட்டு வைக்கப்படும் என்று மாகாண கூட்டுறவு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் உறுதியளித்துள்ளார்.

இந்த தபால் முத்திரை வெளியீடு தொடர்பாக வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் அமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடியது.

கூட்டுறவு பெரியார் வீரசிங்கம் நினைவாக இந்த தபால் முத்திரையை விரைவில் வெளியிட்டு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளதாக. தொழிற் சங்கத்தின் தலைவர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

வீரசிங்கம் அவர்களின் நினைவாக தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டு வைப்பதற்கு கூட்டுறவு அமைச்சின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது..

இதேசமயம், கூட்டுறவு பெரியாரின் நினைவாக அவரின் உருவச்சிலை ஒன்றை வீரசிங்கம் மண்டப வளாகத்தில் அமைப்பதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்று கூட்டுறவாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமூக ஆர்வலர்கள் மற்றும் கூட்டுறவாளர்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ற-17)

# முன்பள்ளி ஆசிரியருக்கு சீருடைக்கான துணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி உறுப்புரிமை சங்கங்களின் முன்பள்ளி ஆசிரியர், மாணவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த சீருடைத் துணிகளை வழங்கியுள்ளது. கொத்தணியின் தலைவர் எஸ். செல்வராசா தலைமையில் இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்பள்ளிகளைச் சேர்ந்த 382 மாணவர்களுக்கும் 106 ஆசிரியர்களுக்கும் சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் என். கணேசன், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் விமல்ராஜ், சமாச பொது முகாமையாளர் பொ.செல்வராசா மற்றும் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு இந்த சீருடைத் துணிகளை வழங்கி வைத்தனர்.

வலிகாமம் கொத்தணியின் இந்தச் செயற்பாடு கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. கூட்டுறவுக் கொள்கையில் சமூகத்தில் அக்கறை என்ற கொள்கைக்கு அமைய இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதை கூட்டுறவாளர்கள் பாராட்டியுள்ளனர். (ற-17)

## வேலை வாய்ப்பற்றோர் பதியலாம்

நாளை மறுதினம் வியாழக்கிழமை மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கான பதிவுகள் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபம் ஆவரங்கால் சிவசக்தி மண்டபம்அச்சுவேலி கலாமினி மண்டபம் என்பவற்றில் நடைபெறவுள்ளன. மு.ப.9 முதல் பி.ப. 4.15 மணிவரை இந்தப் பதிவுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி



கிளிநொச்சி, ஜூலை 7

வவுனியாவில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக உயிரிழை அமைப்புடன் இணைந்து யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் நேற்றுப் படுக்கை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இந்த நிகழ்வுகள் உயிரிழை அமைப்பின் தலைவர் ஏ.ஜெயகாந்தன் த[illegible]மையில் நடைபெற்றது.


கடந்தகால போராலும், பிறப்பாலும் மு[illegible] வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு [illegible] களை ஏற்படுத்தி கொடுக்கும் முகமாக [illegible] ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க அங்கத்தவர்களான. தனேசிங்கம் பரமானந்தன் அவர்களின் நிதி அனுசரணையில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 17 பயனாளிகளுக்கு முதல் கட்டமாக இந்த மெத்தைகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.சிறினிவாசன் மற்றும் பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர். (ற-21,421)

# தமிழர் பற்றி பேசினால் பயங்கரவாதி என்கின்றனர்

## அமைச்சர் பாலித ரங்கே பண்டார யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 7

தமிழர்களது பிரச்சினையைத் தீர்க்க ஐக்கிய தேசியக் கட்சியால் 2004 ஆம் ஆண்டு வடக்குத் தெற்கு அதிவேக தரைப்பாதை மற்றும் இந்தியாவுக்கான தரைப்பாதையை அமைப்பது பற்றிய கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் நாம் நல்ல காரியங்களைச் செய்யும் போதெல்லாம் எமக்குச் சேறு பூசுகிறார்கள். – இவ்வாறு மின்வலு எரிசக்தி ராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகத்துக்கான புதிய கட்டடத் தொகுதி பழைய பூங்கா வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

11 வருடங்களுக்கு முன்னர் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டேன், தமிழர்களது பிரச்சினையைத் தீர்க்க என்ன வழி என்று. அதற்கு அவர் கூறினார், வடக்குத் தெற்கு அதிவேகப் பாதை எப்போது உருவாகிறதோ அன்றிலிருந்து அந்தப் பிரச்சினை தீரும். அதாவது ஒன்றரை மணித்தியாலங்களில் கொழும்பு மக்கள் யாழ்ப்பாணம் வரவும் யாழ்ப்பாண மக்கள் கொழும்பு செல்லவும் எப்போது முடிகிறதோ அன்றிலிருந்து தமிழர்களது பிரச்சினையைத் தீர்க்க வழிஏற்படும் என்று கூறினார்.

மக்கள் தமது பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக் கொள்ளக்கூடிய வழி ஏற்படும். ஆனால் அதனைச் செய்ய முற்பட்டால் எம் மீது சேறு பூசுகிறார்கள். நாம் பயங்கரவாதிகளுக்கு உதவுகிறோம் என்று கூறுகின்றனர். வடக்குக்கு வந்தால் இந்தக் கட்டடமே பெரிய கட்டடமாக உள்ளது. மக்கள் மனதை வெல்ல வேண்டும். அவர்களது தேவைகளை நிறைவேற்ற வேண்டும். யாழ்ப்பாணம் தற்போது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாறிவருகிறது. எமது நோக்கம் அன்றும் இன்றும் என்றும் ஒன்றுதான். அதில் மாற்றம் வராது. – என்றார்.(ற–4)



# யாழ்.பொலிஸார் அதிரடி; சிக்கியது 3 கிலோ கஞ்சா

யாழ்ப்பாணம், ஜூலை 7

3 கிலோவுக்கும் அதிக நிறையுடைய கஞ்சாவுடன் ஒருவர் யாழ். பிரதேச சட்டவிரோத தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் பிரதேச சட்டவிரோத தடுப்புப் பிரிவினரே தமக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர். குறித்த நபரிடம் இருந்து 3 கிலோ 750 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ். குருநகர், பீச் றோட்டைச் சேர்ந்த செல்வம் நிக்சன் (வயது–30) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிறிகஜன் மற்றும் பொலிஸ் கொன்ஸ்டபிள் சமன் மற்றும் ஜெயசுந்தர கிரிசாத் ஆகியோரைக் கொண்ட பொலிஸ் குழுவே குறித்த நபரைக் கைது செய்துள்ளது. கஞ்சா மொத்த வியாபாரியான குறித்த நபரின் வீட்டுக்குள் பல பகுதிகளில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக் கப்பட்டது. கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மற்றொரு நபர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–106,86)

# இந்திய மீனவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 26 பேருக்கும் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் கடந்த 21 ஆம் திகதி பருத்தித்துறைக் கடற்பரப்பில் 3 படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். அவர்கள் குறித்த வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. எனினும் இந்த வழக்குத் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து எதுவித ஆவணங்களும் கிடைக்கப்பெறாததால் அவர்களது விளக்கமறியல் நீடிக்கப்பட்டது என்று யாழ்.பிராந்திய கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ் கண்ணா தெரிவித்தார். (ற–4)

# முன்பள்ளி மீது கழிவு ஒயில் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 7

கோண்டாவில் மேற்கிலும், மல்லாகம் கே.கே.எஸ். வீதியிலும் அமைந்துள்ள குழந்தைகள் உலகம் முன்பள்ளி நிலையத்தின் விளம்பரப்பலகைகள் மீது விஷமிகள் கழிவு ஒயில் வீசியுள்ளனர். விளம்பரப்பலகைகள் அடித்து நொறுக்கப்பட்டும் உள்ளன. இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவுவேளை இடம்பெற்றுள்ளது. (ற)

# மஹிந்தவும் களத்தில் மக்கள் தீர்மானிப்பர்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தேர்தலில் போட்டியிடுவது என்பது உறுதியாகிவிட்டது. ஆனால் அவரது வெற்றியை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அதனைவிட ஜனாதிபதி மைத்திரிபால தீர்மானிக்க வேண்டும். – இவ்வாறு அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகத்துக்கான புதிய கட்டடத் தொகுதி பழைய பூங்கா வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவர் நிகழ்வு முடிவில் செய்தியாளர்களிடம் கருத்துக் கூறுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாங்கள் நல்லாட்சியை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதனைத்தான் இந்த நாட்டு மக்கள் நடந்து முடிந்த தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தெளிவுபடுத்தியுள்ளனர். அதனை நாங்கள் ஆவலோடு செயற்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளோம். எதிர்காலத்தில் அறிவுசார் பொருளாதாரம், நல்லாட்சி மற்றும் சமவுரிமை என்பன பெற்றுக் கொடுப்பதற்கான உத்தரவாதம் வழங்கப்படும். தொழில் ரீதியான, அரசியல் கலாசாரம் தேவையாகவுள்ளது. நாங்கள் அந்தச் சூழலை நிச்சயமாக உருவாக்குவோம். எங்கள் பிள்ளைகள் படித்தவர்கள், கற்றுக் கொண்டிருப்பவர்கள், நீதிக்காகக் போராடுபவர்கள் என்று நாமும் இந்த அரசிடம் எதிர்பார்த்துள்ளோம்.– என்றார். (ற–4)



# எள்ளுக்காடு சிறுமியின் மர்மம் தொடர்கின்றது

## தகவல் தருமாறு கிளிநொச்சிப் பகுதி எங்கும் பொலிஸார் துண்டுப் பிரசுரம்


கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் காணாமல் போன 3வயது சிறுமி தொடர்பில் இன்னமும் மர்மம் நீடிக்கும் நிலையில், சிறுமி குறித்த தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக கிளிநொச்சி பொலிஸாருக்கோ அல்லது கிராம சேவகருக்கோ, அல்லது சட்ட உதவி ஆணைக் குழுவினருக்கோ தெரியப்படுத்துமாறு கிளிநொச்சி பகுதி எங்கும் பொலிஸாரால் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 21ஆம் திகதி எள்ளுக்காட்டை சேர்ந்த 3 வயது சிறுமி காணாமல் போயிருந்தார். தாயார் குளிக்கச் சென்றசமயம் வீட்டிலே தனியாக இருந்த சிறுமியை காணவில்லை என கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தாயாரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். உருத்திரபுரம் பகுதியில் உள்ள காடுகள், குளங்கள், கிணறுகள் என அனைத்தையும் பொலிஸார், கடற்படையினர், பொதுமக்கள் என அனைவரும் இணைந்து சல்லடையிட்டுத் தேடுதல் நடத்தினர். ஆயினும் சிறுமி குறித்த எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

காணாமல் போன சிறுமியின் தாயினுடைய வாக்கு மூலங்கள் முன்னுக்கு பின் முரணாகக் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். அதையடுத்து சிறுமி கடத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டிருந்தனர். கிளிநொச்சி தாண்டியும் சிறுமியைத் தேடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. விமான நிலையங்களுக்கும் சிறுமியின் புகைப்படம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதுஒருபுறமிக்க சிறுமியைக் காட்டேறிதான் கடத்திச் சென்று விட்டது என்று சிறுமியின் தாய் பொலிஸாருக்கு வாக்குமூலம் கொடுத்துள்ளார். தன்னையும் சிறுவயதில் காட்டேறி கடத்தியது என்றும், ஓரிரு



மாதங்களில் காட்டேறி விட்டு விடும் என்றும் கூறி அவர் பொலிஸாரைச் சங்கடத்துக்குள் ஆழ்த்தியுள்ளார். அது மட்டுமல்லாது காட்டேறி தொடர்பான சடங்குகளும், பரிகாரங்களும் கூட எள்ளுக்காட்டுப் பகுதியில் நடந்தன என்று தெரியவருகின்றது. பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ள நிலையில் சிறுமி தொடர்பான சிறு தடயமும் இதுவரை சிக்கவில்லை. எனவே விசாரணைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக கிளிநொச்சிப் பொலிஸார் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளர். அதன் பின்னர் பொதுமக்களிடம் இருந்து சிறுமி தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சிறுமியின் புகைப்படத்துடன் கூடிய துண்டுப்பிரசுரங்கள் கிளிநொச்சியின் அனைத்துப் பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன. (ற–21)

# நோர்வேயாகவே மாறும் இலங்கை

## அமைச்சர் பாட்டலி சம்பிக்க கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இலங்கை நோர்வேயாக மாறுமே தவிர நைஜீரியா போன்று அழிந்து போகாது. ஆனால் அது மக்களின் கைகளில்தான் உள்ளது. சரியான அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாகவும் சரியான அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாகவும் தான் அதனை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார். இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகத்துக்கான புதிய கட்டடத் தொகுதி பழைய பூங்கா வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது அதில் பிரதம விருந்ததினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மன்னாரில் எண்ணெய் அகழ்வு நிலையம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். மகாவலி திட்டத்தின் பின்னர் மேற்கோள்ளப்படும் பெரிய திட்டம் இதுதான். எதிர்வரும் 10 வருடங்களில் மன்னார் கேந்திர நிலையமாக மாறும். இலங்கைக்கு நிறைய எதிர்காலம் இருக்கிறது. நல்ல வளம் இருக்கிறது. அதனை நன்கு பயன்படுத்துவதா இல்லையா என்பதனைத் தீர்மானிப்பது நீங்கள்தான். 1969 இல் நோர்வே மிக வறுமையான நாடு. தற்போது உலகத்தில் பணக்கார நாடாக வளர்ந்துள்ளது. எண்ணெய் வளத்தினால் மிகவும் உயர்ந்த நாடு நைஜீரியா. இன்று அது மிக ஏழ்மையான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

2018 இல் இலங்கை முழுவதற்கும் மின்சாரம் வழங்கக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த வருட இறுதிக்குள் நாட்டின் அனைத்துப் பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படும். நாட்டின் அனைத்துப் பகுதிக்கும் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கும் ஒரே நாடு ஆசியாவில் இலங்கையாகத் தான் இருக்கும். இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 10 மணித்தியால மின்தடை ஏற்படுகிறது. புள்ளிவிவர அடிப்படையில் பார்த்தால்கூட 50 வீதம் தான் மின் பாவனை கிடைக்கிறது. சூரிய மின்சாரத்தை வழங்குவது பற்றி நாம் முயற்சி செய்வோம். யாழ்ப்பாணம் தொடக்கம் புத்தளம் வரை காற்றாலை மின் உருவாக்க முயற்சிக்கிறோம்.

மீளக் குடியேறியவர்களுக்குத் தொடர்ந்து மின்சாரம் வழங்குவதா என்பதனைப் புனர்வாழ்வு அமைச்சு, ஜனாதிபதி ஆகியோருடன் கலந்துரையாடி தொடர்ந்து வழங் கப்படும் என்று உறுதி அளிப்பதாக மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலங்கை மின்சார சபை ஊடாக இலவச மின் இணைப்பு வழங்குகிறோம். அந்தப் பொறுப்பை புனர்வாழ்வு அமைச்சுக்குப் பொறுப்புக் கொடுத்துளோம். இந்த வருடத்திலிருந்து சுதந்திரமான நிதி நிறுவனமாக மின்சார சபை மாறியுள்ளது. இலங்கை மின்சார சபையிலிருந்து சகல அபிவிருத்திகளுக்கும் நிதி கிடைக்கப்பெற மாட்டாது.

இந்த வருடத்தில் இலங்கை மின்சார சபையின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு 31 பில்லியன் தேவைப்படுகிறது. நாட்டில் மின்சார திட்டத்தை உருவாக்க மேலதிகமாகப் 10 பில்லியன் தேவைப்படுகிறது. வடக்கு கிழக்கில்தான் அதனைக் கூடுதலாகச் செய்ய வேண்டியுள்ளது. செலவுகளை ஈடுசெய்வது மின்சார சபையால் தான். மின்பாவனையாளர்களிடமிருந்து பெறும் பணத்தின் மூலமாகவே. மின்சாரம் எவருக்காவது கிடைக்காமல் போக இடமிருக்கக்கூடாது.

சுண்டை, சச்சரவுகளை நோக்கிச் சென்றால் இவை எல்லாவற்றையும் இழக்க வேண்டி வரும். ஆகவே இரத்தக் கசிவு, சர்ச்சைகளுக்கு கடந்த காலத்தை நோக்கிப் போகாமல் சிந்திந்துச் செயற்ட வேண்டும். முன்பு ஒரு காலம் பொறியியல் துறையில் விசேடமாக விளங்கிய யாழ்ப்பாணத்தில் தற்போது பொறியியலில் எவரும் இல்லாது உள்ளோம். எதிர்காலத்தில் பொறியியல் பீடத்தைக் கொண்டுவர முயற்சி செய்கிறோம். எனவே பொறியியல் கற்றபலர் தற்போது நாட்டில் இல்லை. மிகவும் அன்பாகக் கேட்கிறேன். நீங்கள் வெளிநாடு செல்லாது இங்குள்ள மக்களுக்காககக் கடமை ஆற் றுங்கள் என்பதே– என்றார்.


(ற–4)



வவுனியா சேமமடுப்பகுதிலிருந்து இளமருதங்குளம் செல்லும் பிரதான வீதியின் இருமருங்கிலும் வவுனியா மாவட்ட வனப்பாதுகாப்பு திணைக்களம் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்கள் அமைச்சின் அதிகாரிகளால் சில வருடங்களுக்கு முன்னர் நாட்டப்பட்ட பெறுமதி மிக்க மரங்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தீ வைத்துள்ளனர். குறித்த பகுதியில் வீரை, முதிரை, பாலை, மகோக்கனி, தேக்கு மரக் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தன. தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக அந்தப் பகுதி காய்ந்து காணப்பட்டுள்ளது. இந்தநிலையில் குறித்த மரக்கன்றுகள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து வனப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டுள்ளனர். (ற)

# அதிபரை இடமாற்ற வேண்டாமென மாணவர்கள் நேற்று போராட்டம்

## வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில்



நெல்லியடி, ஜூலை 7

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் தற்போதைய அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாமென அப்பாடசாலை மாணவர்களால் நேற்றுக் காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சினால் இந்த இடமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும் மாணவர்களும், பெற்றோர்களும் அதிபரை மாற்ற இடமளிக்க மாட்டோமெனக் கூறுகின்றனர். மாணவர்கள் பாடசாலைக் கதவுகளை மூடி பாடசாலைக்கு வெளியே நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனரல் பாடசாலையின் கல்வி செயற்பாடுகள் முடங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த கோட்டக் கல்வி அதிகாரியான சிவபாலன் நந்தகுமார் எதிர் வரும் பாராளுமன்ற தேர்தல் காலம் முடியும் வரைக்கும் எந்தவொரு இடமாற்றமும் நடைபெறாது எனவும் மாணவர்களை கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுமாறும் தெரிவித்தார். அதையடுத்து மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(ற)

# ஹெரோயினுடன் பெண் கைது: பருத்தித்துறையில் சம்பவம்

நெல்லியடி, ஜூலை 7

வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3மணியளவில் பருத்தித்துறை பொலிஸார் நடத்திய அதிரடி சுற்றிவளைப்பில் 1 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் கூட பயணித்த வேறொரு நபர் தப்பியோடி விட்டதாகவும் அவரை வலை வீசி தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பருத்தித்துறை நகர பகுதியில் வங்கியொன்றுக்கு சமீபமாக பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பிலேயே போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட பெண் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்தே சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். தப்பியோடியவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளனர். (ற–109)

# செய்தி சேகரிக்கச் சென்றவரை தகாத முறையில் நடத்திய இளைஞர்கள்

## தலைமன்னார் மேற்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

தலைமன்னார் மேற்கில் விளையாட்டுக்கழகம் ஒன்றால் சமீபகாலமாக வலைப்பந்தாட்ட மைதானமாக பயன்படுத்தப்பட்டுவரும் சிறுகாணியொன்று பொதுமக்களின் இயல்பான செயற்பாடுகளுக்கு பாதிப்பைத் தரும் விதமாக அமைகிறது என்று கிடைக்கப்பெற்ற ஒரு முறைப்பாட்டையடுத்து குறித்த இடத்துக்கு செய்தி சேகரிக்கும் விதமாகச் சென்ற ஊடகவியலாளரை அங்கிருந்த இளைஞர்கள் தகாத முறையில் நடத்தியமையால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்பட்டது.

வாகனத்தரிப்பிடம், இளைப்பாறும் இடம், வழிபாடுகள் செய்யும் இடம் என்று குறித்த காணி பொதுச் சொத்தைப் போன்று அனைவராலும் நீண்ட காலமாக பயன்படுத்தப் பட்டு வருகிறது. ஒருவர் மற்றவருக்கு இடையூறின்றி காணியைப் பயன்படுத்தலாம் என்ற பொதுவான புரிதலுக்கு அமையவே இக் காணி பலராலும் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஒருசிலர் நள்ளிரவு வேளைகளில் மின்னொளியில் வலைப்பந்தாட்டத்தில் ஈடுபடுவதாகவும் இதனால் குறித்த பகுதி மக்களின் தூக்கம் பாதிப்படைவதுடன் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தியது என்று தெரிவிக்கப்பட்டது. மைதானத்தின் எல்லைக்கோடாக கட்டப்பட்டிருக்கும் கயிறொன்றில் குழந்தையுடன் சென்ற பெண்ணொருவர் தடக்கி விழுந்ததில் குழந்தை காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து குறித்த பிரச்சினை தொடர்பாக செய்தியொன்றை அறிக்கையிடும் விதமாக பத்திரிகையாளர் ஒருவர் அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளார். பத்திரிகையாளர் மைதானத்தை படம்பிடித்து, தகவல்களையும் சேகரித்துக் கொண்டிருந்த சமயம் அங்கிருந்த இளைஞர் சிலர் படத்தை அழித்துவிடுமாறு அவரை மிரட்டியுள்ளனர். பத்திரிகையாளர் அதற்கு மறுக்க, தகாத முறையில் அவரை நடத்தியுள்ளனர். இதனையடுத்து பத்திரிகையாளர் குறித்த இடத்துக்கு அருகில் இருந்த தனது தாயாரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்கும் குறித்த இளைஞர்கள் வந்து வீட்டிலிருந்து அவரை வெளியே வரவிடாது தடுத்ததுடன் வீட்டிற்கு கல்லாலும் எறிந்துள்ளனர். இந்த அடாவடித்தனம் நான்கு மணிநேரம் நீடித்துள்ளது. இதையடுத்து பத்திரிகையாளர் பொலிஸ் மேலிடத்துக்கு முறையிட்டார். அதையடுத்து அவர் குறித்த இடத்திலிருந்து மீட்கப்பட்டு பேசாலையில் உள்ள அவரது வீட்டிற்கு பாதுகாப்பாக சேர்க்கப்பட்டுள்ளார்.

இவையனைத்தையும் மறைத்து தம்மை நிரபராதிகள் என்று காட்டும் விதமாகவே குறித்த விளையாட்டுக்கழத்தின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் நேற்று முன் தினம் உண்ணாவிரதம் என்ற நாடகத்தை அரங்கேற்றியதாகவும் பின்னர் உண்ணாவிரதமும் கைவிடப்பட்டதாகவும் குறித்த பகுதி வாழ் மக்கள் தெரிவித்தனர். அடாவடித்தனம் புரிந்த இளைஞர்களுக்கு ஆதரவாக மதகுரு ஒருவரும் உள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ம)

# சந்திரிகா பாதையில் செல்கிறாரா மைத்திரி?

## கேள்வி எழுப்புகின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜூலை 7

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, 2003 ஆம் ஆண்டின் போது அதிகாரத்தை தன்வசம் வைத்துக் கொண்டு நாட்டைப் பற்றிச் சிந்திக்காது கட்சியை மாத்திரம் நினைத்து செயற்பட்டமை போன்று, ஜனவரி 8 ஆம் திகதி மக்களால் ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக புரட்சியை மீள பின்னோக்கி நகர்த்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முனைகின்றாரா?– என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

தேர்தலின் பின்பான அடுத்த ஐந்தாண்டில் ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேனவின் தலைமையின் கீழேயே நாம் எமது ஆட்சியை அமைப்போம். இதனூடாக முழு நாடாளுமன்றத்தையும் அரசாக மாற்றி பொருளாதார ரீதியாக நாட்டை கட்டியெழுப்புவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் 70 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாராநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை அறுபது வருடங்களாக நான் நன்கு அறிவேன். அவரது சகோதரன் அநுர பண்டாரநாயக்க எனது பாடசாலை உற்ற நண்பனாவார். இந்த நிலையில் சிறு வயதில் நானும், முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்தனவும் அவரது வீட்டிற்கு விளையாடச் செல்வோம். இதன் போதே சந்திரிகாவுடன் எனக்கு பரிச்சயம் ஏற்பட்டது.

அவருடன் நடனப்போட்டியிலும் நான் பங்கு கொண்டுள்ளேன். நாட்டின் கலாசாரத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் நாம் இருவரும் ஒருமித்துச் செயற்பட்டுள்ளோம். இருந்த போதிலும் அரசியல் விடயதானங்களில் எங்கள் இருவருக்கும் இடையே பெரும் கருத்து முரண்பாடு கள் காணப்பட்டன.

நாம் இருவரும் இரண்டு பிரதான கட்சிகளைப் பிரதி நிதித்துவப்படுத்துபவர்களாக காணப்பட்டோம். இதன்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் அதிகாரத்தை கைப்பற்றும் விடயத்தில்யில் உக்கிரமான போர் இடம்பெற்று வந்தது. இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றை யொன்று முட்டி மோதிக் கொண்டு செயற்பட்டன. இந்தப் போரில் நாம் இருவரும் மாத்திரம் விதிவிலக்கல்ல.

இருந்தபோதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிப்பாதைக்கு கொண்டுவருவதற்கு பிரதானகாரண கர்த்தாவாக செயற்பட்டவர் சந்திரிகா பண்டாரநாயக்கவாகும். 1987 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திக் கட்சியின் வேட்பாளருக்கு உதவி புரிந்து கட்சியை ஓரளவு வெற்றிப் பாதைக்கு கொண்டுசென்றது சந்திரிகாவும் விஜய குமாரதுங்கவு மாவர்.

அதேபோன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் இனிமேல் அரசே அமைக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் நாம் இருந்தவேளை ,1994 ஆம் ஆண்டு சந்திகா நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிப் பாதைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

கட்சியை வெற்றிப் பாதைக்கு கொண்டு வந்ததுடன் மாத்திரம் அவரது பணிகள் நிறைவுபெறவில்லை. மாறாக நாட்டுக்குப் பெரும் சவா லாக இருந்த விடுதலை புலிகளுக்கு எதிரான போருக்கும் முகங்கொடுத்தார். இந்தப் போரின் போது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் முயற்சித்தார்.

எனினும் தனது ஆட்சிக்காலத்தின் போது பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டு பயங்கரவாதத்தை தோற்கடிப் பதற்கு பிரதான பங்காளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டா நாயக்க குமாரதுங்கவே செயற்பட் டார். இந்த போராட்டத்தில் தனது கண்ணையும் இழந்தார்.

இந்த நிலையில் 2002 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாம் இருவரும் ஒன்றாகச் செயற்படக் கூடிய சூழல் ஏற்பட்டது. இந்தக் காலப் பகுதியில் அமைச்சரவையை செயற்பட வைக்க பெரும் சிர மம் ஏற்பட்டது. எனினும் நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகளை புறந்



தள்ளி விட்டு தனக்கு நாட்டை விடவும் கட்சிதான் முக்கியம் என்ற நிலைப்பாட்டில் அரசியல் தீர்மானத்தை எடுத்திருந்தார். அதன் போது அவர் எந்த நிலைப்பாட்டில் இருந்தார் என்பது எனக்கு தெரியாது. எனினும் சுதந்திரக் கட்சியினர் அந்த முடிவை எடுக்கும்நிலைக்கு அவரைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

தற்போதும் அவ்வாறானதொரு நிலைமை தோன்றியிருக்கின்றது. ஜனவரி 8 ஆம் திகதி நாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக புரட்சியை பின்னோக்கி செலுத்துவற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முனைகின்றாரா என்பது தெரிய வேண்டியுள்ளது. ஜனவரி புரட்சியை பிற்போடுவதற்கு சுதந்திரக் கட்சியினர் செயற்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக புரட்சிக்கு ஒன்றுபட்டு செயற்பட்டாலும், தற்போது தேர்தலைக் கருத்திற்கொண்டு வேறு வேறாக சென்று போட்டியிட்டு செயற்றிறனுள்ள நாடாளுமன்றத்தை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. எனினும் இந்தத் தேர்தலில் வெற்றிப் பெற்று அடுத்த ஐந்தாண்டு காலப் பகுதியில் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவுடனே நாம் ஆட்சியை முன்னெடுப்போம்.

இதனூடாக முழு நாடாளுமன்றத்தையும் அரசாக மாற்றி நாட்டையும் கட்டியெழுப்புவோம். ஆகவே நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு நாம் அனைவரும் ஒன்று சேரவேண்டும். – என்றார். (ற)

# எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதியுடன் சந்திப்பு

## வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 7

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இந்த வாரம் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக மஹிந்த அணி ஆதரவாளரான முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 113க்கு மேல் ஆசனங்களை வெற்றி பெற்று மஹிந்த ராஜபக்ஷ இந் நாட்டின் பிரதமராவது நிச்சயமாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஏகாதிபத்தியவாதிகளின் திட்டத்துக்கு அமைய சந்திரிகா, ரணில் உட்பட அனைத்து சதிகாரர்கள் இணைந்து ஏற்படுத்திய பொறி தகர்க்கப்பட்டுள்ளது. இன்று மைத்திரியும் மஹிந்தவும் ஓரணியில் இணைந்துள்ளனர்.

நுகேகொடையில் ஆரம்பமான மக்கள் போராட்டம் இன்று வெற்றி கண்டுள்ளது. ஜனநாயக ரீதியிலான மக்கள் பலத்தால் ஏகாதி பத்திய வாதிகளின் சதித்திட்டங்களை தோல் வியடையச் செய்யலாம் என்பது இன்று உண்மை யாக்கப்பட்டுள்ளது.

தேசியபாதுகாப்பும்,சமூகநியாயத்துக்குமான மக்கள் சார்பு கொள்கை.மைத்திரி–மஹிந்த ஒன்றிணைவின் மூலம் ஆகஸ்ட் 17ஆம் திகதி மாபெ ரும் வெற்றியைப் பெறுவது நிச்சயமாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளை சுற்றியுள்ள மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீண்டும் ஒற்றுமைப்படுத்த மேற்கொண்ட போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. குடும்ப ஆட்சியை நாமும் எதிர்க்கின்றோம். இன்று மைத்திரியின் ஆதரவாளர்களாக இருந்தவர்களின் முகத்திரை கிழிந்துள்ளது. எஸ்.பி. நாவின்ன ஐ.தே.கட்சியுடன் இணைந்து விட்டார். எதிர்காலத்தில் மேலும் பலர் ஐ.தே.கட்சியுடன் இணைவார்கள். மைத்திரியுடன் இருந்தாலும் இவர்களின் ஆதரவு ஐ.தே.கட்சிக்கே இருந்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமக்கு 107 ஆசனங்கள் கிடைக்கும். இதனோடு இடதுசாரிகளும் ஒன்றிணையும் போது 113க்கு மேல் ஆசனங்கள் கிடைக்கும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னம் வெற்றி பெற்று மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டின் பிரதமராவது நிச்சயமாகும்.

எதிர்வரும் நாள்களில் (இந்த வாரம்) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எமது அணி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது.– என்றார். (ற)

# ஐ.தே.கவுடன் ஒருபோதும் இணையப் போவதில்லை

## அமைச்சர் எம்.கே.டி.எஸ் குணவர்தன கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 7

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சாதாரண வேட்பாளராகவே தேர்தலில் போட்டியிடவுள்ளார். இதனால் எமக்கு எந்த பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் தீர்மானங்களின் பிரகாரம் நான் செயற்படவுள்ளேன். எவ்வாறா யினும் நான் ஐக்கிய தேசியக் கட்சி யுடன் இணையப்போவதில்லை. – இவ் வாறு காணி அபிவிருத்தி அமைச்சர் எம்.கே.டி.எஸ் குணவர்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்புமனு வழங்கியமையால் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியிருந்த போதிலும், அவர் ஒரு சாதாரண வேட்பாளராகவே களமிறங்கவுள்ளார். ஆகையால் ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சி மாற்றத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

இந்த நிலையில் இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்திற்கு அடிபணிகிறேன். எந்தக் காரணம் கொண் டும் ஜனாதி பதியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படப் போவதில்லை. இதன்பிரகாரம் நாடாளுமன்ற தேர்தலில் நான் எக்காரணம் கொண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப்போவதில்லை. – என்றார். (ற)

# மஹிந்த வந்தால் தேசிய அரசு சாத்தியமில்லை

## அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அடிப்படை வாதிகளும் திருடர்களும் புதிய நாடாளுமன்றத்துக்கு தெரிவானால், தேசிய அரசு அமைக்கும் எமது திட்டம் ஒரு போதும் சாத்தியமாகாது. தேர்தலில் மஹிந்த போட்டியிட்டு வெற்றியீட்டினாலும் எதிர் கட்சி ஆசனத்திலேயே அவர் அமர்வார்.– இவ் வாறு நிதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவருமான ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்குவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. இவ் வாறான சதித்திட்டங்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு போதும் உடன்படமாட்டார். எமது நம்பிக்கைகளுக்கு மாறாக மஹிந்தவுக்கு அவர் வேட்புமனு வழங்குவாரேயானால் 63 இலட்சம் மக்களுக்கு துரோகம் இழைத்தவராக வரலாற்றில் பெயர்பதிப்பார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. எனினும் இது தொடர்பில் இதுவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ தீர்மானம் எடுக்கவில்லை. இது குறித்தான உத்தி யோகபூர்வ முடிவுகள் வெளி வந்ததன் பின்னரே கலந்துரையாட முடியும்.

இந்தநிலையில் மக்களால் நிராகரிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக வரமுனைவது ஊழல் மோசடி குற்றச்சாட்டிலிருந்து தனது குடும்பத்தையும் அணியினரையும் பாதுகாக்கும் ஒரே நோக்கத்துடன் ஆகும். இவ்வாறான சதித்திட்டங்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் உடன்படமாட்டார். எனினும் எமது நம்பிக்கைகளுக்கு எதிர் மாறாக மஹிந்தவுக்கு அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்புமனு வழங்குவாரேயானால், தனக்கு வாக்களித்த 63 இலட்சம் மக்களுக்குப் பெரும் துரோகம் இழைத்தவராக வரலாற்றில் பெயர்பதிப்பார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கப்பட்டு, சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக அவர் தெரிவு செய்யப்படுவாராக இருந்தால் புதிய நாடாளுமன்றத்தில் தேசிய அரசு அமைப்பதற்கு எம்மால் முடியாமல் போகும்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட திருட்டுக் கும்பல்களுடன் நாம் எந்தவொரு தொடர்பையும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் உடன்படாது. நாட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையிட்ட மோசடிக் காரர்களுக்கு வேட்புமனு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முனைய கூடாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட திருடர்களாலும், அடிப்படைவாத கொள் கையை கொண்ட குடும்பத்தவர் களினாலும் உருவாகும் புதிய நாடாளுமன்றத்தில் தேசிய அரசு அமைக்கும் எமது திட்டம் ஒரு போதும் சாத்தியமாகாது. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி துணை போகாது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது அணியினரும் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து மீளவும் குடும்ப ஆட்சிக்கு வலுசேர்க்கும் வகையிலேயே செயற்படவுள்ளனர். இருந்தபோதிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட் புமனு வழங்கப்பட்டு தேர்தலில் போட்டியிட்டாலும் எதிர்க்கட்சி ஆசனத்தி லேயே அமர்வார். – என்றார். (ற)

உதயன் செவ்வாய்க்கிழமை | ஜூலை 07 | 2015

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பரந்த மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய நுட்பம் மூலம் இலாபம் அதிகரிக்கும். மனைவி விரும்பியதை வாங்கிக் கொடுப் பீர்கள். அரசியல்வாதிகள், மக்கள் மத்தியில் நற்பெயர் பெறுவர்.

**இடபம்:** நண்பர்கள் மத்தியில் பாராட்டைப் பெறுவீர்கள். மனதில் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில், இலாபம் பன்மடங்கு உயரும். வீடு, வாகன, பராமரிப்பு பணி செய்வீர்கள். பிள்ளைகள் வழியில், ஆடம்பரச் செலவு உண்டாகும்.

**மிதுனம்:** பிறருக்கு உதவி செய்வதால், சிரமம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். அத்தியாவசியச் செலவுக்கு, கடன் வாங்க நேரி டும். மின்சார உபகரணங்களைக் கவனத்துடன் கையாளவும்.

**கடகம்:** பொது விடயத்தில், தலையிடுவதைத் தவிர்க்க வும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். மனைவியின் கருத்தை ஏற்பது, நன்மை பெற வழிவகுக்கும்.

**சிங்கம்:** நண்பர்களுடன் பழைய விடயங்களைப் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் பன்மடங்கு உயரும். உறவினர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** சிறிய முயற்சியில் கூட, அதிக நன்மை காண்பீர்கள். விலகிச் சென்ற நண்பர்கூட, உங்களைத் தேடி வருவார். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்:** மனதில், நேர்மை எண்ணம் மேலோங்கும். பிள்ளைகள் வழியில், ஆடம்பரச் செலவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில், மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** நண்பரிடம், அதிக எதிர்பார்ப்புடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், குளறுபடி ஏற்பட்டு மறையும். இலாபம் சுமார். குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு:** எதிர்கால வளர்ச்சி குறித்த சிந்தனை மேலோங் கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். வழக்கு விவகாரத்தில், சாதகமான தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** யாரிடமும், வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில், பணிச்சுமை ஏற்பட்டாலும், இலாபம் குறையாது. திடீர்ச் செலவுக்காக, கடன் வாங்கும் சூழல் உருவாகும்.

**கும்பம்:** உங்கள் மீது, பலரும் நல்ல எண்ணம் கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு மனதுக்கு மகிழ்ச்சியளிக்கும். விருந்து, விழா என்று சென்று வர வாய்ப்புண்டு.

**மீனம்:** சுய அந்தஸ்தை பாதுகாப்பதில், அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த பணிமாற்றம் கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பார்கள்.

## முதலைக்கு முத்தம் கொடுத்தால் வேலை

முதல் முறையாக வேலைக்கு ஆள்களைச் சேர்க்க சீனாவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் வியப்பூட்டும் ஒரு சோதனையை நேர்முகத்தேர்வில் அறிமுகப்படுத்தியுள்ளது.

சீனாவில் உள்ள காங்டான் மாகாணத்தில் சுகாதாரப் பொருள்களை விற்கும் நிறுவனம் ஒன்று செயற்பட்டு வருகிறது. இந்தநிறுவனம் முதலைகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் சுகாதாரப் பொருள்களை விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. தனது நிறுவனத்தில் 9 விற்பனைப் பிரதிநிதிகளை பணியில் அமர்த்த திட்டமிட்ட அந்த நிறுவனம், அதற்கான நேர்முகதேர்வு ஒன்றையும் நடத்தியது.

இதை கேட்டு வேலையில் சேரும் ஆர்வத்துடன் குவிந்த பலர், வாசலில் உயிரோடு வைக்கப்படிருந்த ஒரு முதலையை ஆர்வத்துடன் பார்த்தவாறு கடந்து சென்றனர். பின்னர் உள்ளே சென்ற பிறகுதான் அவர்களுக்குத் தெரிந்தது. நேர்முகத்தேர்வின் முதல் படியே உயிரோடு இருக்கும் அந்த முதலைக்கு முத்தமிடுவது என்பதுதான்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்களுக்கு ஒரே ஒரு விடயம் மாத்திரம் ஆறுதல் அளிக்கும் விடயமாக இருந்தது. முதலையின் வாய்ப்பகுதி கட்டப்பட்டிருந்தது. இந்த முதல் சுற்றில் முதலைக்கு தைரியமாக முத்த மிடுபர்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவது மட்டுமல்லாமல், ஆயிரம் யுவான் பரிசுத்தொகையாக பெற முடியும். இருந்தாலும் பல பெண்கள் இந்த சோதனைக்கு முன்வரத் தயங்கினர்.

அதேநேரத்தில் ஆண்கள் பலர் மிகுந்த தைரியத்துடன் முன்வந்தனர். ஆனால், பெண்களை மாத்திரமே பணிக்கு எடுப்பதாகக் கூறிய நிறுவனம், ஆண்களை பங்கேற்கவிடவில்லை.

முதலையில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்களிலையே தங்க ளுடைய சுகாதாரப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதால் பணிக்குத் தேர்வு செய் யப்படுபவர்கள் முதலையின் மீதான அச்சத்தில் இருந்து வெளிவரவே இதுபோன்ற சோதனைகள் நடத்தப்படுவதாக நிறுவனம் விளக்கமளித் துள்ளது.

சீனாவில் முதலையின் இறைச்சியில் சிறப்புமிக்க சுகாதாரப் பயன்கள் இருப்பதாக சில பகுதி மக்கள் நம்புகின்றனர். சுவைமிக்க உணவு பொரு ளாகவும் முதலையின் இறைச்சியை அங்குள்ள மக்கள் உட்கொள்கின் றனர். மேலும், முதலையின் பித்தம் ஆஸ்துமா உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் சிறந்த மருத்துவப் பொருளாகப் பயன்படுத்தப் படுகின்றமை குறிப் பிடத்தக்கது.





## புலி இசை வெளியீடு அடுத்த மாதம்

சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடித்திருக்கும் புலி படத்தின் இசை, ஓகஸ்ட் 2 ஆம் திகதி சென்னையில் வெளியிட இருக்கிறார்கள்.

சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடித்திருக்கும் படம் புலி. ஸ்ரீதேவி, ஹன்சிகா, ஸ்ருதிஹாசன், சுதீப் உள்ளிட்ட பல்வேறு நட்சத்திரங்கள் விஜயயோடு நடித்திருக்கிறார்கள். தேவி ஸ்ரீபிரசாத் இசையமைத்து வரும் இந்தப் படத்துக்கு நட்ராஜ் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். பி.டி.செல்வகுமார் மற்றும் தமீன் பிலிம்ஸ் இணைந்து தயாரித்து வருகிறார்கள்.

இந்தப் படத்தின் முழுப் படப்பிடிப்பும் முடிந்து, தற்போது இறுதிக் கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ஓகஸ்ட் 2 ஆம் திகதி இந்தப் படத்தின் இசையை பிரம்மாண்டமாக வெளியிட படக்குழு முடிவு செய்திருக்கிறது.

விஜய் ரசிகர்கள் பலரும் பங்கேற்பார்கள் என்ற காரணத்தால் சென்னையில் பிரம மாண்டமான இடமொன்றை ஏற்பாடு செய்ய அனுமதி கேட்டு வருகிறார்கள்.

## இப்படிப் பண்றீங்களேம்மா ?



தற்போது புதுயுகம் தொலைக்காட்சியில், வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கிண்டலடித்து இப்படிப் பண்றீங்களேம்மா? என்ற நிகழ்ச்சியை தயாரித்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் விஜய் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத்தான் அதிகமாக கிண்டலடித்து இருக்கின்றனராம். உங்களில் யார் அடுத்த பிரபுதேவா?, சூப்பர் சிங்கர், கோபி வித் டிடி ஆகிய நிகழ்ச்சிகளையும், மானாட மயிலாட நிகழ்ச்சியையும் கிண்டலடித்து இருக்கின்றனராம்.

ஒவ்வொரு ஞாயிறு அன்றும் மு.ப. 10 மணிக்கு இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாக உள்ளது. அரவிந்தராஜ், விக்னேஷ், சபரி ஆகியோர் இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகின்றனர். பேசாமல் லட்சுமி ராமகிருஷ்ணனையே இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க வைத்திருக்கலாமே?

## இயற்கை நீச்சல் தடாகம்

எரிமலைகள் நிறைந்த சமோவா தீவிலுள்ள நீச்சல் தடாகமானது, உலகிலேயே மிகவும் பெரிய இயற் கையான நீச்சல் தடாகமாகக் கருதப்படுகிறது.

சமோவாவின் உபொலு தீவின் தென் கடற் கரையிலுள்ள லொதோபகா கிராமத்தில் அமைந் துள்ள இந்த ரு சுவா சமுத்திர அகழி நீச்சல் தடாகம் பெரிய துவாரம் என அழைக்கப்படுகிறது.

அந்தத் தீவுப் பிராந்தியத்திலுள்ள எரிமலை யொன்று குமுறியதில் நில மேற்பரப்பு புதைந்து உருவான 98 அடி ஆழ மான குழியே இவ்வாறு நீச்சல் தடாகமாக மாறி யுள்ளது.

இந்த நீச்சல் தடாகத்தில் நீந்துவதற்கு வயதுவந்த வர்களுக்கு 10 ஸ்ரேலிங் பவுணும் சிறுவர்களுக்கு 6 ஸ்ரேலிங் பவுணும் கட்டணமாக அறவிடப் படுகிறது.

ஆனால் 7 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு இந்த நீச்சல் தடாகத்தைப் பயன்படுத்த எந்தவித கட் டணமும் அறவிடப்படுவ தில்லை.



# செயலாளர்கள் நியமனங்கள் இனி நேர்முகத் தேர்வுமூலமே

கொழும்பு, ஜூலை 7

மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களை நியமனம் செய்யும்போது இனிமேல் நேர்முகத் தேர்வுகள் மூலம் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதென அரச நிர்வாக, உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் ஜனநாயக நிர்வாகம் சம்பந்தப்பட்ட அமைச்சு தீர்மானித்துள்ளது.

இன்று வரையிலும் அத்தகைய உயர்மட்ட பதவிகள் தொடர்பாக அதிகாரிகளைத் தெரிவு செய்து கொள்வதில் துறைசார்ந்த அமைச்சரின் பரிந்துரைக்கு அமைய அமைச்சரவை உப செயற்குழுவின் அனுமதி மாத்திரமே பெறப்பட்டு வந்தது.

அத்தகைய அரசியல் நியமனங்களின் காரணமாகவே ஒருவிதத்தில் அரச சேவைக்குப் பொருத்தமற்ற தகுதியற்றவர்கள் பதவிகளில் இருப்பதாகவும் அந்தப் பதவிகளின் கௌரவத்தைப் பேணிப் பாதுகாத்து மக்களுக்கு நலன் பயக்கும் சேவையை வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அதற்கமைய, அமைச்சின் கீழ் நிலவும் சிறிலங்கா பொறியியல் சேவை, விஞ்ஞான சேவை, கட்டடக்கலை சேவை, தொழில்நுட்ப சேவை கணக்காய்வாளர் சேவை உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகளில் நியமனங்கள் மேற்கொள்ளப்படும் போது, நேர்முகத் தேர்வுகளை நடத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ற-22)

## அபேட்சகர் நியமனப் பத்திரம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைக்காக வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை குறித்த பத்திரங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும்– குறித்த பத்திரங்களை குறித்த தினங்களில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 வரை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் – வலிதென்மேற்கு பிரதேச செயலர் தேர்தல் அதிகாரி திருமதி.உ.யசோதா தெரிவித்துள்ளார்.

அத்துடன், 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை வேட்பாளர் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யலாம் எனவும் நியமனப் பத்திரங்களை மீளப்பெறும் காலஎல்லை எதிர்வரும் 30ஆம் திகதி மு.ப 9 மணிமுதல் 12 வரையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

## மேட்டுநில பயிர்ச் செய்கைக்கு ஊக்குவிப்பு நிதி

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஐ.எல்.ஓ. நிறுவனத்தில் முல்லை மாவட்ட கிழக்கு ஒருங்கிணைந்த பண்ணையாளர் சங்கத்துக்கு மேட்டுநிலப்பயிர்ச் செய்கைக்கான ஊக்குவிப்பு நிதியாக ரூபா 17 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர் சங்கத் தலைவர் த.சுப்பிரமணியம்தெரிவித்துள்ளார்.

இந்த நிதியில் மரக்கறி உற்பத்திக்கு 10 ஆயிரம் ரூபாவும் தானியப் பயிர்ச்செய்கைக்கு 7 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. தற் போது முதற்கட்டக் கொடுப் பனவாக உற்பத்தியாளர் ஒரு வருக்கு ரூபா 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளன. (ற-500)

## மாட்டுடன் மோ.சைக்கிள் மோதியதில் ஒருவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 7

வீதியைக் கடந்த பசு மாட்டை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சம்பவ இடத்தில் மாடு சாவடைந்தது. மோட்டார் சைக்கிளோட்டிக்கு பலத்த காயமேற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கைதடி ஏ – 9 வீதியில் இடம் பெற்றது.

காயமடைந்த கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த ஞானசேகரன் காந்தரூபன் ( வயது –36 ) என்பவர் சாவகச்சேரி ஆதாரமருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். (ற-9)

## கலைத்துளி நிகழ்வு இன்று

வவுனியா, ஜூலை 7

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒழுங் கமைப்பிலும் வழிப்படுத்தலிலும் வவுனியா பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள கலைத் துளி என்னும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் கா. உதயராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

அதில், 'பறக்கத்துடிக்கும் பட்டாம் பூச்சிகள்' என்னும் தொலைக்காட்சி நாடகம், ஓவியக்கண்காட்சி, வாழ்க்கை ஒரு பொய் பாடல் காட்சிப்படுத்தல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. செ. வனஜாவும், சிறப்பு விருந்தினர்களாக உப தலைவர் கலாசார பேரவை, கலாநிதி தமிழ் மணி அகளங்கன், சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் அருணா செல்லத்துரை. வவுனியா ஸ்ரீ நாகராஜா வித்தியாலய அதிபர் சி. வரதராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-421)

## கும்பாபிஷேக தின சங்காபிஷேகம்

சுழிபுரம், ஜூலை 7

பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. சங்காபிஷேகச் சிறப்புப் பூசைகள், ஊஞ்சல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்று, அன்னதானம் நண்பகல் நடைபெறும். பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் கிராம மக்களின் அன்பளிப்புடன் இந்த நிகழ்வுகள் நடைபெறும். (ற-28)

## 50 வருட ஆசிரிய சேவை பொன்விழாவுக்கு ஏற்பாடு

வலி.மேற்கு, ஜூலை 7

வலி.மேற்கில் 50 வருட –முன்பள்ளி ஆசிரியர் சேவையை வினைத்திறனாக மேற்கொண்ட ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்துவுக்கு வலி.மேற்கு சமூகம் திரண்டு பொன்விழா எடுக்கவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை சித்தன்கேணி மாதர் சங்க பாலர் பாடசாலை முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி வாசுகி உமாபதி சர்மா மேற்கொண்டுள்ளார்.

மேற்படி பொன்விழா தொடர்பாக முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி வாசுகி உமாபதி சர்மா மேலும் தெரிவிக்கையில்;

முன்பள்ளி ஆசிரியர் சேவையில் எவரும் 50 வருடங்களைப் பூர்த்தி செய்ததாக வரலாறு இல்லை.

ஆனால் வலி.மேற்கில் சித்தன்கேணி மாதர் சங்க பாலர் பாடசாலை பொறுப்பாசிரியர் செல்வி லீலாவதி மாரிமுத்து தொடர்ச்சியாக 50 வருட ஆசிரியர் சேவையை முன்னிறுத்தி மிகச் சிறந்த சேவையை சமூகத்துக்கு ஆற்றியுள்ளார்.

இவரது சேவையை கௌரவிக்கும் முகமாக வலி.மேற்கில் உள்ள சகலரது ஒத்துழைப்புடன் பொன் விழாவை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம்.

பொன்விழா காணும் முன்பள்ளி ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்து இதுவரை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்விப் போதனை வழங்கி சாதனை படைத்துள்ளார்.

இவரது சிறந்த போதனைக்காக வீணாகான நிறுவனத் தலைவர், மாநகர விருது சாதனையாளர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் ஞானரத்தினம் எனும் உயர் விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார். வலி.மேற்கு பிரதேசசபை தவிசாளர் திருமதி நா.ஜங்கரன் வலி.மேற்கின் சிறந்த ஆசிரியருக்கான கௌரவ விருதை ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்துவுக்கு வழங்கி கௌரவித்துள்ளார். (ற-50)


### பதவி வெற்றிடம்

பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் கீழ் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. மடைப்பள்ளி உதவியாளர்:**

சைவ உணவு உண்பவராகவும், சமயப்பிரவேசம் (தீட்சை) பெற்றவராகவும் ஆசாரசீலராகவும் இருக்க வேண்டும்.

**2. முகாமைத்துவ உதவியாளர்:**

க.பொ.த உயர்தரம் வணிகத்துறை தராதரம் பெற்றிருக்க வேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**கொடுப்பனவு பேசித்தீர்மானிக்கலாம்.**

முகவரி, தொலைபேசி இலக்கம், கல்வித்தராதரம், நற்சான்று பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

**தொடர்புகளுக்கு:**

**தலைவர்**
**பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம்**
**இல.151, குமரபுரம், பரந்தன்.**

**தொலைபேசி: 077 8339665**

**விண்ணப்ப முடிவு திகதி : 14.07.2015** (57150) (10.6)

### ஒப்பந்த வேலைக்கு கூறுவிலை கோரல்

குஞ்சுப்பரந்தன், பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. விவரங்களையும், விண்ணப்ப படிவத்தையும் ஆலய முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வேலை விவரம்:

1. உள்வீதி சுற்று மண்டபம் அமைப்பதற்கான தூண்கள் கட்டுதல்.
2. அன்னதான மடத்தின் முன்புறத்தில் உள்ள 'பிளாற்' (Slap) றின் மேலாக இரு அறைகள் அமைத்தல்.
3. அன்னதான மடத்துக்கு 'பில்லர்' வர்ணம் பூசி அழகு படுத்தல்.

**தொடர்புகளுக்கு:**

**முகாமையாளர்**
**குஞ்சுப் பரந்தன்**
**பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம்**

**தொடர்பு தொலைபேசி: 077 8339665**

**விண்ணப்ப முடிவு திகதி : 31.07.2015** (57151) (10.6)

### தேர்தல்கள் திணைக்களம்

**பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2015.08.17**

**கட்சிகள் சுயேட்சைக்குழுக்கள் சார்பாக போட்டியிடுகின்ற வேட்பாளர்கள்**

- போட்டியிடுகின்ற ஏதேனும் அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேட்சைக் குழுவொன்றினால் பேணப்பட்டு வருகின்ற தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் வேறு கட்சிகளுக்கான அல்லது வேறு கட்சியொன்றின் வேட்பாளருக்கான பிரச்சார அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட முடியாது அதாவது ஏதேனும் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் தேர்தல் பிரச்சார அலுவலகங்களில் வேறு கட்சிகளின் தேர்தல் சின்னங்கள், வேறு கட்சிகளின் வேட்பாளர்களின் பெயர்கள், உருவப்படங்கள், விருப்பு இலக்கங்கள் என்பன காட்சிப்படுத்த முடியாது.
- ஏதேனும் கட்சியொன்றிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவொன்றிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு வேறு கட்சியொன்றின் அல்லது குழுவொன்றின் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் / வாக்கெண்ணல் முகவர்களாளச் செயற்பட முடியாது.
- ஏதேனும் கட்சியொன்றிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவொன்றிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவருக்கு வேறு கட்சியொன்றை ஊக்குவிப்பதற்கு அல்லது தனது கட்சியை/குழுவைச்சாராத வேட்பாளர்களை ஊக்குவிப் பதற்காக பிரச்சார அலுவல்களை மேற்கொள்வதற்கு ஊடக அறிவித்தல்களை வெளியிடுவதற்கு அறிவித்தல்களைப் பிரசுரிப்பதற்கும் முடியாது.
- பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை போதாமை காரணமாக ஏதேனும் கட்சியொன்றுக்கு அல்லது குழுவொன்றுக்கு உறுப்பினர் பதவிகள் கிடைக்கவில்லையெனில், அக்கட்சியின் அல்லது குழுவின் விருப்புக்கள் எண்ணப்பட்டதன் பின்னர், அக்கட்சியின்/குழுவின் முகவர்கள் வாக்கெண்ணல் மண்டபங்களிலிருந்து வெளியேற்றப்படுவதால் வேறுகட்சிகளின் விருப்பெண்ணலைக் கண்காணிப்பதற்கு அவ்வாறான குறைந்த எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் உண்மையாகவே போட்டியிடாத கட்சிகள் / குழுக்களின் முகவர்களுக்கு சந்தர்ப்பமொன்று கிடைக்கமாட்டாது.
- ஆதலால், உண்மையாகவே போட்டியிடுகின்ற எதிர்பார்ப்பின்றி அதாவது வேறு அரசியற் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களூடாக வேட்புமனுக் கையளிப்பதன் மூலம் எதிர்பார்த்தவாறு வேறு கட்சியொன்றுக்கு அல்லது வேறு கட்சி வேட்பாளரொருவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு எவ்வித சாத்தியமொன்றும் கிடைக்கமாட்டாதென அவ்வாறு ஆதரவு வழங்கும் எதிர்பார்ப்போடு மாத்திரம் போட்டியிடுவதற்கு தயாராகவுள்ள அனைத்து தரப்பினருக்கும் தயவன்புடன் வலியுறுத்தப்படுகின்றது.


**மஹிந்த தேசப்பிரிய,**
**தேர்தல் ஆணையாளர்.**

2015.07.07 ஆம் திகதி
இராஜகிரியவில் அமையப்பெற்றுள்ள தேர்தல்கள் செயலகத்தில். (19084) (3.7.9)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த கொடை வள்ளல்

## எஸ்.பி.நடராசா



எமது அன்பிற்கும் பெருமதிப் பிற்குமுரிய தொழிலதிபர் மானிடம் போற்றும் கொடை வள்ளல் எஸ்.பி.நடராசா (அண்ணா தொழிலகம்) அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியில் உறைந்து போனோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

VSB Trading Company
பணிப்பாளர்களும், ஊழியர்களும்.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



# கண்ணீர் அஞ்சலி

## எஸ். பி.நடராசா



எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய தொழிலதிபர் எஸ்.பி.நடராசா (அண்ணா தொழிலகம்) அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

KANNAN STORES
159 Hospital Road,Jaffna.

N.P.K Traders
197, Keyzer Street
Colombo- 11


# பௌதிக வள பற்றாக்குறையால் திரவப்பால் உற்பத்தியில் சரிவு

கொழும்பு, ஜூலை 7

மனித வளங்கள் மற்றும் பௌதிக வளங்களுக்கு தற்போது நிலவிவரும் பற்றாக்குறையின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் தேசிய திரவப்பால் உற்பத்தி இலக்கு சரிந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதாக அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவரான வைத்தியர் பீ.எம். எம். ஏக்கநாயக்க தெரிவித்தார்.

உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய இந்த நாட்டு மக்களின் அன்றாடப் பாவனைக்கு ஆயிரத்து இருநூறு மில்லியன் லீற்றர் திரவப்பால் ஆண்டொன்றில் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ள ஏக்கநாயக்க ஆண்டொன்றில் தனிநபரொருவரின் பால் நுகர்வு அறுபது கிலோ கிராம்களாகியிருக்க வேண்டியுள்ளதாகவும், அந்த நிறுவனத்தின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டிருப்பினும் இன்று தனிநபரொருவரின் பால்நுகர்வு நாற்பத்தியிரண்டு கிலோ கிராம்களாகவே இருப்பதாகவும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் நுகர்வு மற்றும் திரவப்பாலின் நுகர்வு என்ற இவற்றைக் கவனத்தில் கொண்டு இந்த நாட்டின் நிபுணர்களினால் நாட்டின் வருடாந்த பால் தேவை 750மில்லியன் லீற்றர்கள் வரையிலானது என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளை முற்றாகவே இடைநிறுத்துவது தொடர்பாக உள்நாட்டு திரவப்பால் உற்பத்தியை உச்சப்படுத்த 365 நாள்களிலும் 24 மணி நேரமும் சேவையாற்றுவதற்கு அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள தலைவர் அது தொடர்பாக கால்நடை வைத்தியர்களுக்கு நிலவும் பற்றாக்குறை மற்றும் ஏனைய பதவிகளுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் அலுவலக வசதிகள், வாகனங்கள் மற்றும் எரிபொருள் வசதிகள் உத்தியோகபூர்வ விடுதி வசதிகள் போன்றவற்றைப் பெற்றுக்கொடுக்க அரசு தலையிட்டு செயற்பட வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் அலுவலகமொன்று தொடர்பாக கால்நடை வைத்தியர்கள் மூவரின் சேவை அவசியம் எனவும் அது தொடர்பாக இன்னமும் 350 – 400 பேர் வரையில் கால்நடை வைத்தியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியுள்ளதா கவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற–22)

# முன்பள்ளி விளையாட்டு விழா

தென்மராட்சி, ஜூலை 7

வரணி வடக்கு ஸ்ரீ கௌரிபாலன் சைவப்பிரகாச முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் வரணி சைவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக அனுசரணையுடன் நடைபெற்ற விளையாட்டு விழா முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் கு.இளங்குமரன் தலைமையில் இடம்பெற்றது.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக வரணி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் வை.விஜயகுமாரனும், சிறப்பு விருந்தினராக கிராம அலுவலர் கே.பரமானந்தமும் கௌரவ விருந்தினர்களாக பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க தென்மராட்சி கொத்தணி முகாமையாளர் ப.அருட்செல்வன் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட தலைவர் லயன் த.இரவீந்திரன் இலங்கை மனித உரிமைகள் இயக்கத்தின் மாகாணச் செயலாளர் கா.இராஜதுரை லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் ச.செந்தூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற–9)


# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணத்தின் பிரபல தொழிலதிபரும், சமூகசேவையாளரும் எமது மன்றத்தின் சிரேஷ்ட அங்கத்தவருமான அண்ணா தொழிலக உரிமையாளர்

பொ. நடராசா

அவர்களின்பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.


தலைவர்,பணிப்பாளர் சபை,
அங்கத்தவர்கள் மற்றும்
உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம்
வர்த்தக தொழிற்துறை மன்றம்.

(18647)(3.7.9)



# கண்ணீர் அஞ்சலி

## எஸ்.பி.நடராசா



நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும்
நிலைத்து வண்ணமலர்
வாசமென
மனங்களிலே வீசி
நின்றீரே!
கண்ணிமைக்கும்
காலத்துள்
காலனுமைக் கவர்ந்து
சென்ற
கொடுமையை எண்ணி
மனம் வெதும்பியே
வாடுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
அண்ணா தொழிலக
ஊழியர்கள். (c 16641)

# பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிராக தீவிர விசாரணை



கொழும்பு, ஜூலை 7

பெருமளவு தரகுப் பணம் பெற்றமை தொடர்பில் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் மீது நிதிமோசடி தடுப்பு பொலிஸார் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

64 மில்லியன் ரூபா தரகுப் பணத்தை ரணதுங்க, 64 காசோலைகளாகத் தரவேண்டும் என்று கோரியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் காசோலைகள் ரணதுங்கவின் மனைவி மொரின் பெயருக்கும் உறவினர் ஒருவரின் பெயருக்கும் வரையப்பட்டிருந்தன.

பாதுகாப்பு கமராக்களை இறக்குமதி செய்யும் சிலிக்கொன் டெக்னோலோஜிஸ் நிறுவன பணிப்பாளர் கெஹாட் மெண்டிஸ் என்பவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு இணங்கவே பிரசன்ன ரணதுங்கவின் மீது விசாரணைகள் தொடர்கின்றன.

இதன் ஒரு கட்டமாக முதலமைச்சரின் மனைவி மொரினிடம் கடந்த வியாழக்கிழமையன்று பொலிஸார் 7 மணித்தியாலங்களாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

கொலன்னாவையில் தமது வியாபாரத்துக்காக சிலிக்கொன் நிறுவனம் காணி ஒன்றைக் கொள்வனவு செய்தது. இதற்காக அந்த பிரதேசத்தில் உள்ள சட்டவிரோத குடியேறிகளை அகற்றுமாறு சிலிக்கொன் நிறுவனம் மாகாண சபையை கோரியது.

இதற்கு அமைய சட்டவிரோத குடியேறிகளை அங்கிருந்து அகற்ற முதலமைச்சர் உதவியுள்ளார். அத்துடன் குறித்த சொத்தை மாதம் ஒன்றுக்கு 2.25 மில்லியன் ரூபா குத்தகைக்கும் அவர் வழங்கியுள்ளார்.

இதற்குக் கைமாறாக நிறுவனத்தின் விற்பனையில் 32 வீத இலாபத்தை தமது சார்பில் தமது மனைவி மொரின் மற்றும் உறவினரின் பெயருக்கு வழங்கவேண்டும் என்று உடன்படிக்கையை முதலமைச்சர் நிறுவனத்துடன் செய்து கொண்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள் ளது. (ற)

# சிறுவர் உரிமை சட்டங்களை தவறாக உபயோகிக்கின்றனர்

## அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சுட்டிக்காட்டு

திருகோணமலை, ஜூலை 7

சிறுவர் உரிமைச் சட்டங்கள் அவர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டனவே தவிர அவற்றைத் தவறாக பயன்படுத்துவதற்காக அல்ல. பாடசாலைகளில் மாணவர்கள் தவறு செய்கின்றபோது ஆசிரியர்கள் தண்டிக்கின்றனர். அதன்போது, சிறுவர் உரிமைச் சட்டங்கள் என்ற போர்வையினூடாக, தண்டனை வழங்கிய ஆசிரியருக்கெதிராக சிலர் செயற்பட முனைகின்றனர். – இவ்வாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் தெரிவித்தார்.

இந்து மாமன்ற ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட தமிழ்ப் பாடசாலைக்கிடையில் கடந்த வருடம் நடத்தப்பட்ட, சைவ சமயப் பரீட்சையில் சித்தியடைந்து முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்ற கட்டடத்தில், மன்ற தலைவர் வே.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கிய பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

குற்றம் செய்கின்றபோது மாணவர்கள்தண்டிக்கப்படவேண்டும்.சாதனை செய்கின்றபோது பாராட்டப்பட

**சிறுவர் உரிமைச் சட்டங்கள் அவர்களை பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டனவே தவிர, அவற்றைத் தவறாக பயன்படுத்துவதற்கல்ல.பாடசாலைகளில் மாணவர்கள் தவறுசெய்கின்றபோது ஆசிரியர்கள் தண்டிக்கின்றனர்.**

வேண்டும். அப்போதுதான் சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும்.

சிறுவர் உரிமைச் சட்டங்கள் அவர்களை பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டனவே தவிர, அவற்றினை தவறாக பயன்படுத்துவதற்கல்ல. பாடசாலைகளில் மாணவர்கள் தவறு செய்கின்றபோது ஆசிரியர்கள் தண்டிக்கின்றனர். இதன்போது, சிறுவர் உரிமைச்சட்டங்கள் என்ற போர்வையினூடாக, தண்டனை வழங்கிய ஆசிரியருக் கெதிராக சிலர் செயற்பட முனைகின்றனர். இந்த நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும்.

மேலைத்தேய நாடுகளில் உருவாக்கப்பட்ட இந்தச் சட்டம், எமது நாட்டிலும் ஊடுருவி சிறுவர்களின் சீரழிவிற்கு காரணமாக அமைகின்றது. அவ்வாறான செயற்பாடுகளே இன்று அதிகளவில் அரங்கேறுகின் றன.

குருவை மதிக்கின்ற மாணவ சமுதாயம் இன்று மறைந்து செல்கின்றது. இதற்கு பெற்றோர்களும் காரணமாக அமைகின்றனர். பிள்ளைகளை பெற்றெடுப்பதுடன் பெற்றோர்கள் நில்லாது, அவர்களை நல்வழிப்படுத்தி நற்பிரஜையாக வளர்த்தெடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

பரீட்சையை மையமாக கொண்ட கல்விமுறை மாற்றம் பெற்று, நல்ல விழுமியங்கள் உள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்கும் கல்விமுறை பின்பற்றப்பட வேண்டும். அவ்வாறான அறநெறிக் கல்வியைப் போதிக்கும் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் போன்ற அமைப்புக்களை பாராட்டவேண்டும். – என்றார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் உதாரண நாணயக்கார, மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் எஸ்.கனகரெத்தினம், மன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட னர். (ற)

# ‘திவிநெகும’ உத்தியோகத்தருக்கு சேமலாப நிதி வழங்க வேண்டும்

## அம்பாறை மாவட்ட திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 7

தொடர்ச்சியான நிரந்தர சேவையில் உள்வாங்கப்பட்ட திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஊழியர் சேமலாப கொடுப்பனவுகளை உடன் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனும் கோரிக்கையை அரசிடம் முன்வைக்க வுள்ளதாக தேசிய திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்க உபதலைவரும் அம்பாறை மாவட்ட திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவருமான ஐ.எச்.எ.வஹாப் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேச செயலக மகாசங்க கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் மாவட்ட நிர்வாக உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் உள்ளிட்ட சில கோரிக்கைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டு ஒரு சில மாதங்களில் திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஊழியர் சேமலாப கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் அமைச்சர் சஜித் பிரேமதாசவால் முன்னெடுக்கப்பட்டது. எனினும், அது திடீரென இரத்துச் செய்யப்பட்டமை ஏமாற்றம் அளிப்பதாகவும் அதனை வழங்குவதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்படவேண்டும் எனும் கோரிக்கை முன்வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள பிரதேச செயலகங்களில் சுற்றுநிருபத்துக்கமைவாக கள உத்தியோகத்தர்கள் மாதம் ஒருமுறை பிரதேச செயலகம் செல்லும்போது அம்பாறை மாவட்டத்தில் மட்டும் வாரத்துக்கு இருமுறையும், அதனையும் தாண்டி ஒரு சில பிரதேச செயலகங்களில் வாரத்தில் ஐந்து நாள்களுக்கும் கையொப்பம் இட பிரதேச செயலாளர்களால் பணிக்கப்பட்டிருக்கின்றனர். இது எந்தவகையிலும் நியாயமில்லை என்பதை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் மட்டும் முஸ்லிம் பிரதேசங்களில் வலய நாளாக வெள்ளிக்கிழமையை நடைமுறைப்படுத்துமாறு மாவட்ட திவிநெகும பணிப்பாளரால் அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனும் தீர்மானமும் இங்கு நிறைவேற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளில் திவிநெகும உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்படவேண்டும் என்பதுடன் முறையற்ற இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட வேண்டும் எனும் தீர்மானங்களும் அனைவரது ஆதரவோடும் நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் கூறினார். குறித்த தீர்மானங்கள் அடங்கிய மனுக்கள் ஜனாதிபதி, சமுர்த்தி அமைச்சின் செயலாளர், திவிநெகும திணைக்களப் பணிப்பாளர், மாவட்ட அரசாங்க அதிபர்கள் உள்ளிட்டவர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ற)

# புதிய நிர்வாக குழு தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மோகனதாஸ் சனசமூக நிலைய நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த மாதம் மட்டுவில் வடக்கு.அ.த.க.பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

புதிய நிர்வாகத் தெரிவின்போது தலைவராக சி.செல்வராசாவும், செயலாளராக வே.கிருஷ்ணனும், பொருளாளராக த.முரளிதரனும், காப்பாளர் சபை உறுப்பினர்களாக செ.தவராசா, சி.இதயராசா, கா.மகாதேவன், செ.ஜெய ராசா மற்றும் சு.சுதாகரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ற–ரி)

## மரண அறிவித்தல்

# பொன்னையா நடராஜா

**(தொழிலதிபர் - அண்ணா தொழிலகம், இணுவில்)**



இணுவில் தெற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நடராஜா (தொழிலதிபர் - அண்ணா தொழிலகம், இணுவில்) 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தில்லை நடராஜா - புஷ்ப மலர் தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் திவாகரன் (அண்ணா தொழிலகம், இணுவில்), அண்ணாதுரை (அண்ணா தொழிலகம், கொழு ம்பு), தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதா, தர்சினி, மதிமகன் (Civil Engineer) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சாரதாமணிதேவி, விவேகானந்தன் மற்றும் புனிதவதி, அன்னபூரணம், அன்னலட்சுமி, மகாலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் பேரின்பநாயகிதேவி, காலஞ்சென்ற நடராசா மற்றும் குலசிங்கம், செல்வ நாயகம், காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் ஸ்ரீஸ்கந்தவரோதயன் ஆகியோரின் மைத்துனரும் நந்திகா, பிரணவன், இராகவி, மதிதயனான் மதிதயனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நாளை (08.07.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணிக்கு தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி.16063) (9.7)

அண்ணா தொழிலகம், இணுவில்.
077 730 1207, 0779675599,
077 333 4860, 077 768 2265.

தகவல்:
குடும்பத்தினர்.

# வடக்கு, கிழக்கில் மக்களால் தோற்கடிக்கப்பட்டவர் மஹிந்த

## தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

"எமது தமிழ் மக்களைப் பார்த்து அன்று தோற்றுப் போனவர்கள் எனக் கூறிய மஹிந்த ராஜபக்ஷ, இன்று எமது மக்களினாலேயே தோற்கடிக்கப்பட்டுள்ளார்" என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவைசேனாதிராசா தெரிவித்துள்ளார்.

யாழ். தென்மராட்சி நவபுரம் முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-



"விடுதலைக்காக ஜனநாயக முறைப் போராட்டங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டபோது, உலகில் நடை பெற்ற போராட்டங்களைப் போல, இங்கும் ஓர் ஆயுதப் போராட்டம் இடம் பெற்றது. அந்தப் போராட்டத்தை அடக்கி, ஒடுக்கி விட்டேன் என்று கூறினார் மஹிந்த ராஜபக்ஷ. எமது மக்களைப் பார்த்து தோற்றுப்போன சமுதாயம் என்று சொன்னார். ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே அனைத்து ஜனநாயக சந்தர்ப்பங்களிலும் ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

மிகத் துல்லியமான சிந்தனையாளர்களாக – சிறந்த இராஜதந்திர ஆற்றல்உள்ளவர்களாக – அறிவுகொண்டவர்களாகஎமது மக்கள் மிகுந்த ஜனநாய கவாதிகளாக இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்" – என்றார்.

# மாணவர் கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஏழாலை மயிலங்காடு அபிவிருத்தி ஐரோப்பிய ஒன்றியத்தின் மாணவர் கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மயிலங்காடு அபிவிருத்தி ஒன்றியக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

மயிலங்காடு அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் திருமதி ரதி திருச்செல்வம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அதிபர் ரி.சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக ஏழாலை தெற்கு கிராம உத்தியோகத்தர் திருமதி சோமாயனி யசிந்தன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரபாலினி மயூரன், லண்டன் கிளை அபிவிருத்தி ஒன்றியச் செயலாளர் திருமதி புவனாம்பிகை உதயகுமார், மயிலங்காடு அபிவிருத்தி ஒன்றிய ஆலோசகர் பசுபதி சீவரத்தினம், இளைப்பாறிய ஆசிரியர் திருமதி கதிரமலைநாதன் நவமலர் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஆசிரியர் இ.சத்தியேஸ்வரன், ஸ்ரீமுருகன் வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் க.அபராசுதன், தலைமை ஆசிரியர் விஜிதா முத்துலிங்கம், மாதர் சங்கச் செயலாளர் திருமதி சசிகலாதேவி சிவராசா ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

நிகழ்வில் கடந்த ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பதினைந்து மாணவர்கள் கௌரவிக்கப்படுவதுடன் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்படவுள்ளன. மயிலங்காடு அபிவிருத்தி ஐரோப்பிய ஒன்றியம் இதற்கான உதவிகளை வழங்கியிருந்தது. (ற-7)


**சிறுநீரகம் தேவை**

25 வயது இளம் யுவதிக்கு O+ அல்லது B+ சிறு நீரகம் அவசரமாகத்தேவை நன்கொடையாக வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். 077 445 5899 தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தேவை**

கல்பேட், ஊர்ச்சேவல், பேடு என்பன தேவை. தொடர்பு
தாசன் பாம்
158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
077 3127498

**TV கள் மலிவு விற்பனை**

SONY Wega Flat TVகள் 14"-5500/=, 21"-9000/=, முதல் DVD-3250/=
குளிர்சாதனப் பெட்டிகள்- 19000/-
தொடர்பு: 077 044 0570
சோனிரேட் சென்ரர்
56,கே.கே.எஸ் வீதி ,கன்னாகம்

**பெயர் மாற்றம்**

சிவன்கோவிலடி, ஓட்டுசுட்டான் முல்லைத்தீவைச்சேர்ந்த நகுலேந்திரம் நஜீபன் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து நகுலேந்திரம் நிஷாந் எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
(81786)(3.7.9) ந.நிஷாந்

**முன்பள்ளி ஆசிரியர் தேவை**

கரணவாய் தெற்கு, விபுலானந்தர் முன்பள்ளிக்கு ஆசிரிய சேவையினை வழங்குவதற்கு ஆசிரியை உடன் தேவையாகவுள்ளது. க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், முன்பள்ளி டிப்ளோமாவுடன் ஆங்கில அறிவுடையவர்கள் 15.07.2015 திகதிக்கு முன் சுயவிவரக் கோவை யைத் தயாரித்து பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
முகவரி: தலைவர், விபுலானந்தர் முன்பள்ளி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.
T.P: 077 548 7125


# அற்ப சலுகைகளுக்காக சோரம் போகாது மு.கா.

## ஐ.எல்.எம்.மாஹிர் தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 7

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அபிவிருத்திகளுக்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் உருவாக்கப்பட்ட கட்சி அல்ல. முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சி என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகத்தின் பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான ஐ.எல்.எம்.மாஹிர் தெரிவித்தார்.

சம்மாந்துறை ஜம்இய்யத்துல் உலமா சபை கட்டடத்துக்கான நிதி கையளிக்கும் வைபவத்தில் ஏற்பாட்டாளர்களாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கமும் அதன் தலைமையும் இன்று இலங்கை வாழ் முஸ்லிம்களின் ஏகோபித்த அமைப்பாகவும் தேசிய அரசியலில் பேரம் பேசும் சக்தியாகவும் காணப்படுகின்றன. இவ்வாறான எமது தலைமைத்துவத்தின் சரியான வியூகத்தாலும் முடிவுகளினாலும் தேசிய அரசியலில் காத்திரமான முறையில் எமது சமூகம் வழிநடத்தப்படுகின்றது.

அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத சில தீய சக்திகளே எமது கட்சியியையும் எமது கட்சியின் தேசிய தலைமையையும் அவ்வப்போது விமர்சிக்கின்றன. எவ்வாறு விமர்சனம் செய்தாலும் முஸ்லிம் சமூகத் தின் மூச்சாக இருப்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமைத்துவமுமாகும்.– என்றார். (ற)

# பவளவிழாவும் பரிசுத் தினமும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

மஸ்கெலியா சென் யோசப் கல்லூரியின் 75 ஆவது வருட பவள விழாவும் கல்லூரி பரிசில் நாள் நிகழ்வும் நாளை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.பீ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வத்தன தேசிய கல்வியியல் கல்லூரி பிரதி அதிபர் வீ.ரி.செல்வராஜும், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவனும் வவுனியா பொது மருத்துவமனை பொறுப்பதிகாரியுமான மருத்துவர் கே.சந்திரகுமார், மத்திய மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் டி.எஸ்.சதீஸ், மத்திய மாகாண கல்வித் திணைக்கள தமிழ்ப் பிரிவு உதவிச் செயலாளர் ஏ.ஆர்.சத்தியேந்திரா, ஹற்றன் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பீ.ஜி. லக்ஸ்மிபிரபா, நிர்வாக அலுவலர் பீ. .ரங்கசாமி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஜூ.எம்.நஸீர் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சட்டத்தரனி ஏ.எஸ்.குமார், ஹற்றன் கல்வி வலய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நடேசன், ஓய்வுநிலை அதிபர் எஸ்.துரைசாமி, முன்னாள் ஆசிரியர் செ.சுப்பிரமணியம், கொழும்பு விவேகானந்தா கல்லூரி ஆசிரியர் கே.ஆர்.இராமையா ஆகியோரும் கலந்து கொள்வர். (ற-9)

# வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, ஜூலை 7

வல்வை கொத்தணி முன்பள்ளிகளின் 2015 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி நேற்று பிற்பகல் 2 மணியளவில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை கொத்தணிக்கு உட்பட்ட 8 முன்பள்ளிகள் இவ் விளையாட்டுப் போட்டியில் பங்கு கொண்டன. கொத்தணி முன்பள்ளி களில் நெடியகாடு கணபதி படிப்பகம், மதவடி விக்னேஸ்வர படிப்பகம், ஆதிகோவில் ஆதிசக்தி முன்பள்ளி, கெருடாவில் அம்பிகை முன்பள்ளி, மானங்கனை திருமகள் முன்பள்ளி, தொண்டமானாறு வளர்மதி முன்பள்ளி, தொண்டமானாறு பவானி முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகள் பங்கு பற்றின.

இவ்விளையாட்டுப் போட்டிகளின் தொடக்கமாக விருந்தினர்களை முன்பள்ளி மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் வரவேற்றமையைத் தொடர்ந்து, மங்கல விளக்கேற்றல், கொடியேற்றல் மற்றும் இறைவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் பாலகர்களின் பல்வேறு வகையான விளையாட்டுக்கள், வினோத உடை நிகழ்வுகள் ஆகியவற்றைத் தொடர்ந்து பாலகர்களின் இசையும் அசைவும் (உடற்பயிற்சி) நடைபெற்றன.

போட்டியில் வெற்றி பெற்ற பாலகர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பாலகர்களின் விளையாட்டுப் போட்டியை கண்டு களிப்பதற்கு பாலகர்களின் பெற்றோர்கள், சிறுவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள். (ற)

# விபத்தில் இறந்த சகோதரனின் உடலைப் பார்த்ததும் வலிப்பு

## மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் வெளிநாட்டிருந்து வந்தவர்

தென்மராட்சி, ஜூலை 7

விபத்தில் சாவடைந்த தமது சகோதரனின் சடலத்தைப் பார்த்த வெளிநாட்டிலிருந்து வந்தவருக்கு மயக்கம் ஏற்பட்டதுடன் வலிப்பும் ஏற்பட்டது. இதனைப் பார்த்த தாய்க்கும் மற்றொரு சகோதரனுக்கும் மயக்கம் ஏற்பட்டது. மயங்கிய நிலையில் மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று கொடிகாமம் தவசிகுளத்தில் இடம்பெற்றது.

கடந்த சனிக்கிழமை யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற மோட்டார் சைக்கிளில் அழைத்துச் செல்லப்பட்ட வேளையில் நாவற்குளிப் பாலத்திற்கு அப்பால் எதிரே வந்த வாகனத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் சம்பவ இடத்தில் சாவடைந்தார். மற்றவருக்கு கால் முறிந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு விபத்தில் சாவடைந்த அன்ரனிராஜ் டெனிஸ்லெனா (வயது -26) என்பவரின் சாவு தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். நீதிவானின் பணிப்பின் பேரில் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை யாழ். போதனா மருத்தவமனையில் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் நேற்றுமுன்தினம் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டது. வெளிநாட்டிலுள்ள இவரது சகோதரனான அன்ரனிராஜ் மைக்கல்ராஜ் என்பவருக்கு சகோதரனின் சடலத்தைப் பார்த்ததும் மயக்கம் ஏற்பட்டதுடன் வலிப்பு ஏற்பட்டது. இதனைப் பார்த்த இவர்களது தாயார் அன்ரனிராஜ் மதுரம் (வயது–49) மற்றும் மற்றொரு சகோதரரான அன்ரனிராஜ் சுரேஸ்காந்தன் (வயது–16 ) ஆகியோர் மயக்கமடைந்தனர்.

இந்த மூவரும் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ற-9)

# புலமைப் பரிசில் விசேட பரீட்சை

தென்மராட்சி, ஜூலை 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட பயிற்சிப் பரீட்சை இல. 5 இன்று நடைபெறவுள்ளது. (ற-9)


# போனைப் பார்த்து கத்துங்கள் சார்ஜ் ஏறிவிடும்



உங்கள் செல்போனில் சார்ஜ் தீர்ந்துவிட்டால் இனி கவலைப்பட வேண்டியதில்லை. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சாதனத்தை போனில் பொருத்திவிட்டு அதை பார்த்துக் கத்தினால் சார்ஜ் ஏறிவிடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.
ஸ்மார்ட் போன் வைத்திருப்பவர்களின் மிகப்பெரிய பிரச்சனை பற்றரி சார்ஜ் தீர்ந்து போவதுதான். இதைச் சமாளிப்பதற்கு பலர் இரண்டு போன்களைக் கையில் வைத்துக் கொண்டு அலைகிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உலகம் முழுவதும் பல ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.
அதன் விளைவாக ஜார்ஜியா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் காகித ஒலிவாங்கியைத் தயாரித்துள்ளார்கள். போனில் பொருத்தப்பட்டிருக்கும் இந்த ஒலிவாங்கியை நோக்கிச் சத்தமாக கத்தும் போது காகிதத்தில் அதிர்வு ஏற்பட்டு அதன் மூலம் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மின் ஆற்றலைக் கொண்டு செல் போனை சார்ஜ் செய்துகொள்ள முடியும். ஆனால் இந்த குறைந்த அளவிலான மின் ஆற்றலைக் கொண்டு முழு பற்றறியையும் சார்ஜ் செய்ய முடியாது.
உற்பத்தி செய்யப்படும் மின் ஆற்றலின் அளவானது ஒலிவாங்கியின் அளவை பொறுத்து மாறுபடும். தற்போது ஒரு சதுர மீற்றருக்கு 121 மில்லிவாட்ஸில் உற்பத்தி செய்யப்படுகிறது. தேவையில்லாமல் அதிக சத்தம் ஏற்படும் இடங்களில் இந்த வகையான ஒலிவாங்கியை வைத்து மின் உற்பத்தியிலும் ஈடுபடமுடியும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

## 144 கோடி

உலகின் மிகப்பெரிய சமூக வலைத்தளமாக பேஸ்புக் திகழ்கிறது. இந்த வலைத்தளத்தில் உலகமெங்கும் 144 கோடி பேர் பயனாளர்களாக உள்ளனர். குறிப்பாக இளைய தலை முறையினர் சாப் பிட மறந்தாலும் மறப்பார்களே தவிர, பேஸ்புக் வலைத் தளததுக்குச் செல்வதற்கு தவறுவதே இல்லை.
தற்போது பேஸ் புக்கின் கால் ஆண்டில் அதன் இலாபம் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. குறிப்பாக மொபைல் விளம்பரம் மூலம் இந்த வருவாய் கிடைத்துள்ளது. விளம்பரம் மூலம் 3.32 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது, கடந்த ஆண்டை விட பேஸ்புக் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 13 அதவீதம் அதிகரித்துள்ளது. உலகம் முழுவதும் 144 கோடி பேர் பேஸ்புக்கை பயன்படுத்துகின்றனர். மொபைல் மூலம் 125 கோடிபேர் பயனபடுத்துகின்றனர்.



இது குறித்து பேஸ்புக்கின் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் சுகசர்பெர்க் கூறும் போது இந்த ஆண்டில் நாங்கள் தொடர்ந்து எங்கள் சமூகத்துக்குச் சேவை செய்வதிலும் உலகை இணைப்பதிலும் கவனம் செலுத்துவோம் என்று கூறினார்.
பேஸ்புக் ஹலோ என்ற ஒரு புதிய மொபைல் அப்ளிகேஷன் பயன் பாட்டை வெளியிட்டுள்ளது. இந்த அப்ளிகேஷனில் யார் அழைக்கிறார்கள் என்பதை பேஸ்புக் மூலம் தேடி தெரிந்து கொள்ளலாம்.

# சுகாதார வைத்திய ஊழியர் திருமலையில் போராட்டம்

## நிரந்தர நியமனம் வழங்கக் கோரி

திருகோணமலை, ஜூலை 7
தொண்டர் அடிப்படையில் பணி புரிந்த சுகாதார வைத்திய ஊழியர்கள் தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி நேற்று திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சபைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த 12 வருடங்களாக தொண்டர் அடிப்படையில் பணிபுரிந்த சுகாதார வைத்திய ஊழியர்களுக்கு இதுவரையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லையெனவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் அடிப்படையிலும், இலஞ்சம் பெற்றும் நிரந்தர நியமனம் வழங்கப் படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.
மேலும் பலதடவைகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியிருக்கின்ற போதிலும் இதுவரை எந்தவிதமான பயனும் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)



நாற்று மேடையில் காணப்படும் 6 மாத தென்னம்பிள்ளையில் பாளை விரிந்த நிலையில் வந்துள்ளது. இந்த அதிசய சம்பவம் சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள து.கீர்த்திநாதன் என்பவரின் வீட்டில் நடந்துள்ளது. கடந்த டிசம்பர் மாதம் தேங்காய் நாற்றுப் போடப்பட்டு வளர்ந்த தென்னம்பிள்ளை ஒன்றிலேயே குருத்துப்பகுதியிலிருந்து பாளை விரிந்துள்ளது. இந்த அதிசயத்தைப் பெருமளவு மக்கள் பார்வையிட்டுவருகின்றனர். (ற-9)

# சம்பளத்தை அதிகரிக்கக் கோரி மெதுவான பணிப் போராட்டம்

## தோட்ட தொழிலாளர்களால் முன்னெடுப்பு

ஹற்றன், ஜூலை 7
மலையகத்தில் அனைத்து தோட்டத் தொழிலாளர்களும் சம்பளத்தை அதிகரிக்கக் கோரி மெதுவாக பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான இரண்டு வருட கூட்டு ஒப்பந்தம் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியோடு முடிவுக்கு வந்தது. அதனையடுத்து முதலாளிமார் சம்மேளனத்திற்கும் கூட்டு ஒப்பந்தத்தில் உள்ள தொழிற் சங்கங்களுக்கிடையிலுமான பேச்சு ஆரம்பிக்கப்பட்டது.
இதன் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கம்பனிகள் வழங்க வேண்டும் என கோரி கூட்டு ஒப்பந்தத்தில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தன.
நான்கு கட்ட பேச்சு நடைபெற்ற போதிலும் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் இதற்கு இணக்கம் தெரிவிக்காததையடுத்து நேற்று அனைத்து தோட்ட தொழிலாளர்களையும் மெதுவானபணிகளில் ஈடுபடுமாறு தொழிற் சங்கள் அறி வித்துள்ளன. (ற)

# கதிர்காமத்தை நோக்கிய பாதயாத்திரை ஆரம்பம்

இந்த மாதம் 17ஆம் திகதி இடம்பெறவுள்ள கதிர்காமம் கொடியேற்றத்தில் கலந்துகொள்வதற்காக மலையகத் தோட்டப்பகுதியில் உள்ள பக்தர்கள் 7ஆவது முறையாகத் தமது பாதயாத்தி ரையை நேற்று முன்தினம் ஆரம் பித்துள்ளனர்.
மஸ்கெலியா பகுதியிலிருந்து பக்தர்கள் நேற்று மாலை வேளையில் இந்த பாதயாத்திரையை ஆரம்பித்துள்ளனர். ஒரு நாளைக்கு 35 கிலோ மீற்றர் பாத யாத்திரையாக பயணிக்கும் இவர்கள் நுவரெலியா பண்டாரவளை, வெல்லவாய, புத்தல வழியாக 400 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்து இம்மாதம் 16ஆம் திகதி கதிர்காமத்தைச் சென்றடைவார்கள்.
பாத யாத்திரை செல்லும் பிரதான நகரங்களிலுள்ள கோவில் களிலும் விகாரைகளிலும் தங்குவதாக இவர்கள் தெரிவித்ததோடு கதிர்காமம் திருவிழாக்காலம் முடியும் வரை கதிர்காமத்தில் தங்குவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தனர். (ற)




கனடாவின் மார்க்கம் நகரில் மிஸ் தமிழ் கனடா–2015 ஆம் ஆண்டுக்கான போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அந்தப் போட்டியில் 14 இளம் போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். (ஐ)



## பிலிப்பைன்ஸ் படகு விபத்து; 61 பேர் சாவு

மணிலா, ஜூலை 7

பிலிப்பைன்ஸில் கடந்த வாரம் 196 பயணிகளுடன் சென்ற படகு கடலில் கவிழ்ந்த விபத்தில் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளது.

அந்த நாட்டின் லெய்டே மாகாணத்துக்குட்பட்ட ஓர்மோக் நகரில் இருந்து செபுவுக்கு கிழக்கே உள்ள காமோட்டெஸ் தீவுக்கு அந்தப் படகு சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் கடலில் வீசிய சூறாவளிக் காற்றில், திடீரென 27 மீற்றர் நீளம் கொண்ட அந்தப்படகு கடலில் மூழ்கியது. இதையடுத்து அங்கு விரைந்த கடலோரக் காவல்படை வீரர்கள் கடலில் விழுந்து உயிருக்குப் போராடியவர்களையும், சடலங்களையும் மீட்டனர். மேலும் அதில் பயணம் செய்த 18 பணியாளர்கள் உட்பட 145 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

உயிருடன் மீட்கப்பட்ட அனைவரும், ஓர்மோக்கைச் சுற்றியுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் படகு கடலில் மூழ்கியதற்கு ஊழியர்களின் கவனக் குறைவு மற்றும் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றியமை தான் காரணம் எனக் கூறப்படுகிறது. இதையடுத்து படகின் கப்டன், சிப்பந்திகள் மற்றும் படகின் உரிமையாளர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ஐ)

# மலேசியப் பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டு


## விசாரணைக்கு உத்தரவு

கோலாலம்பூர், ஜூலை 7

மலேசியப் பிரதமர் நஜீப் ரசாக் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அரச நிதியில் இருந்து அவரது சொந்த வங்கிக் கணக்குகளுக்கு 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பன்முக விசாரணை அமைப்புகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இடம் பெறும் சிறப்பு விசாரணை குழுவொன்று விசாரணை நடத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் ஊழல் தடுப்பு ஆணையம், மத்திய வங்கி, பொலிஸ் உயர் அதிகாரிகள் இடம் பெறுவர்.

இந்தக் குற்றச் சாட்டு நிருபிக்கப்படும் பட்சத்தில் ஊழலில் ஈடுப்பட்ட முதல் மலேசிய பிரதமர் என்ற அவப்பெயர் அவருக்கு ஏற்படும்.



இதற்கிடையே இந்த ஊழல் விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தை உடனே கூட்ட வேண் டும் என்று 2 எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. (ஐ)



## ஐரோப்பாவுக்கு நகரும் அனல்காற்று

பாரிஸ்,ஜூலை 7

பயங்கர அனல் காற்றுத் தொகுதி ஒன்று ஆபிரிக்காவில் இருந்து மேற்கு ஐரோப்பாவை நோக்கி நகர்ந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து போன்ற நாடுகளில் கடும் வெயில் வாட்டியெடுக்கும் என்று வானிலை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இன்று பிரான்ஸில் 40 டிகிரி செல்சியஸ் அளவுக்கும், நாளை ஸ்பெயினின் தெற்கு பகுதியில் 44 டிகிரி செல்சியஸ் அளவுக்கும் வெயில் கொளுத்தும் என முன்னறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்த வெப்பத்தைச் சமாளிப்பதற்காக அந்த நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக பொதுமக்களுக்காக குறிப்பாக வயதானவர்களுக்காகக் குளிரூட்டப்பட்ட திறந்தவெளி மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய அனல் காற்றால் ஏற்படும் வெப்பநிலை, கடந்த 2003 ஆம் ஆண்டு அந்த நாடுகளில் நிலவிய வெப்பத்தை விட அதிகமாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் அப்போது நிலவிய பயங்கர வெப்பத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆறு நாடுகளுக்கு மோடி சுற்றுப் பயணம்

## முக்கிய ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படும்

புதுடில்லி,ஜூலை 7

ரஷ்யா, கஜகஸ்தான் உள்ளிட்ட 6 நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்காக இந்தியப் பிரதமர் மோடி நேற்று டில்லியில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். இந்தச் சுற்றுப் பயணத்தின் போது அந்த நாடுகளுடன் முக்கிய ஒப்பந்தங்கள் கைச் சாத்திடப்படவுள்ளன.

பிரதமர் மோடி கடந்த ஓராண்டில் அமெரிக்கா, சீனா, பிரேஸில், பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட உலகின் 18 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். அப்போது அந்த நாடுகளுடன் பல முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

இந்த நிலையில் அடுத்தகட்டப் பயணமாக பிரதமர் மோடி உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், துர்க்மெனிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய 5 மத்திய ஆசிய நாடுகளுக்கும், ரஷ்யாவுக்கும் செல்லவுள்ளார். இந்த நாடுகள் அனைத்துமே இந்தியாவின் பாதுகாப்பு பிராந்திய வட்டத்துடன் தொடர்பு கொண்டவை ஆகும்.

ஒவ்வொரு நாட்டிலும் பிரதமர் 24 மணி நேரத்துக்கும் குறைவாகவே தங்கும் வகையில் அவருடைய பயணத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. டெல்லியில் இருந்து நேற்றுப் புறப்பட்டு உஸ்பெகிஸ்தான் நாட்டுக்கு செல்லும் பிரதமர் மோடி நாளையும் அங்கு தங்கியிருப்பார். அதன் பின்னர், அவர் 2 நாள் பயணமாக கஜகஸ்தான் செல்கிறார். தனது பயணத்தின் தொடர்ச்சியாக அங்கிருந்து ரஷ்யாவுக்குச் செல்லும் அவர் உபா நகரில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்கிறார். அப்போது பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார். பின்னர் அங்கிருந்து துர்க்மெனிஸ்தானுக்கும், அதன் பின்னர் கிர்கிஸ்தானுக்கும் சுற்றுப்பயணம் செய்யும் அவர் பயணத்தின் நிறைவு கட்டமாக தஜிகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்வார்.

தஜிகிஸ்தான் ஜனாதிபதி எமோமாலி ரஹ்மோனுடன் பரஸ்பர நலன் குறித்து விரிவான பேச்சுக்களை மோடி நடத்துவார்.

பிரதமரின் இந்தப் பயணத்தின்போது



மத்திய ஆசிய நாடுகள் அனைத்திலும், இராணுவம், பயிற்சி அளித்தல், திறன்வளர்த்தல், கலாசாரம், சுற்றுலா போன்ற துறைகளில் பல முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன.

மத்திய ஆசியாவில் உள்ள 3 நாடுகள் ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதியில் அமைந்தவை.இதனால் தீவிரவாதத்தை எதிர்த்தல், போதை மருந்துக் கடத்தலைத் தடுத்தல் போன்றவை தொடர்பாக இந்த நாடுகளும் ஒத்துழைத்துச் செயல்பட வேண்டும் என இந்தியா விரும்புகிறது. எனவே தனது சுற்றுப்பயணத்தின்போது மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி இது தொடர்பாக விரிவான பேச்சை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோன்று மத்திய ஆசிய நாடுகள் எண்ணெய் வளம் கொண்டவை. துர்க்மேனிஸ்தான் உலகில் அதிகமான இயற்கை வாயு வளத்தைக் கொண்டது. கஜகஸ்தான், எண்ணெய் உற்பத்தியில், உலகின் 4ஆவது மிகப் பெரிய நாடாக உள்ளது.

எனவே பிரதமரின் மத்திய கிழக்கு நாடுகளின் சுற்றுப் பயணத்தின் போது, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சினைகளில் ஒத்துழைத்து செயல்படுவது குறித்த பேச்சு முக்கியத்துவம் பெறும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்

## தப்பியோடிய தீவிரவாதி சுட்டுக்கொலை

ரியாத், ஜூலை 7

சவூதி அரேபியாவில் மெக்கா மாகாணத்தில் உள்ள டேய்ப் நகரில், உள்ள வீடொன்றில் ஐ.எஸ். தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக உளவுத் தகவல்கள் கிடைத்ததன் பேரில் அந்த வீட்டைப் பொலிஸார் சுற்றி வளைத்தனர். அங்கு 3 தீவிரவாதிகள் பிடிபட்டனர். ஏராளமான தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன. எனினும் ஒரு தீவிரவாதி மட்டும் தப்பியோடியுள்ளார்.

பின்னர் அந்தத் தீவிரவாதி ஒரு மறை விடத்தில் பதுங்கி இருப்பதாகப் பொலிஸாருக்குத் தெரிய வந்ததையடுத்து, பொலிஸார் அங்கு சென்று குறித்த நபரை சரணடையுமாறு கேட்டுள்ளனர். எனினும் தீவிரவாதி தப்பியோட முயன்ற பொழுது பொலிஸார் அவரைச்

உதயன்



# கோலாகலமாக நடைபெற்ற இளவரசியின் ஞானஸ்நான விழா

லண்டன்,ஜுலை 7
பிரிட்டனின் இளவரசி சார்லொட் எலிசபெத் டயானாவுக்கு ஞானஸ் நானம் வழங்கும் நிகழ்வு கோலா கலமாக நேற்று முன்தினம் நடை பெற்றது.
பிரிட்டன் இளவரசர் வில்லியம் கேட், மிடில்டன் தம்பதியினருக்கு கடந்த மே மாதம் 2 ஆம் திகதி பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அந்தக் குட்டி இளவரசிக்கு சார் லோட் எலிசபெத் டயானா என்று பெயர் வைத்தனர்.
இந்த நிலையில் சார்லோட்டுக்கு ஞானஸ்நானம் வழங்கும் நிகழ்வு சாண்டிரிநகமில் உள்ள செயிண்ட் மேரி மக்டலின் தேவாலயத்தில் நடைபெற்றது.
முன்னதாக இளவரசர் வில்லியம் தனது மனைவி கேட் மற்றும் மகன் இளவரசர் ஜோர்ஜ், மகள் இள வரசி சார்லொட் ஆகியொருடன் தேவாலயத்துக்கு வந்தார். அங்கு கூடியிருந்த ஏராளமான மக்கள் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.
முப்பது வருடங்களுக்கு முன்னர் புதிதாகப் பிறந்த தனது சகோதரர் ஹரியைப் பார்ப்பதற்காக இளவர சர் வில்லியம் அணிந்து வந்த உடை யைப் போலவே குட்டி இளவரசர் ஜோர்ஜ் அணிந்துவந்திருந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.
பின்னர் அவர்கள் தேவாலயத்தின் உள்ளே சென்றனர். அங்கு குட்டி இளவரசிக்கு ஞானஸ்நானம் வழங் கப்பட்டது.
இந்த நிகழ்வில் பிரிட்டன் மகாராணி உட்பட அரச குடும்பத்தினர் அனை வரும் கலந்துகொண்டனர். (ஐ)

# சீனாவில் கட்டடம் இடிந்து 9 பேர் சாவு: 42 பேர் மீட்பு

பீஜிங், ஜுலை 7
சீனாவில் காலணித் தொழிற்சாலை யொன்றின்கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.



அந்த நாட்டின் செஜ்ஜியாங் மாகா ணத்தில் உள்ள வென் லிங் நகரில் காலணி தயாரிப் பில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலை ஒன்றின் கட்டடம் நேற்று முன் தினம் திடீரென இடிந்து விழுந்துள் ளது. அதில் அந்தக் கட்டடத்தில் பணி செய்து கொண்டிருந்த 51 ஊழியர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். இது குறித்து தகவலறிந்தவுடன் விரைந்து வந்த மீட்புப் படையினர் 9 பேரை சடல மாக மீட்டனர். மேலும் 42 பேரை இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்டனர். படுகாயமடைந்த அனை வரும் மருத்துவமனையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள னர். ஆனால் அவர்களின் நிலை குறித்த தகவலை வெளியிட மருத் துவர்கள் மறுத்துவிட்டனர். (ஐ)

# கிரீஸ் நாட்டில் சிக்கன நடவடிக்கைக்கு பொது வாக்கெடுப்பு

ஏதென்ஸ், ஜுலை 7
பொருளாதார நெருக்கடிநிலையைச் சமாளிக்கும் வகையில் தற்போதை யதை மேலும் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளலாமா என்று நடத்தப் பட்ட வாக்கெடுப்பில் சிக்கன நடவடிக்கைக்கு கிரீஸ் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வாக்களித்துள்ளனர்.
ஐரோப்பிய யூனியன் நாடுகள் இணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியன. இந்தக் கூட்ட மைப்பில் 1981 ஆம் ஆண்டு கிரேக்க நாடும் இணைந்தது.
இந்தக் கூட்டமைப்பு நாடுகள் யூரோ நாணயத்தை அறிமுகப்படுத் தின. தனது நாட்டுப் பணத்தை கைவிட்டு யூரோ நாணயத்துக்கு மாறியமை கிரேக்கத்துக்கு சாதக மானதாக அமையவில்லை.
உள்நாட்டு உற்பத்தி குறைந்தது. விவசாயம் நலிந்தது. வருமானம் குறைந்ததால் நாடு கடும் நிதி நெருக்கடிக்கு உள்ளானது.
நிதிபற்றாக்குறையால் தவித்த போதும் 2004 ஆம் ஆண்டு தலை நகர் ஏதென்சில் மிகப் பிரமாண்ட மாக ஒலிம்பிக் போட்டியைக் கிரேக்க நாடு நடத்தியது. வருமா னத்துக்குத் திண்டாடும் போது கோடிக்கணக்கான பணத்தை ஒலிம் பிக் போட்டிக்கு செலவழிப்பது தேவைதானா? என்று நாடு முழு வதும் அப்போதே மக்கள் முணு முணுத்தார்கள்.
வருமானப் பற்றாக்குறையால் தத்தளித்த கிரேக்கத்துக்கு கடன் வழங்க பல நாடுகள் முன் வந்தன. ஐரோப்பிய யூனியன், மத்திய வங்கி, பன்னாட்டு நிதியம் ஆகிய வற்றில் வட்டிக்கு கடன் வாங்கி னார்கள். மாதம் தோறும் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் தவணைத் தொகையை தவறாமல் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அந்த நாடுகள் கடன் வழங்கியிருந்தன.
சொன்ன சொல் தவறாமல் கிரேக்க நாடும் மாதம் தோறும் தவணைத் தொகையை திருப்பிச் செலுத்தி



வந்தது. 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதையும் செலுத்த முடி யாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கி கடந்த 6 மாதங்களாகத் தள்ளாடி கொண் டிருக்கிறது. கிரேக்கம் கரை சேருமா? என்று உலக பொருளாதார நிபுணர் களெல்லாம் கவலையுடன் உற்று நோக்கிச் கொண்டிருக்கிறார்கள்.
5 ஆண்டுகளுக்கு முன்பு சர்வதேச அளவில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்ட போது கிரேக்கம் மிகவும் கஷ்டப்பட்டது. அதிரடியா கச் சில பொருளாதாரச் சீர்திருத் தங்களைக் கொண்டு வந்தது. வட் டியை அதிகரித்தல், ஓய்வூதியம், மாதச் சம்பளத்தைக் குறைத்தல், வங்கி ஏ.ரி.எம்.மில் 30 சதவீதம் மட்டுமே மீளப்பெற இயலும் எனப் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி யது. இந்த மாதிரி சீர்திருத்தங் களும் கைகொடுக்கவில்லை.
சர்வதேச நிதியத்திடம் வாங்கிய கடனை கடந்த முதலாம் திகதி திருப்பிச் செலுத்த முடியவில்லை. நிதி நெருக்கடியைச் சமாளிக்க முடி யாமல் அனைத்து வங்கிகளும், பங்குச் சந்தையும் உடனடியாக மூடப்பட்டன. ஏ.ரி.எம்.மில் பணம் இல்லாமல் பொதுமக்கள் தவிக் கிறார்கள்.
கடன் கொடுத்த நாடுகள் பொருளா தார நெருக்கடியை தவிர்க்க சில நடவடிக்கைகளை எடுக்கும்படி கிரேக்கத்துக்கு நிபந்தனை விதித் துள்ளன. இதன்படி அரச சம்பளத்தை வெகுவாக குறைக்க வேண்டும். வரியை உயர்த்த வேண்டும். மானி யங்களை நிறுத்த வேண்டும். இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தினால் நெருக் கடி தரமாட்டோம் என்று அந்த நாடுகள் தெரிவித்துள்ளன. ஆனால் நாட்டு மக்கள் இந்த நிபந்தனை களை ஏற்பார்களா? என்பதுதான் கேள்விக்குறி.
இதுபற்றி பொது மக்களிடம் நேற்று கருத்துக் கணிப்பு வாக் கெடுப்பு நடத்த பிரதமர் அலெக் சிஸ்டிப்ரஸ் உத்தரவிட்டார். அதன் படி நேற்று வாக்கெடுப்பு நடந்தது. இதுவரை எண்ணப்பட்ட வாக்கு களில் 61 சதவீத மக்கள் சிக்கன நடவடிக் கைக்கு எதிராக வாக்களித்துள்ள னர். இதனால் கிரீஸ், யூரோ நாண யத்தை இனிமேல் பயன்படுத்தாது என்றும், மேலும் ஐரோப் பிய யூனியனிலிருந்து வெளியே றும் எனவும் கூறப்படுகிறது.
கிரீஸ் நாட்டு மக்களின் இந்த முடிவு பற்றி ஐரோப்பிய யூனியன் நாடு கள் இன்று விவாதிக்கும் எனவும் கூறப்படுகிறது. (ஐ)

# இரண்டு நாள்களில் 200 பேர் சாவு

## போகோஹறாம் தீவிரவாதிகள் தாக்குதல்

அபுஜா,ஜுலை 7
நைஜீரியாவில் கடந்த இரண்டு நாள்களாக போகோஹறாம் தீவிர வாதிகள் மேற்கொண்டு வரும் தாக்குதல் சம்பவங்களில் சுமார் 200 பேர் கொல்லப்பட்டிருப்ப தாகத் தகவல் வெளியாகியுள்ளது.
கடந்த வாரம் போர்னோ பகுதியில் போகோ ஹறாம் தீவிரவாதிகள் தற்கொலைப் படைத் தாக்குதல் உட்பட பல்வேறு தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தனர்.
இந்த நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை இருசக்கர வாகனங்களில் வந்த 50 தீவிரவாதிகள் வீடுகளில் இருந்த நபர்களை எல்லாம் வெளியே இழுத்து வந்து சுட்டுக் கொன்றனர். வீடுகளுக்குத் தீ வைத்துள்ளனர். மேலும் மசூதி ஒன்றில் தற்கொலைப் படைத் தாக்குதலையும் நடத்தியுள் ளனர்.
அந்தத் தாக்குதல்களில் சுமார் 200 பேர் கொல்லப் பட் டிருக்கலாம் என்று கூறப்படு கிறது.



ஆண்கள், பெண் கள் மற்றும் சிறு மிகள் ஆகியோ ரைத் தங்கள் இயக் கத்தில் வலுக் கட் டாயமாக இணைத் துக்கொண்டுஅவர் கள் மூலமாக அந்தத் தாக்குதல் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இதுவரை சுமார் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோரை கொன்றிருக்கும் போகோஹறாம் இயக்கத்தை அழிக்க முயற்சிப்பதாகக் கூறி முக மது புஹாரி அந்த நாட்டின் ஜனா திபதியாக கடந்த மே மாதம் பதவி யேற்றார். அவர் பதவியேற் றதற் குப் பின்னர் இதுவரை சுமார் 450இற் கும் அதிகமானோர் போகோஹ ராம் தீவிரவாதிகளின் தாக்குதல் களால் கொல்லப்பட்டுள்ளனர்.
தங்கள் இயக்கத்தில் சேர விரும் பாத நபர்களைக் குறிவைத்து அந் தத் தாக்குதல் சம்பவங்கள் நடை பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.
இந்தத் தாக்குதல் சம்பவங்களை, 'மனிதத்தன்மையற்றதும், காட்டு மிராண்டித்தனமானதும் ஆகும்' என்று புஹாரி தெரிவித்துள்ளார்.(ஐ)

# அமெரிக்க விமானப்படைத் தாக்குத

## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் 16 பேர் சா

டமாஸ்கஸ், ஜுலை 7
சிரியாவில் அட்டூழியம் புரிந்து வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதி கள் பதுங்குமிடங்கள் மீது அமெ ரிக்க விமானப்படைகள் நடத்திய தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட 6 அப் பாவி பொதுமக்களும் 16 தீவிரவாதிகளும் உயிரிழந்துள்ளனர்.



சிரியா நாட்டில் உள்ள சில பகுதிகளைப் பிடித்து வைத்துள்ள அந்தத் தீவிரவாதிகள் அங் குள்ள சன்னி, ஷியா, குர்த், கிறிஸ் தவர்கள், இஸாடி இன மக்களைக் கொன்று குவித்து வருகின்றனர். இவர்களை முறியடிக்கும் பணி யில் சிரியா அரசுக்குச் சொந்த மான விமானப்படைகளுக்கு உதவியாக அமெரிக்க விமானப் படை விமானங்களும் தீவிர ... ஈடுபட்டு வருகின்றன.
இந்த நிலையில் ரக்கா நகரில் உ... ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பது... மிடங்கள் மீது கடந்த இரு தி... களாக அமெரிக்க விமானப்... நடத்திய தாக்குதல் சம்பவங்... 16 தீவிரவாதிகள் கொல்... டனர். ஒரு குழந்தை உட்... அப்பாவிப் பொதுமக்களும்... ழந்துள்ளதாக தகவல்கள்... யாகியுள்ளன.

# தற்காலத்தில் பெரிதும் உணரப்படும் யோகாசன கலையின் முக்கியத்துவத்தை நிதர்சனமாக்கும்

# சர்வதேச யோகா தினம்–ஜூன் 21

■ எஸ்.நதிபரன்



மிக புராதன கால கலையான யோகக் கலையானது இன்று பெரும்பாலான உலகமக்களால் இன மத பேதமின்றி பின்பற்றப்பட்டுவருவது இந்துமதம் சார் கலையொன்றுக்கு கிடைத்த சிறப்பான அங்கீகாரமாகும். முன்னர் இந்தக் கலை பற்றியதான தவறான கருத்துக்கள் திட்டமிட்டு பரப்பப்பட்டுவந்ததனால் மக்கள் அதன்பால் அக்கறைகொள்ளவில்லை. காரணம் இந்துமதம் சார்ந்தகலையாக இருப்பதனால் வேற்றுமதப்பிரிவினர் இந்தக்கலை மீது தமது வெறுப்பையும் காழ்ப்புணர்வையும் வெளிப்படுத்தியமையால் இது பெருமளவில் பிரபலமடையவில்லை. ஆனால் இன்றையகாலகட்டத்தில் உடல் உளஆரோக்கியம் என்றவிடயத்தில் யோகக்கலையானது அதிகம் செல்வாக்குச் செலுத்துவதால், அதாவது இந்தக் கலையிலுள்ள நோய் குணப்படுத்தும் திறனை இன்றைய மருத்துவவிஞ்ஞானமும் ஏற்றிருப்பதால், சர்வதேச ரீதியாக பிரபலமடைந்து வருகின்ற கலையாக இன்று யோகாசனக் கலை மிளிர்கிறது. இதனை அங்கீகரிப்பதாகவும் சர்வதேச ரீதியில் இந்தக்கலையின் சிறப்புப் பற்றிய ஆழமான புரிதலை பறைசாற்றும் முகமாகவும் இவ்வாண்டுமுதல் ஐக்கிய நாடுகள் சபையினால் சர்வதேச யோகா தினமாக ஜூன்– 21 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்துமதத்துக்கு சனாதனதர்மம் என்றபெயரும் உண்டு. இதன் உட்பொருள், இதன் தோற்றம் அனாதியானது என்பதாகும். இந்துப்பண்பாட்டுமரபில் தோன்றி வளர்ந்த யோகக் கலையின் தோற்றமும் அவ்வாறே நிகழ்ந்தது. இந்தக்கலையின் தோற்றத்தை அறுதியிட்டுக் கூறமுடியாததாயினும், ஆதிசிவனால் பார்வதிக்கு கூறப்பட்டதாகவும், பின்னர் இறையருள் பெற்ற மாகான்கள் வழியாக குரு சீடமரபியலூடாக தொன்றுதொட்டு பேணப்பட்டுவந்ததாகவும் சிவசம்கிதை என்றயோக நூலில் கூறப்படுகிறது. யோகத்தின் பிரிவுகளில் ஒன்றான கடயோகத்தில் உடலையும் மனதையும் நன்னிலையில் வைத்திருப்பதற்கான ஆசனப் பயிற்சிமுறைகள் மற்றும் நிலைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. இந்தக் கலைபற்றிய கருத்துக்கள் சில இந்துமத நூல்களில் காணப்படுகின்றன. குறிப்பாக பதஞ்சலி யோகசூத்திரம் சிவசம்கிதை, திருமந்திரம் மற்றும் கடயோகப்பிரதீபிகை முதலான நூல்களில் இந்தக்கலை பற்றியதானகருத்துக்கள் காணப்படினும் பதஞ்சலி யோகசூத்திரமே மூலநூலாகக் கொள்ளப்படுகிறது. இயமம் முதல் சமாதி ஈறான எட்டுவிடயங்கள் யோகத்தில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. இவற்றைஅட்டாங்க யோகம் என அழைப்பர். இந்த எட்டு விடயங்களையும் படிமுறை ரீதியாக முறையாக கடைப்பிடிக்குமிடத்து, ஒருவனுக்கு சகல சித்திகளும் கிட்டும் என்று கூறப்படுகிறது.

யோகம் என்பதுவாழ்க்கை நெறிமுறை. எப்படியும் வாழலாம் என்றில்லாமல், இப்படித்தான் வாழ வேண்டும் என்ற பல வாழ்வியல் தத்துவங்களை–நடைமுறைகளை இது உள்ளடக்கியுள்ளது. யோகம் என்ற சொல்லுக்கு இணைத்தல் அல்லது ஒன்றுசேர்த்தல் என்றுபொருள். உடலையும் மனதையும் ஆன்மாவையும் ஒன்றிணைக்கும் ஆற்றல் யோகக் கலைக்குள்ளது. இதனால் சாதா ரண உடற்பயிற்சியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தனித்துவம்மிக்க கலையாக இது திகழ்கிறது. அத்துடன் உடலியக்கத்திற்குத் தேவையான பிராண சக்தியை அளிப்பதனால் உடல்வலு மற்றும் அனுசேபத் தொழிற்பாடுகள் தடையின்றி நடைபெறும்.

தற்காலத்தில் நோய்களின் தாக்கங்கள் அதிகரித்துவருகின்றன. எவ்வளவுதான் மருத்துவத்துறை பலவித முன்னேற்றங்களை கண்டாலும் அதிகரித்துவரும் நோய்களை தணிவிப்பதில் தோல்வியையே சந்தித்துவருகின்றது. கால மாற்றத்துக்கேற்ப மக்களின் வாழ்வியல் கட்டமைப்புகளும், நடைமுறைகளும் மாற்றமடைந்துவருகின்றன. இதனால் நவீனமருத்துவத் துறைக்கே சவால் விடும் அளவுக்கு நோய்கள் தீவிரத்தன்மை பெற்றிருக்கின்றன.எனினும் இதற்கான தீர்வாக பண்டைக்கால சித்தர்களாலும் முனிவர்களாலும் பேணிப் பாதுகாக்கப்பட்டுவந்த யோகக்கலை சிறந்த தீர்வைவழங்குவதால் தற்கால மருத்துவ விஞ்ஞானத்தால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எவ்வித பக்க விளைவுகளுமின்றி நோய்களைக் குணப்படுத்தக் கூடிய ஆற்றல் இந்தக் கலைக்கு இருப்பதனால் சர்வதேசநாடுகளில் மதிப்பும் மவுசும் அதிகமாகக் காணப்படுகிறது. உடலிலுள்ள சகல உள்ளுறுப்புக்களும் சுறுசுறுப்புடன் இயங்கச் செய்வதிலும், அந்த உறுப்புகளுக்கு இரத்த ஓட்டத்தை சீராகவழங்குதலிலும், உடலுக்கு தேவையில்லாத கழிவுகளையகற்றி தேவையானசக்தியை வழங்குவதிலும் யோகாசனம் முக்கியத்துவம் பெறுகின்றது.

மருத்துவப் புள்ளிவிபரங்களின் படி இலங்கையிலும் சரி, உலகநாடுகளிலும் சரி ஐந்து வகையான நோய்கள் மனிதனைத் தாக்குவதில் முன்னிலை வகிப்பதாகக் கூறப்படுகிறது. இருதய நோய்கள், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறுகள், புற்றுநோய் மற்றும் சுவாசநோய்கள் முதலிய ஐந்து வகை நோய்களும் அதிகமாக பீடித்துவரும் நோய்கள் வரிசையில் முதன்மை பெறுகின்றன. இத்தகைய தொற்றாநோய்களுக்கான சிகிச்சைமுறைகள் நவீன மருத்து வத்தில் காணப்படுகின்றபோதும், பல எதிர்மறையான விளைவுகளும் ஏற்பட ஏதுவாகின்றன. ஆனால் எவ்விதமான பக்கவிளைவுகளோ, செலவுகளோ இல்லாத மருத்துவ விஞ்ஞானமான யோகக் கலையை பயில்வோருக்கு உடல் உளரீதியாகவரும் எந்தவிதநோய்களையும் வெற்றிகொள்ளும் ஆற்றல் இயல்பாகவே வருகிறது. எட்டு யோகபடிமுறைகளில் மூன்றாவதாக உள்ள ஆசனங்கள் உடலைச் சுத்தம் செய்வதனூடாக மனதைச் சீராக வைத்திருக்க உதவுகின்றன. ஆசனங்கள் ஏராளமாக இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்க ஆசனங்களை செய்வதனூடாக உடலையும் மனதையும் முன்னேற்றமான நிலையில், அதாவது ஆரோக்கியமாக வைத் திருக்கமுடியும். ஆண்கள் மட்டுமன்றிபெண்களும் இந்தக் கலையைப் பயிலமுடியும். பெண்களுக்கு ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வாகஅமைகிறது.

யோக நூல்களின்படி எமது உடலானதுநாடிகளினால் கட்டமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது 72000 நாடிகள் உடலில் காணப்படுவதாக சிவசம்கிதை எனும் யோக நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தநாடிகளின் இயக்கத்தைச் சரிவரப் பேணுவதன் மூலம் உடலின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும். இந்தப் பணியை யோகாபயிற்சியின் மூலம் மேற்கொள்ளமுடியும். அத்துடன் குருதியானது உள்ளுறுப்புக்களுக்கு தடையின்றிகிடைக்கவும், நாளமில்லாச் சுரப்பிகள் சரிவர வேலைசெய்யவும், நரம்புமண்டலங்கள், தசைகள், மூட்டுக்களின் சீரான இயக்கத்திற்கும் இது பெரிதும் துணைபுரியும். அதுமட்டுமன்றி, உளரீதியான பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமைகிறது. கோபம், நெருக்கீடுகள், புதகளிப்பு, மனஅழுத்தம், மன உளைச்சல் கவலை, விரக்தி முதலிய பல மிதமான உளவியல் சார் பிரச்சினைகளுடன் பாரிய உளநோய்களும் வராமல் தடுக்கலாம். மொத் தத்தில் சகல உடல்,உள நோய்களுக்கும் நித்திய சிரஞ்சீவியாக யோகா பயிற்சிகள் திகழ்கின்றன எனில் பிழையில்லை.

தற்போது உலகநாடுகளில் யோகாசனக்கலைபற்றியதான தப்பபிப்பிராயங்கள் படிப்படியாக, விலகி விழிப்புணர்வு மேலோங்கி வருகையில் எமது பிரதேசத்தைப்பொறுத்தவரையில் அதுபற்றிய ஆழமான அறிவு, ஆர்வம் குன்றியிருப்பது கவலைக்குரிய விடயமாகும். எமது பண்பாட்டு பாரம்பரியத்துடன் நெருங்கியதொடர்பைக் கொண்டுள்ள இந்தக் கலையைப் பயிலாமல், அறியாமல் அவமாக காலத்தை கழித்து வருகிறோம். யோகப்பயிற்சி மூலம் வாழ்வை சிறந்தமுறையில் மாற்றிய மைத்துக்கொள்ள முடியும். அத்துடன் மனிதமனங்களில் தோன்றும் மிருகக் குணங்களைஅழித்து ஒழுக்கம் மிக்கவாழ்வுக்கு அடித்தளமிட்டு தெய்வீககுணங்கள் மேலோங்க உதவுகிறது. தற்போது பெருகிவருகின்ற குரோதங்கள், போட்டிபொறாமைகள், வன்முறைகள், குற்றச் செயல்கள் போன்றபலஎதிர்மறையானசெயல்கள் சமூகத்தையும் இனங்களையும் சீரழித்துவருகின்றன. இத்தகைய எதிர்மறைச் சிந்தனைகளைச் செயல்களை தடுக்கும் ஆற்றல் யோகக்கலைக்கு உண்டு. மன ஒருமைப்பாடு, தன்னம்பிக்கை, ஆளுமைப்பண்புகள், படைப்பாற்றல்திறன், ஆக்க பூர்வமான சிந்தனைகள் முதலிய பல உயர்ந்த பண்பு கள் வளர ஏதுவாக அமைகிறது. எனவே யோகப் பயிற்சியை சரி யானகுரு ஒருவரது வழிகாட்டலு டன்தான் பயில வேண்டும். தவறான வழிகாட்டல்களுடன் செய்யப்படும் பயிற்சிகள் தவறான வழிக்கே இட்டுச் செல்லும்.

இறுதியாக, இவ்வாண்டு முதல் கொண்டாடப்பட்டுவருகின்ற சர்வதேச யோகா தினமானது பல நோக்கங்களை அடைவதற்கானதாக இருக்கவேண்டுமே தவிர, வெறும் கொண்டாட்டமாக மட்டும் இருக்கக்கூடாது. நமது பிர தேசத்தைப் பொறுத்தவரை யோகாசனம் தொடர்பான பூரணஅறிவு பெற்றவர்கள் குறைவு என்றே கூறலாம். அல்லதுபூரண அறிவு பெற்றவர்கள் குடத்துள் விளக்குப் போல் தம்மைவெளிக்காட்டாமல் தம் முடனே வைத்திருந்து, ஈற்றில் அவர்களுடன் அக்கலையும் முடிந்துவிடுகிறது. சிலர் யோகாபற்றிய ஆழமான– சூட்சுமமான விடயங்களை வெளிக்காட்ட விரும்புவதில்லை. பக்குவமான நம்பிக்கைக்குரிய சிலமாணவர்களுக்கு, தான் பயின்றதைப் பயிற்றுவிக்கமுன்வரவிரும்புவதில்லை. எனவே, இது விடயத்தில் அரசு அக்கறை எடுக்க வேண்டும். ஐ.நாவால் சர்வதேச யோகா தினத்தை பிரகடனப்படுத்த முன்னின்று செயற்பட்டநாடு இந்தியா. அதுமாத்திரமன்றி இது இந்தியாவின் பாரம்பரியகலைகளுள் ஒன்று. எனவே எமது நாட்டைச் சார்ந்த மக்களும் பயனடையும் வண்ணம் யோகக் கலையை விஸ்தரிக்க வேண்டியது அரசின் கடமையாகும். இதற்கு இங்குள்ள யோகாசனத்தில் தகுதி யும் தரமும் வாய்ந்தவர்களை தெரிவுசெய்து புலமைப்பரிசில் மூலம் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட யோகாசன நிறுவனங்களில் பயிற்சியளித்து அவர்களைக் கொண்டு எமது பிரதேச மக்களுக் கான சேவையை வழங்க வேண் டும். இதன்மூலம் எதிர்காலத்தில் ஆரோக் கியமான சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

**யோகம் என்ற சொல்லுக்கு இணைத்தல் அல்லது ஒன்றுசேர்த்தல் என்றுபொருள். உடலையும் மனதையும் ஆன்மாவையும் ஒன்றிணைக்கும் ஆற்றல் யோகக் கலைக்குள்ளது. இதனால் அது சாதாரண உடற்பயிற்சியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தனித்துவம்மிக்க கலையாக திகழ்கிறது. அத்துடன் உடலியக்கத்திற்கு தேவையான பிராண சக்தியை அளிப்பதனால் உடல்வலு மற்றும் அனுசேபத் தொழிற்பாடுகள் தடையின்றி நடைபெறும்.**

## இந்தியத் துணைத்தூதுவரே எமக்குக் கருணை காட்டுங்கள்

இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகள் இடம்பெயர்ந்த, வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ளவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றனர் என்பதை அனைவரும் அறிவார்கள்.

இந்திய அரசு 8லட்சத்து 50ஆயிரம் ரூபாவை ஒவ்வொரு வீட்டுக்கும் ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டத்தை ஆரம்பித்தது. ஆனால் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு 5லட்சத்து 50ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டது, வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் பாதிக்கப்படுவது இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகள் என்பதை அனைவரும் அறிவார்கள்.


இந்த வீட்டுத்திட்டத்தை மேற்பார்வை செய்யும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் ஆலோசனைப் பிரகாரம் வீடுகளை அமைக்க வேண்டுமானால் சுமார் 10லட்சம் ரூபாவாவது தேவைப்படும். உள்ளக மின்னிணைப்பு வேலைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற ஏழைகளாகிய வீட்டுத்திட்டப் பயனாளிகள் 5லட்சத்து 50ஆயிரம் ரூபாவை வைத்துக் கொண்டு வீட்டைப் பூர்த்தி செய்ய முடியவே முடியாது. இந்த நிலையில் அதிகாரிகளின் நெருக்குதல் காரணமாகக் கடன் வாங்கியும், தம்மிடம் உள்ள அற்ப சொற்ப நகைகளை விற்றோ அல்லது அடைவு வைத்தும் வீட்டைப் பூர்த்திசெய்ய வேண்டிய நெருக்குதல்களுக்கு ஆளாகின்றனர்.

ஏற்கனவே வீடுகளைப் பூர்த்தி செய்தவர்கள் கடனில் மூழ்கியிருக்கத் தற்போது வீடுகளை அமைத்து வருபவர்கள் கடன்களை வாங்கித் தமது வீடுகளை அமைத்து வருகின்றனர்.

இந்திய அரசு ஒதுக்கிய 8லட்சத்து 50ஆயிரம் ரூபாவை முழுமையாக வழங்கினால் வீட்டுத்திட்டப் பயனாளிகள் ஓரளவு ஆறுதலடைய முடியும். தற்போது இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகளில் ஏற்கனவே 5லட்சத்து 50ஆயிரம் ரூபாவைப் பெற்றவர்களுக்கு மீதிப் பணமான 3லட்சம் ரூபா வழங்கப்படவிருப்பதாகச் செய்திகள் வெளிவந்ததால் கடனில் மூழ்கியுள்ள அந்த ஏழை மக்களின் முகங்களில் புன்னகையின் ஒளிக் கீற்றுக்களை காண முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர் காருண்யம் மிக்கவர். ஏழைகளின் துன்பங்களை உணர்ந்தவர். அவர் இந்த விடயத்தில் தலையிட்டு ஏற்கனவே இந்திய அரசினால் வீட்டுத்திட்டத்துக்கு என ஒதுக்கப்பட்ட 8லட்சத்து 50ஆயிரம் ரூபாவை வழங்குவார் என்ற நம்பிக்கையில் அந்த மக்கள் உள்ளனர். ஆகவே சகல இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கும் மீதித் தொகையான 3லட்சம் ரூபாவை வழங்கினால் இந்த ஏழைகளின் கண்ணீருக்கு முடிவு கிடைத்துவிடும்.

***கோ.மகேஸ்வரி***
***பாதிக்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்டப் பயனாளி***

## வாசகர் திருமுகம்



## கழிவு வாய்க்காலுக்கு விமோசனம் கிடையாதா?

சிவலிங்கப்புளியடியிலிருந்து ஓட்டுமடம் செல்லும் வீதி யோரத்தில் அமைந்துள்ள கழிவு வாய்க்கால் பராமரிப்பின்றிக் காணப்படுவதால் மக்கள் சிரமங் களை எதிர்கொண்டு வருகின்ற னர்.


இது தொடர்பாக ஏற்கனவே பத்திரிகைகளில் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொள்வதாகத் தெரிவதில்லை. இந்தக் கழிவு வாய்க்கால் உடைந்த நிலையில் காணப்படுவதுடன் கழிவு நீர் தேங்கி நிற்பதால் எந்த வேளையிலும் துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது. மழை காலத்தில் இந்த வாய்க்காலில் தேங்கி நிற்கும் கழிவு நீர், வீதியெங்கும் பரவிப் பாய்வதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது. மேலும் உடைந்த நிலையில் காணப்படும் வெள்ள வாய்க்காலில் சிலர் விழுந்தெழும்பிச் செல்வதையும் காண முடிகின்றது.

இதைவிட உணவகங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரும் இந்த வாய்க்காலில் தேங்கி நிற்பதைக் காண முடிகின்றது. இதனால் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதோடு இலையான்களும், நுளம்புகளும் பெருகிக் காணப்படுகின்றன. பொதுவாகவே மக்களின் சுகாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் இந்தக் கழிவு வாய்க்காலை, யாழ்.மாநகர சபையினர் உடனடியாகச் சீர்செய் வதுடன் கழிவுநீர் தடையின்றி வழிந்தோடக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டு மென்பதே இந்தப் பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மேலும் வீதியும் மிகவும் மோசமான நிலையில் பல ஆண்டுகளாகக் காணப்படுகின்றது. இதனையும் புனரமைக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

***கா.சுந்தரராஜா ஓட்டுமடம்***

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# மைத்திரி சிந்திக்கும் முக்கிய தருணமிது

நாட்டில் நல்லாட்சியை நிலைநிறுத்துவதாக வாக்குறுதியளித்து பதவிக்குவந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஆறுமாத காலமாக பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் கட்டிக் காத்துவந்த கனவான் ஸ்தானத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு அனுமதியளித்ததன் மூலமாக இன்று இழந்து நிற்கின்றமையானது இலங்கையின் அரசியல் கலாசாரத்தின் யதார்த்தத்தை மீண்டும் பறை சாற்றி நிற்கின்றது.

மனித உரிமைகளை மதிக்காது சர்வாதிகாரப்போக்கில் பயணித்த ராஜபக்ஷ அரசு கடந்த ஜனவரியில் தோற்கடிக்கப்பட்டபோது இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அபிவிருத்தி மாயைகளால் பௌதீக ரீதியில் அழகாகத் தோன்றினாலும் மனிதத்தை வேகமாகத் தொலைத்து வறண்டு கொண்டிருந்த இலங்கை மீது கடந்த ஆறுமாத காலங்களாக ஏற்பட்ட சகல எதிர்பார்ப்புகளும் இன்று ஏமாற்றத்தின் விளிம்புநிலையில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

நாட்டுத் தலைவரான ஜனாதிபதி ஓர் இனத்துக்கோ, ஒரு கட்சிக்கோ, ஒரு மதத்திற்கோ,, ஒரு பிரிவினருக்கோ சொந்தமானவர் அல்லர். மாறாக, முழு நாட்டுக்கும் ஜனாதிபதி பொதுவானவர்; உரித்தானவர். அரசியல்வாதியென்ற நிலையிலிருந்து தேசத்தலைவன் என்ற ஸ்தானத்தில் முன்னைய ஜனாதிபதிகள் நடந்துகொண்டிருக்காவிட்டாலும் மைத்திரிபால சிறிசேன எங்கோ ஒரு மூலையிலேனும் தனது செயற்பாடுகளால் - பேச்சுகளால் அப்படியான ஓர் உணர்வை ஏற்படுத் தியிருந்தார்.

தன்னை ஆட்சியில் அமர்த்திய மக்களும் அமைப்புகளும் கொண்டிருந்த நல்லாட்சி தொடர்பான நம்பிக்கைகளை எத்தகைய அழுத்தத்தின் மத்தியிலும் பேணுவார் என்று எதிர்பார்த்திருந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் போட்டியிட அனுமதியளித்ததன் மூலமாக மக்களின் எதிர்பார்ப்புகளெல்லாம் கானல்நீராகி விடுமோ என்ற அச்சம் ஆட்கொண்டிருக்கின்றது.

ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் நிலை நிறுத்துவதற்காக மஹிந்தவின் சர்வாதிகாரப்பிடிக் குள் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக அப்போது பலம்வாய்ந்த தனது கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான மஹிந்தவை விட்டு வெளியே வந்தபோது அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருசிலரைத் தவிர, எவருமே மைத்திரிபால சிறிசேன நம்பிக் கைத்துரோகம் செய்ததாகக் கூறியிருக்கவில்லை. மாறாக, இன்றைய நிலை யில் - மஹிந்த போட்டியிடுவதற்குத் தாம் தலைமைவகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அனுமதியளித்ததன் நோக்கம் குறித்த உண்மையான தெளிவுபடுத்தல் காத்திரமான முறையில் முன்வைக்கப்படாத நிலையில் நம்பிக்கைத்துரோகம் என்ற வார்த்தை வரலாற்றில் மைத்திரிபால சிறிசேனவுடன் தொற்றிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பதை மீண்டும் நிரூபிக்கும் நிகழ்வே கடந்த வாரத்தில் மஹிந்தவின் வேட்புமனு விடயத்திலும் நடைபெற்றிருக்கின்றது என்று கூறித் தட்டிக்கழித்துவிடுவதற்குப் பெரிதும் துன்பத்தின் மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் உணர்வுகள் பலிக் கடாவாக்கப்பட்டு விடக்கூடாது.

மைத்திரிபால சிறிசேன தலைவரென்ற வகையில் - தீர்க்ககரமான வகையில் அடுத்து வரும் நாள்களுக்குள் செயற்படத்தவறினால் - நடந்துள்ள பெருந்தவறை சரிசெய்துகொள்ளா விட்டால் - மக்களுக்குப் பொறுப்புக்கூற முன்வரா விட்டால் இந்தத் தலைமுறை மட்டுமன்றி, இனிவரும் தலை முறைகளும் இலங் கையின் அரசியல் கலாசாரத்தின் மீதான நம்பிக்கையை இழந்துவிடும் அபாயமுள்ளது.

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எங்கள் தேசத்தில் உயரும் தேர்தல் போசக்கையை என்னென்பது...?

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நாட்டின் அரசியலில் முகிழ்த்த மாற்றம் நின்று நிலைக்குமா, நின்று பிடிக்குமா? எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி(அடுத்த மாதம்) நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அது தொடர்வதற்கான சாத்தியம் உண்டாகுமா? உருவாகுமா? என்ற வினா இப்போதே மேலுயர்ந்து நிற்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சி அரசியலைப் புறம் தள்ளி, ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டின் ஆட்சி நிபுணர் பாத்திரத்தை வகிப்பாரா? என்ற வினாவும் மற்றொன்றாகும்.

தேர்தல் பரப்புரையில் ஜனாதிபதி ஈடுபடமாட்டார் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க அதியுச்சப் பரப்புரையில் ஈடுபடுவார் என்றும் தகவல்கள் உறுதியாகி வருகின் றன. இந்தத் தகவல்கள் நடைமுறையில் எவ்வாறு அமையும் என்பதை திட்டவட் டமாகக் கூறஇயலாது. அரசியலாளர் களும், ஆட்சியியலாளர்களும் இறுதி நேரத்தில் தமது போக்கை-- தமது நிலைப் பாட்டை-- தலைகீழாக்கி விடவும் கூடும்.....!!

இத்தகைய சூழமைவு முகிழ்த்துவரும் ஆரம்பகால வேளையில், எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது, குழப்பங்கள் உண்டாகலாம் என்ற எச்சரிக்கையும் துளிர்த்துள்ளது.

அதாவது, மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கியதன் ஊடாக மக்களின் ஆணையை ஜனாதிபதி புறந்தள்ளி விட்டார் என்ற கருத்து மேலெழுந்துள்ளது.

தேர்தலை, செயற்கைப் பேரிடர் போன்று நோக்குவதும், அதன் வழி நாடுவதும் மேலெழுந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.


தேர்தல் என்பது ஜனநாயகத்தின் செயலொழுங்குகளில் ஒன்று; முதன்மையானது என்றும் கொள்ளலாம். அதனைப் புறம்தள்ளி தெற்கில் சில தரப்புகள் விதண்டாவாதக் கருத்துக்களை வெளியிட்டு வருவது ஏற்புடைத்தல்ல.

தேர்தல்கள் எந்தவித குழப்பமுமின்றி நடத்தப்பட வேண்டும். இதனை ஆட்சியிலுள்ள அரச உயர் மட்டங்களும் உள்வாங்கிச் செயற்பட வேண்டும்.

மொத்தத்தில், ஜனநாயகத்தின் முதன்மை அலகான தேர்தலை, அதற்குரிய மகிமை மங்காது நடத்துவதற்கு ஆட்சியாளர்கள் உள்ளார்ந்த மனத்தூய்மையுடன், செயற்படுவது, மிகமிகக் குன்றிப்போகும் நிலையே இந்த நாட்டின் பட்டயம் எனும் அளவுக்கு தேய்ந்து போகிறது.

மக்களால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள், தமக்கு வாக்களித்தவர்களுக்கே இரண்டகம் செய்யும் போக்கு நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து உயர்ந்து வருகிறது.

இந்த நிலை நீக்கப்படும்வரை, இந்த நாட்டில் ஜனநாயகமோ, ஜனநாயக ஆட்சியோ மேலெழும் என்று எதிர்பார்க்க [illegible]வில்லை. பாவம், வாக்காளர்கள்-- --அரசுகளுக்கு எதிராகப் புரட்சி [illegible]தை விட வேறு எந்த மார்க்[illegible] என்பது வெள்ளி போன்று ...



# மஹிந்தவின் மீள் வருகையை மக்கள் நிராகரிக்க வேண்டும்

■ வந்தியத்தேவர்

தென்னிலங்கை அரசியல்வாதிகள்சிலர்தடுமாற்றத்தில் தாங்களும் குழம்பி, மக்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். மோசடிகளும், ஊழல்களும் கை வரப்பெற்ற அவர்களால் ஒரு நிதானமான, நாட்டின் நலனுக்கான உருப்படியான கொள்கைக்கு வரமுடி யாதென்பதால் தங்களது நிலையைத் தெளிவாகத் தெரிவிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். மஹிந்த, ஐ.ம.சு.கூட்டமைப்பின் வேட்பாளர் என ஒரு சிலரும் அவருக்கு ஐ.ம.சு.கூட்டமைப்பில் இடமில்லை என வேறு சிலரும் பொருத்தமற்ற வகையில் உளறிக் கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவுக்கு கட்சியில் இடமில்லை என்பதை வலியுறுத்தித் தெரிவித்து விட்ட நிலையிலும், சிலர் இன்னமும் அவருக்கு ஐ.ம.சு முன்னணியில் வேட்புமனு வழங்கப்படுவதாக நம்பிக்கை கொண்டுள்ளனர். மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்கப்பட்டதால் தான் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி தனித்துப் போட்டியிடவுள்ளதாக ஜாதிகஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். சுசில் பிரேமஜயந்த, மஹிந்தவை ஐ.ம.சு.முன்னணியின் வேட்பாளராக நியமிக்க ஜனாதிபதி மைத்திரி சம்மதமளித்துள்ளார் எனக்கூறிய பொய், தென்பகுதி அரசியல்வாதிகளிடம் உண்மையொன்றாகி விட்டது போலும். எனினும் குடும்ப ஆட்சிக்கு ஒரு போதும் இனி இடமளியேன் எனவும், சுசிலின் ஊடக அறிக்கை உண்மைத் தன்மையற்றது, தனக்கும் அதற்கும் தொடர்பில்லை எனவும் ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, தனது பிடிவாதத்தில் தளராத மனிதராகக் காணப்படுகின்றார். அவருக்குப்பதவிதேவைஎன்பதால்அவர்தேர்தல் களத்தில் இறங்குவது நிச்சயம். குருநாகல் மாவட்டத்தில் அவர் போட்டியிடவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் அவர் அரசியலுக்கு வேண்டாம் என்பதிலும் தென்பகுதி மக்களில் அனேகர் ஆர்வம் காட்டுவது போல் தெரிகின்றது. கடந்த வாரம் இதற்காக கொழும்பில் ஆர்ப்பாட்டங்களும் இடம் பெற்றுள்ளன. நாட்டில் நல்லாட்சியைக் குழப்பும் எவருக்கும் சுதந்திரக்கட்சியோ,ஐமசுகூட்டமைப்போ வேட்புமனு வழங்கத் தயாரில்லை என்பதும், தான் எப்படியாவது ஐ.ம.சு.கூட்டமைப்பில் வேட்பாளராகி விட வேண்டும் என்ற ஆவலினால் அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போட்டியிடுவதால் அவர்கள் எதிரிகளாக இருக்க வேண்டிய அவசியம் கிடையாது எனவும் மஹிந்த கூறியிருப்பதும் நோக்கத்தக்கது.

மஹிந்த பிரதமர் பதவி உட்பட மூன்று பொறுப்புக்களைக் கோரிய போதும், இறுதியில் அவருக்கு வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பு மட்டுமே வழங்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார். மஹிந்த இல்லாவிடில் சுதந்திரக் கட்சியின் வெற்றி பாதிக்கப்படும் என இறுதியாகக் கூறிய அவர் மஹிந்தவுக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுத்த ஒருவராகவும் இருந்துள்ளார். தற்சமயம் அடிக்கடி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் ஒருவராகவே அவர் காணப்படுகிறார்.

தென்பகுதி அரசியல்வாதிகளின் போக்கும் நடவடிக்கைகளும் நாட்டில் நிம்மதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கான உண்மைத் தன்மைகள் கொண்டதாக இல்லை. இதனால் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் இடம் பெறக்கூடிய சாத்தியம் இருக்குமா என்பதும் கேள்விக்குரியதே. தேர்தலின்போது நாட்டில் குழப்பம் ஏற்படலாம் எனவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவைத் தோற்கடிப்பதற்காகவே மக்கள் மைத்திரிக்கு ஆதரவு வழங்கியிருந்தார்கள் எனவும் பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் கூறியுள்ளார். திருடர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்த முற்சிப்பதா என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார ரணதுங்க கேள்வி எழுப்பியுள்ளார். தமிழ் முஸ்லிம் மக்களைப் பழிவாங்கும் நோக்கில் தான் மஹிந்தவின் அரசியல் செயற்பாடுகள் அமைந்துள்ள[ன]. மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தா[ல்] தமிழ் பேசும் மக்கள் பழி வாங்கப்படுவது நிச்சயம். இந்த உண்மையை மாதுளுவாவே சோபித தேரரும் ஒப்புக்கொள் ளுகின்றார். தமிழர்கள் தம்மைத் தோற்கடித்து விட்டதாக மீண்டும் மீண்டும் தென்பகுதியில் உள்ள மக்களுக்கு நினைவுபடுத்திக் கொண் டிருக்கிறார் மஹிந்த. இவைகளை நோக்கும் போது நாட்டில் மீண்டும் ஒரு குழப்பத்தை எப்படியாவது தோற்றுவிக்க வேண்டும் என்பதற்கு அவர் வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறார் போல் தெரிகின்றது. அவரது தரப்பினர் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவல்ல, தேர்தலைக் குழப்பி நாட்டை நாசப்படுத்துவதே அவர் களின் நோக்[கம்] என்பது ரில்வின் சில்வாவி[ன்] கருத்து. கோத்தபாய கம்பஹாவிலும், பஸில் தேசியப் பட்டியலுமாக பதவிக்கு நிற்கவுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. மொத்தத்தில் மீண்டும் குடும்ப ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே இவர்கள் களத்தில் இறங்குகிறார்கள் என்பது புலனாகின்றது.

> “
> **மஹிந்தவுக்கு வாய்ப்பளிக்க மைத்திரி சம்மதம் என்ற தகவலால் சர்வதேசமே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. மஹிந்தவை ஆட்சிக் கட்டிலில் ஏற மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பது சில அரசியல் வாதிகளின் எதிர்பார்ப்பு என்றாலும், அது எந்த அளவுக்கு வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குரியதே.**

இலங்கையின் தலைவிதி ஒரு நல்ல நிலைக்கு மாறுவதற்கான காலம் இன்னமும் கனியவில்லைப் போல் தெரிகின்றது. நாட்டுக்குக் கிடைத்த அரசியல்வாதிகள் எல்லோருமே ஊழல், மோசடி குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களாகவே காணப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பது போய், இதுதான் நடக்கும் என்ற நிலையே தொடருகின்றது. மஹிந்தவுக்கு வாய்ப்பளிக்க மைத்திரி சம்மதம் என்ற தகவலால் சர்வதேசமே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. மஹிந்தவை ஆட்சிக் கட்டிலில் ஏற மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது சில அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பானாலும், அது எந்த அளவுக்கு வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குரியதே. எமது மக்கள் தோற்றுப் போனவர்களல்ல. எமது மக்களால்தான் மஹிந்த தோற்றுப்போனார் என்று முடிந்த விடயத்தைப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. மஹிந்தவின் மீள்பிரவேசம் நாட்டுக்கு உகந்ததல்ல என்ற உண்மையைப்புரிந்து கொண்டுதென் பகுதியிலுள்ளவர்களும் வடக்கு-கிழக்கில் உள்ளவர்களும் அவரது மீள்வருகையை முறியடிப்பதற்கான முயற்சிகளில் தீவிரம் காட்டுவது தான் இன்றைய தேவையாகும்.

# பிரதமர் பதவிக்கான வேட்கையே மஹிந்தவின் அரசியல் சதுரங்கம்

சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில்: வீஎஸ்ரி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியை இன்றுமுதல் (ஜனவரி 16) மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே உறுப்பினர்களாலும் தலைவர்களாலும் அர்ப்பணிப்புக்கள் மத்தியில் கட்டி யெழுப்பப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபடும் நிலைமையைக் காண விரும்பாததாலேயே, நான் இத்தகைய முடிவை மேற்கொண்டுள்ளேன்.

நாட்டைப் பாதுகாத்து கட்டியெழுப்ப வேண்டியது மட்டுமன்றி, நாம் ஒன்றிணைந்து எமது கட்சியையும் பாதுகாக்க வேண்டியதும் எமது கடமையாகும். சுதந்திரக் கட்சிக்குள் ஜனநாயக நடைமுறை யைப் பாதுகாக்கும் உங்களது கடமை குறித்து வற்புறுத்துவதுடன் கடந்த காலத்தில் எனக்கு நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல நீங்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகிறேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியினின்றும் தாமாக விலகிக்கொண்டவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மேற்கண்ட அறிவிப்பை விடுத்திருந்தார்.

பதவியை வகிக்க எனக்கும் விருப்பமுண்டு. ஒரு பிரதேசசபை உறுப்பினரானாலும்கூட அந்தப் பதவியை விரும்பவே செய்வார். பிரதமர் பதவியை உரியவேளையில் உரிய நபருக்கு கட்சியின் தலைவரான ஜனாதிபதி வழங்குவார். அது அவருக்குரிய அதிகாரமொன்றாகும். அதற்காகக் கட்சியிலுள்ள நாம் எமக்கிடையே கருத்து முரண்பட்டுக் கொள்ளத் தேவையில்லை. நாம் கட்சிக்காக உழைத்து கட்சியைப் பாதுகாக்கும் தரப்பினர். இன்று அரசியலரங்கில் ஒரு சிறு பதவி வகிக்கும் எவருக்கும் சரி பிரதமராகும், ஜனாதிபதியாகும் கனவு இருப்பது தவறல்ல. ஆனால் எல்லோரது எதிர்பார்ப்புக்கும் எப்போதும் சாதகமான வெற்றி கிட்டுவதில்லை. அதற்குத் திறமை தேவை; அர்ப்பணிப்புணர்வு அவசியம்.

நிமல் சிறிபால டி சில்வாவின் மேற்குறித்த கருத்து வெளிப்பாட்டின் மஹிந்தவின் ஜனவரி 16 ஆம் திகதிய அறிவிப்பு மைத்திரிபால சுதந்திரக்கட்சியின் தலைவர் பதவியை மஹிந்தவை வற்புறுத்திப் பெற்றிருந்திருக்கவில்லை என்பதை நிரூபிக்கிறது. தாமாக முன்வந்தே சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை அவர் மைத்திரிபாலவிடம் கையளித்திருந்தார்.

அவ்வாறானால், கட்சியின் தலைமைப் பதவியைக் கைவிடாது தம்வசம் வைத்துக்கொண்டு, பிரதமர் பதவிக்கான கட்சியின் வேட்பாளர் நியமனத்தை அவர் கோரியிருக்க வாய்ப்பிருந்ததல்லவா? அவ்வாறு செயற்பட்டிருந்தால் சுதந்திரக்கட்சி பிளவுபடும் நிலை உருவாகியிருக்காதல்லவா? அவ்வாறு இடம்பெற்றிருந்தால் இன்று மைத்திரிபால பொதுத் தேர்தலில் ஜனாதிபதியென்ற வகையில் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்காது நடுநிலை வகிக்க வேண்டி நேர்ந்திருக்கு மல்லவா? அந்த வகையில் மைத்திரி எந்தக் கட்சிக்கு வாக்களிப்பதெனத் தீர்மானிக்க இயலாதவர்களது ஊசலாடும் மற்றும் இளம் தலைமுறை யினர்களது வாக்குகளைத் தம்மால் கவர இயலாது போய் விடுமென பிரேமதாஸ அஞ்சியதே அதற்கான காரணமாகும்.

எனது தகுதி தராதரத்தைக் கணக்கிட்டு எனக்கு ஆதரவளியுங்கள். கட்சியின் மற்றவர்களது தராதரமற்ற செயற்பாடுகளைக் கணக்கிலெடுத்து எனக்கு வாக்களிப்பதைத் தவிர்த்து விடாதீர்கள் என பிரேமதாஸ தமது தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தார். ஜே.ஆருடனான கருத்து முரண்பாடு காரணமாக பிரேமதாஸ அவ்விதம் வேண்டிக்கொண்டாரில்லை. ஜே.ஆரின் நிர்வாகத்தில் இடம்பெற்ற நியாயமற்ற செயற்பாடுகளை மனதில் வைத்து வாக்காளர்கள் தம்மைப் புறக்கணித்து விடுவர் என்ற அச்சம் காரணமா விதத்தில் சுதந்திரக்கட்சியின் பழைய பாவங்களைக் கைகழுவிக் கொள்ள மைத்திரி பாலவுக்கு இடமளிப்பதாகத் தோன்றவில்லை. தற்போது மைத்திரிபால மஹிந்த வுக்கு சுதந்திரக்கட்சி சார்பான வேட்பாளர் நியமனத்தை வழங்கத் தீர்மானித்துள்ளமை, கட்சியின் பழைய பாவங்களை அதேவிதத்தில் சுமந்து கொண்டு தொடர்ந்து முன் செல்வோம் என்ற விதத்திலான ஒன்றாகும்.

மஹிந்தவுக்கு சுதந்திரக்கட்சி சார்பான தேர்தல் வேட்பாளர் நியமனம் வழங்க மைத்திரிபால தீர்மானித்துள்ளமை, உண்மையில் 'மனமே' என்ற சிங்கள வரலாற்று நாடகத்தில் மனமே என்ற இளவரசி, தம்மைத் தலைதாழ்த்தி மண்டியிட்டு வணங்கிய அரசனிடம் வாளை ஒப்படைத்தமைக்கு ஒப்பான ஒன்றாகும். நாடகத்தில் மனமே இளவரசியை மண்டியிட்டு வணங்கிய அரசனைப் போன்றவர் வேறு யாருமல்லர், மஹிந்தவே.







தார். சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிளவுற்று விடுமென்ற அச்சம் காரணமாகவே தாம் கட்சியின் தலைவர் பதவியைத் துறப்பதாக மஹிந்த அன்றுதமது மேற்கண்ட அறிவிப்பின் மூலம் புலப்படுத்தியிருந்தார். தாம் தமது உயிருக்குச் சமமாக சுதந்திரக்கட்சியை நேசிப்பதாகவும் அவர் அன்று கருத்து வெளிப் படுத்தியிருந்தார்.

அன்று சுதந்திரக்கட்சி பிளவுற நேர்ந்து விடுமென்பதற்காகத் தமது கட்சித் தலைமைப் பதவியைத் தியாகம் செய்த மஹிந்த இன்று தாம் கட்சி சார்பான பிரதமர் பதவி வேட்பாளர் நியமனத்தைக் கோருவதன் மூலம் கட்சி பிளவுற நேருமென்பதைத் தெரிந்து கொண்டும் தமது கோரிக்கை குறித்துப் பிடிவாதம் செலுத்துவதேன்?

பிரச்சினையே அங்குதான் இருக்கிறது. மைத்திரிபால ஜனாதிபதித் தேர்தல் பொது வேட்பாளராவதற்காக சுதந்திரக்கட்சியை விட்டுச் சென்ற சந்தர்ப்பத்தில், பிரதமர் பதவியின் தாத்பரியம் குறித்து நிமல் சிறிபால டி சில்வா தெளிவான கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

பிரதமர் பதவியைப் பெற யார் தான் விரும்பமாட்டார்கள்? வாய்ப்புக்கிட்டுமானால் பிரதமர் பத மூலமும் கூட பிரதமர் பதவிக்காக எவரை நியமிப்பது என்ற முடிவை மேற்கொள்ளும் உரிமை, குறித்த கட்சியின் தலைவருக்கு உரிய தொன்றே என்பது தெளிவாகிறது. அது மட்டுமன்றி 2010 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் சமயத்தில் ஊடகவியலாளரொருவர் கூட்டு முன்னணி அரசின் பிரதமர் பதவிக்கு ஜே.வி.பி. உங்களது பெயரைப் பரிந்துரைத்திருப்பதாகக் கூறப்படுவது குறித்து என்ன கூறுகிறீர்கள் என மைத்திரிபால விடம் வினாவெழுப்பியபோது, சுதந்திரக்கட்சி ஜனநாய நடை முறைக்கு மதிப்பளிக்கும் கட்சி. பிரதமர் யாரெனத் தீர்மானிப்பது கட்சியின் தலைவரான ஜனாதி பதியே. அவரது முடிவுக்கு நாமெல்லாரும் மதிப்பளிப்போம் எனத் தெரிவித்திருந்தார்.

அப்படியானால் ஏன் தற்போது மஹிந்த கட்சியின் தலைவரான ஜனாபதிக்குரிய அந்த உரிமைக்கு சவால் விட முனைகிறார் என்ற கேள்வி எழுவது நியாயமே.

உண்மையில் மஹிந்த தாம் பிரதமர் பதவியை அடைய விரும்பியிருந்தால் அவர் தாம் வகித்த சுதந்திரக்கட்சியின் தலைவர் பதவியை கை விட்டிருந்திருக்கக் கூடாது. பாலவிடம் கட்சியின் தலைமைப் பதவியை ஒப்படைத்துவிட்டு, தற்போது கட்சி சார்பான பிரதமர் வேட்பாளர் நியமனத்தைக் கோருவதன் மூலம் கட்சியை பிளவுபடுத்த மஹிந்த முயல்வதிலிருந்து, சுதந்தி ரக்கட்சி மீதான அவரது விருப்பும் விசுவாசமும் வெறும் பொய் வெளிப்பாடே என்பது தெளிவாகிறதல்லவா? உண்மையில் அவர் சுதந்திரக்கட்சி மீது அபிமானம் கொண்டவரானால், மைத்திரியின் தலைமையில் சுதந்திரக் கட்சியை பொதுத் தேர்தலில் வெற்றி பெறவைக்க உதவ முன்வந்திருக்க வேண்டும்.

1988 ஆம் ஆண்டில் பதவியிலிருந்து ஓய்வுபெற ஜே.ஆர். தயாரானவேளையில், ஐ.தே.கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் தாமும் இணைந்து செயற்பட முன்வந்த போதிலும், அதனைப் பிரேமதாஸ விரும்பினாரில்லை. ஜே.ஆர்., ஐ.தே. கட்சிக்காரர்களை ஒன்றிணைத்து உற்சாகப்படுத்தும் விடயத்தில் காந்தம் ஒன்றைப் போன்ற வலுமிக்க வரான போதிலும், ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் அவர் தேடிக் கொண்ட பாவங்கள் காரணமாகவே பிரேமதாஸ அவ்வித வேண்டுகோளை விடுத்து வந்தார். பிரேமதாஸவின் அந்த அச்சத்தைப் புரிந்து கொண்ட ஜே.ஆர்., பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரை விடயத்தில் தாமும் இணையாது ஒதுங்கிக் கொள்ளத் தீர்மானித்து அவ் விதம் செயற்படவும் செய்தார்.

2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்தவும் அவ்விதமே செயற்பட்டார். சந்திரிகாவின் 11 ஆண்டுகள் கால நிர்வாகத்தில் சந்திரிகா தேடிக் கொண்ட பாவங்களைத் தாம் தமது தோள் மீது சுமக்க மஹிந்த விரும்பவில்லை. சந்திரிகாவைப் புறமொதுக்கி, தமது தேர்தல் பரப் புரைகளின்போது தாம் சந்திரிகா வின் பழைய சுதந்திரக்கட்சிக் கல்லாது, புதிய கொள்கைகோட் பாடுடனான புதியதோர் சுதந்திரக்கட்சிக்கே தலைமை வகிப்பதாக பொதுமக்களுக்குத் தம்மைக் காட்டிக் கொண்டார். அந்த வகையில் 1988 ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாஸ வெற்றிபெற்றதும், 2005 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெற்றிபெற்றதும், தாமிருவரும் சார்ந்திருந்த கட்சிகளின் பழைய பாவங்களைக் கைகழுவிக் கொண்டதனாலேயே ஆகும்.

ஆனால், இன்று மஹிந்த அதே மனமே இளவரசரோ, ஐ.தே.கட்சி உட்படமைத் திரிபாலவை அதிகாரத்தில் இருத்தி வைத்த அன்னச்சின்ன தரப்பே. மனமே இளவரசிக்கு உதாரணம் காட்டத் தக்கவர் மைத்திரி பால சிறிசேனவாகும். மனமே இளவரசியைத் தலை தாழ்த்தி மண்டியிட்ட அரசனை வெட்டிக் கொல்வதற்காக மனமே இளவரசன், இளவரசியிடம் வாளைத் தருமாறு கேட்டபோது, இளவரசியோ வாளை இளவரசனிடம் கொடுக்காது வாளைப் பாதுகாக்க உடலில் கட்டியிருக்கும் வெற்று உறையை இளவரசனிடம் கொடுத்து விட்டு, தம்மைத் தலைதாழ்த்தி வணங்கிய மன்னனிடம் வாளைக் கொடுத்து விடுகிறாள்.

மைத்திரிபாலவும் இன்று மஹிந்தவிடம் வாளை ஒப்படைத்துவிட்டு, அன்னச் சின்னத்தரப்பிடம் வெற்று வாள் உறையையே கையளித்துள்ளார். உண்மையில் மனமே நாடகத்தில் தலைதாழ்த்திய அரசன் இளவரசனை வாளால் வெட்டிக் கொலைசெய்து இளவரசியைப் போக்கிடமின்றி நிலைகுலைய விட்டமைபோன்று மஹிந்தவும் ஒருநாள் மைத்திரிபாலவை நிலைகுலைய வைத்தாவார் என்பது நிச்சயமே.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## தெய்வீகத் தன்மை

ஒவ்வோர் உயிரிலும் தெய்வீகத் தன்மை மறைந்திருக்கிறது. வெளியேயும் உள்ளேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப் படுத்தி, உள்ளே குடி கொண்டுள்ள இந்தத் தெய்வீகத் தன்மையை மலரும்படி செய்வதுதான் முடிவான இலட்சியம்.

எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும் எல்லாத் துன்பங் களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக் குள் ளேயும் இருக்கிறது.

மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி.

# அருகம்புல் தரும் மருந்து



தினமும் காலையில் வெறும் வயிற்றில் அருகம்புல் சாறு குடிக்க வேண்டும். இதைக் கொஞ்சம் கொஞ்சமாக சுவைத்துக் குடிக்க வேண்டும். குடித்த 2 மணி நேரத்துக்குப் பின்னர் மற்ற உணவு வகைகள் சாப்பிடலாம். அருகம்புல் இயற்கை நமக்களித்த மிகச்சிறந்த மருந்தாகும். இது எளிதில் அனைவருக்கும் கிடைக்கக் கூடியது. பல நோய்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இதற்கு உள்ளது. அருகம்புல் சாறு எடுத்து உட்கொண்டால் உடலில் ஏற்படும் பல வியாதி களுக்கு விடைகொடுக்க லாம். கிராமப்புறங்களில் வயல்வெளிகளில் அருகம் புல் எளிதாகக் கிடைக்கிறது. இதைப் பறித்து தண்ணீரில் நன்கு அலசி தூய்மைப்படுத் திய பின்னர் தண்ணீரைச் சேர்த்து நன்கு இடித்து சாறு எடுத்து அருந்தலாம். தேவைப் பட்டால், அருகம்புல்லுடன் துளசி, வில்வம் ஆகியவற் றையும் சேர்த்துக் கொள்ள லாம். மிக்ஸியைப் பயன் படுத்தியும் சாறு எடுக்க லாம். அருகம்புல் சாற்றை காலை யில் வெறும் வயிற்றில் உட் கொள்ள வேண்டும். மாலை வேளைகளிலும் 200 மி.லீ அளவுக்குப் பருகலாம். சித்த வைத்தியத்தில் மிகவும் சிறப் பாகக் கூறப்படும் ஒரு தாவ ரம் அருகம்புல்லாகும்.

**பயன்கள்**

நாம் எப்பொழுதும் உற்சாக மாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கலாம். இரத்தச் சோகை நீங்கி, இரத்தம் அதிகரிக்கும். வயிற்றுப் புண் குணமாகும். இரத்த அழுத்தம் (பீ.பி) குணமாகும்.

நீரிழிவு நோயாளிகளுக்கு சீனியின் அளவைக் கட்டுப் படுத்தும்.

சளி, மூக்கடைப்பு, ஆஸ்துமா போன்ற நோய் களை குணப்படுத்தும்.

நரம்புத் தளர்ச்சி, தோல் வியாதி ஆகியவை நீங்கும்.

மலச்சிக்கல் நீங்கும். புற்று நோய்க்கு நல்ல மருந்து. உடல் இளைக்க உதவும். இரவில் நல்ல தூக்கம் வரும். பல், ஈறு கோளாறுகள் நீங்கும். மூட்டு வலி நீங்கும். கர்ப்பப்பைக் கோளாறுகள் நீங்கும். நமது உடம்பை தினமும் மசாஜ் செய்தது போலிருக்கும்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 700 | 600 | 700 | 650 |
| நண்டு | 300 | 350 | 400 | 300 | 300 | 400 |
| கணவாய் | 400 | 600 | 600 | 500 | – | – |
| பாரை | 500 | 500 | – | 450 | 600 | 400 |
| சுறா | 500 | 500 | – | 600 | 600 | – |
| சீலா | 300 | 400 | 500 | 300 | 400 | 300 |
| விளை | 600 | 400 | 400 | 400 | 400 | 320 |
| மூரல் | 250 | 400 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 500 | 800 | 400 | 450 | 400 | – |
| ஓரா | 300 | 400 | 300 | 350 | 400 | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 100 | 250 |
| நகரை | 200 | 350 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 100 | 200 | 70 |
| ஒட்டி | 200 | 300 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 100 | 200 | 300 | 120 |
| பாலை | 300 | 300 | 300 | 300 | 300 | – |
| வாளை | 100 | 200 | – | 200 | 200 | – |
| கொய் | 100 | 200 | 100 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 200 | 200 | 200 |

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 70 | 80 | 50 | 50–60 | 60 | 60 | 50 |
| கத்தரி | 50 | 60 | 50 | 40 | 40–50 | 30 | 70 | 20 |
| கரட் | 100 | 110 | 180–200 | 100 | 180–230 | 150 | 200 | 230 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 30 | 40–50 | 50 | 70 | 50 |
| பயிற்றை | 90 | 60 | 120 | 80 | 100 | 50 | 130 | 90–100 |
| பாகல் | 120 | 140 | 120 | 150 | 140–160 | 180 | 140 | 120–140 |
| கருணைக்கிழங்கு | 90 | 80 | 90 | – | 100 | – | 120 | 65 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | – | 80 | 100–120 | 100 | 100 | 90–100 |
| சி.வெங்காயம் | 100 | 100–150 | 120 –160 | 160 | 100–140 | 160 | 280 | 110– 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 20 | 20–30 | 20 | 60 | 15 |
| தக்காளி | 100 | 100 | 80 | 80 | 80–100 | 100 | 70 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 60–80 | 40 | 70 | 25–30 |
| கீரை | 20 | 20 | 30 | 05–07 | 15–20 | 10 | 30–35 | 15–20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 20 | 30 | 20 | 20 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 160 | 300 | 280 | 400 | 190–220 | 350 |
| புடோல் | 60 | 60 | 60 | 80 | 60–80 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 90 | 100 | 80 | 100 | 80 | 70 |
| வெண்டி | 120 | 120 | 100–140 | 120 | 120 | 60 | 120 | 70 |
| போஞ்சி | 200 | 150 | 140 | 160 | 140–160 | 140 | 240 | 120 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 160 | 100–120 | 200 | 160 | 130–140 |
| தேங்காய் | 50 | 25–30 | 50 | 40–50 | 40–60 | 50 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 | 90–100 | 90 | 120 | 100–110 |
| தேசிக்காய் | 100 | 180 | 120 | 80 | 50–60 | 60 | 160 | 50–60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30–40 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 130 | 100 | 120–140 | 140 | 200–240 | 200 | 200 | 190 |
| இராசவள்ளி | 120 | – | 120 | – | 80–120 | – | 180 | 90–100 |
| முருங்கைக்காய் | 300 | 150 | – | 220 | 150–200 | 200 | – | 150 |

## நாளை

**ஆனி-23 புதன்கிழமை**
**08.07.2015**

திதி: ஸப்தமி மா. 06.12 வரை
சுபநேரம்: 04.28-05.58 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ.07.44 வரை
இராகுகாலம்: 11.58-01.28 வரை

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | 7 | | | | | |
| 2 | | | | | 1 | 6 | 9 | |
| | 8 | | | 9 | | | 5 | |
| | | | | | 9 | | | |
| 6 | | | | 3 | | | 2 | |
| | | 4 | | 1 | | 5 | 7 | |
| 3 | | | | | 5 | 9 | 6 | |
| | 5 | | | | | 1 | | |
| 8 | | | | | | 3 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 2 | 3 | 8 | 4 | 5 | 9 |
| 4 | 2 | 9 | 5 | 1 | 6 | 3 | 7 | 8 |
| 8 | 5 | 3 | 7 | 9 | 4 | 6 | 1 | 2 |
| 1 | 7 | 4 | 8 | 2 | 3 | 9 | 6 | 5 |
| 2 | 8 | 6 | 9 | 7 | 5 | 1 | 4 | 3 |
| 9 | 3 | 5 | 6 | 4 | 1 | 2 | 8 | 7 |
| 3 | 6 | 2 | 1 | 5 | 7 | 8 | 9 | 4 |
| 7 | 4 | 1 | 3 | 8 | 9 | 5 | 2 | 6 |
| 5 | 9 | 8 | 4 | 6 | 2 | 7 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# குருப் பெயர்ச்சிப் பலன்

**சோதிட சிகாமணி**
**சிவ.சேதுபாண்டியன்**

கடந்த ஒரு வருடமாக குருபகவான் உங்கள் ராசிக்கு 12இல் அமர்ந்து விரயமாக உலாவந்தார். தற்போது குருபகவான் உங்கள் ராசியில் அமர்ந்து அதிகமான பலன்களைத் தருவார். அந்த பலன்கள் சற்று மந்தமாகவே இருக்கும். நீங்கள் அதிகம் முயற்சிகளை மேற்கொண்டால் மட்டுமே நல்ல பலன்களை அடையமுடியும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். பொருளாதார வரவுகளில் தடை எதுவும் ஏற்படாது. குடும்பச் செலவுகளுக்கு தாராளமாக பணப்புழக்கம் ஏற்படும். குடும்பத்தில் உறவினர்கள் வருகைக்குப் பஞ்சமில்லை. தொல்லை கொடுக்கும் உறவினர்கள் வருவார்கள். உடன்பிறந்தவர்கள் மத்தியில் சுமுக உறவு உண்டு என்றாலும், இளைய சகோதரர்கள் உங்களுக்கு எதிராகவே செயற்படுவார்கள். அண்டை, அயலாரிடம் மிகவும் எச்சரிக்கையாகப் பழகவேண்டும். பொதுவாக எச்சரிக்கையாகச் செயற்படுபவர்கள் கெடுதல் எதுவுமின்றி வாழ்வார்கள்.

**05-07-2015 - 23-08-2015**
**குரு, கேது சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் தொழில் துறையில் போதுமான வருமானம் ஏற்படும். தொழிலதிபர்கள் தங்கள் தொழிலுக்காக அரச கடன்களை தடையின்றிப் பெறுவார்கள். இப்போது நீங்கள் நிதானமாகச் செயற்பட்டு காரியங்கள் அனைத்திலும் வெற்றியைக் காண்பீர்கள். ஒரு சிலருக்கு திசாபுத்திப்படி திருமணம் கைகூடும். பெண்கள், கெட்டதையே அறியாத நல்ல கணவரை அடைவார்கள். அரச ஊழியர்களுக்கு விரும்பிய இடத்துக்கு மாறுதல் கிட்டும்.

**24-08-2015 - 27-10-2015**
**குரு, சுக்கிரன் சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் வியாபாரம் செய்கின்றவர் நிலையில் மாற்றம் உண்டு. பொருளாதார உயர்வும் ஏற்படும். உறவினர்களால் திடீர் வரவு- செலவுகள் ஏற்படும். அந்நிய மதத்தவர், அந்நிய மொழியினர் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். எதிர்பாராத திருப்பமாக வழக்குகளில் வெற்றி அடையலாம்.

**28-10-2015 - 15-01-2016**
**குரு, சூரியன் சாரத்தில்**

குடும்ப உறுப்பினர்கள் தேவை முழுவதும் சீராகும். திடீரென புதிய பணவரவுகள் வந்துசேரும். பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட தொல்லை தீரும். இப்போது குடும்பத்திலுள்ள அனைவரும் தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்வார்கள். உடல்நிலையில் ஏற்பட்ட சிறு சிறு பிரச்சினைகள் மாறும். திருமணமாகாத பெண்களுக்கு நல்ல வரன்கள் அமையும். இதுவரை தடைப்பட்டுவந்த காரியங்கள் கைகூடும். சகோதரர்கள் மத்தியில் இருந்துவந்த சொத்துப் பிரச்சினைகள் தீரும். உங்கள் வீட்டில் தெய்வ அருள் கிட்டும். விலகிப்போன சொந்தங்கள் வந்துசேரும். காதல் திருமணம் செய்ய நினைத்தவர்களின் எண்ணம் கைகூடாது.

**16-01-2016 - 07-02-2016**
**குரு, சூரியன் சாரத்தில் வக்ரம்**

இப்போது நீங்கள் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பெற்றோர்கள் வழியில் கூடுதலாக மருத்துவச் செலவுகள் வந்துசேரும். தொழிற்றுறையில் தொழிலதிபர்கள், கூடுதல் உற்பத்தி மூலம் அதிகமான இலாபத்தைப் பெறுவார்கள். தொழிலாளர்கள் ஒற்றுமையும் கைகூடும். உங்கள் உடன்பிறந்தவர்கள் இப்போது விட்டுக்கொடுத்துப் போவார்கள். சொத்துப்பிரச்சினை, எந்தவொரு வழக்குமின்றி முடிவுக்கு வரும். அரச பணியில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு கூடும். வெகுநாள்களாக நீங்கள் வெளிநாடு செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**08-02-2016 -14-06-2016**
**குரு, சுக்கிரன் சாரத்தில் வக்ரம்**

வெளிவட்டாரப் பழக்கம் உங்கள் மரியாதையைக் கூடுதலாக்கும். அண்டை, அயலார் உங்கள் வாக்குக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள். கடந்த காலங்களில் உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கல்களுக்கு நல்ல தீர்வுக்கு வரும். காணாமற்போன பொருள்கள் கிட்டும். மனதில் ஏற்பட்ட இருண்ட சூழ்நிலை மாறும். சுபகாரியப் பேச்சுகள் தொடங்கும். ஒரு சிலருக்கு காலம்காலமாய் நடந்து வந்த வழக்குகள் சாதகமாகி விடுதலையும் கிட்டும். கை, கால்கள் முதல் உடல் முழுவதும் நோயால் பாதிக்கப்பட்டதாக நினைப்பீர்கள். ஆனால் உங்களுக்கு எந்த நோயும் இருக்காது.

**15-06-2016 - 09-07-2016**
**குரு, சுக்கிரன் சாரத்தில்**

இப்போது நீங்கள் எடுத்துக் கொண்ட செயல்களில் கூடுதலான இலாபத்தை அடைவீர்கள். தொழில்துறை சிறப் படையும். பெண்கள் சிலர் தாய்வழி சொத்துக்களை அடைவார்கள். அந்நிய மொழியினரால் நல்ல இலாபம் உண்டு. அவர்களில் சிலர் அதிக உதவிகளைப் பெறுவார்கள். மீன் பண்ணை வைத்து


## சிங்கம்



நடத்துபவர்கள் அதிகமான இலாபத்தை அடைவார்கள். வெளிநாட்டுப் பயணம் செய்வார்கள்.

**10-07-2016-; 1-08-2016**
**குரு, சூரியன் சாரத்தில்**

நீங்கள் முந்தைய காலங்களில் அடைந்த சிரமங்கள் குறையும். பிரிந்துசென்ற பிள்ளைகள் ஒன்றுசேருவார்கள். வெளிநாடு செல்லத் திட்டமிட்டவர்கள் முறையான நுழைவிசைவு கிடைத்து வெளிநாடு செல்வார்கள். நீண்டகாலமாக உறவுப்பெண்ணை மணப்பதில் இருந்துவந்த தடை நீங்கும். உறவினர்கள் விருப்பத்தோடு உங்கள் திருமணம் முடியும். கடல் சார்ந்த தொழில் செய்கிறவர்கள் இப்போது அதிகமான இலாபத்தைப் பெறுவார்கள். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். குடும்பத்தில் இருந்து வந்த சிறுசிறு சச்சரவுகள் விலகி நல்ல ஒற்றுமை ஏற்படும்.



**அரச ஊழியர்கள்**

நிரந்தரமாகாத பணியாளர்கள் நிரந்தரப் பணியை அடைவார்கள். ஒருசிலர் எதிர்பார்த்தபடி மாறுதல் பெறுவார்கள். இப்போது உங்களுடன் பணிபுரியும் சக ஊழியர்கள் மிகவும் ஆதரவாக இருப்பார்கள். வரவேண்டிய நிலுவைத் தொகை, பதவி உயர்வுகள் வந்துசேரும். தொல்லை கொடுத்து வந்த அதிகாரிகள் இடமாற்றம் பெற்றுச் செல்வார்கள்.

**வியாபாரிகள்**

இப்போது நீங்கள் மிகவும் கனிவுடன் பேசி வாடிக்கையாளர் களைக் கவர்வீர்கள். நீங்கள் உங்கள் வியாபாரத்தை திட்டமிட்டபடி விரிவுபடுத்துவீர்கள். சக போட்டி வியாபாரிகள் விலகிச்செல்வார்கள். கொள்முதல் செய்த பொருள்கள் யாவும் நல்ல விலைக்கு விற்பனையாகும்.

# உங்களுக்கு எப்படி?

**தொழிலாளர்கள், தொழிலதிபர்கள்**

தொழிலாளர்கள் வேலைசெய்யும் இடத்தில் நிதானமாகச் செயற்பட வேண்டும். இப்போது நீங்கள் அதிகமான வேலைப்பளுவைச் சந்திக்க நேரும். தொழிற்சங்கத்தில் ஏற்படும் பிரச்சினைகள் சுமுகமாக முடியாது. எனவே தொழிலாளிகள் மிகவும் எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டும். தொழிலதிபர்கள்- தொழிலாளிகள் ஒற்றுமை விரிசலடையும்.

**பெண்கள்**

குடும்பத்தில் வாக்குவாதத்தைத் தவிர்க்க வேண்டும். இருந்து வரும் பிணி பீடைகள் கூடுதலாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒருசிலருக்கு எந்த நோயும் இருக்காது. கணவன்- மனைவி ஒற்றுமைக்குக் குறைவிருக்காது. குழந்தைப் பாக்கியம் இல்லாத பெண்களுக்கு குழந்தைப் பாக்கியம் ஏற்படும். பிரிந்துசென்ற கணவன்- மனைவி ஒன்றுசேருவார்கள்.

**மாணவர்கள்**

இப்போது நீங்கள் பாடத்தை ஒன்றுக்கு மூன்றுமுறை படிக்கவேண்டும். கடுமையான முயற்சியால் மட்டுமே நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும். ஒருசில மாணவர்களுக்கு தண்ணீர்க் கண்டம் உள்ளது. எனவே உல்லாசப் பயணம் செல்லும் நேரத்தில் நீர்நிலைகளில் விளையாடாமல் இருப்பது நல்லது. மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு நடக்கவேண்டும்.

**விவசாயிகள்**

விவசாயம் செய்வோர் நல்ல இலாபத்தைப் பெறுவார்கள். நல்ல விளைச்சல் பெற வேண்டுமென்றால், உங்களது நேரடிக் கவனம் வேண்டும். பணப் பயிர்கள் பயிரிடுவோர் அதிகமான இலாபத்தைப் பெறுவார்கள். ஒருசிலர் பிறர் சொத்தை வாங்குவார்கள். விவசாயத்தில் ஏற்றமான காலம் இது. மாடு, கன்று, பால் பாக்கிய விருத்தி ஏற்படும். ஒருசிலர் பாற்பண்ணை வைத்து நடத்தும் வாய்ப்பு கூடிவரும்.

**அரசியல் பிரமுகர்கள்**

பொதுச்சேவையில் உள்ளவர்கள் மிகவும் கனிவானவர்களாக மாறுவார்கள். அரசியல் பிரமுகர்கள் நினைத்தபடி, தலைமையிலிருந்து நல்ல பதவி வந்துசேரும். பொதுமக்கள் மத்தியில் உங்கள் சேவைக்கு நல்ல பாராட்டுக் கிட்டும். அரசியலில் நீங்கள் எதிர்பார்த்தபடி வெற்றியைக் காண்பீர்கள். எதிர்ப்பாளர்கள் விலகிச்செல்வார்கள். நீங்கள் நினைத்தபடி காரிய வெற்றிகள் உண்டாகும்.

**மக நட்சத்திரக்காரர்களுக்கு:**

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சுய முயற்சியில் மேற்கொள்ளும் எந்தவொரு காரியத்திலும் வெற்றி யைக் காண்பீர்கள். இந்த ஆண்டு குரு பகவான் ராசியில் அமர்ந்துள்ளதால், நீங்களே உங்கள் காரியத்தில் முன்னின்று செயற்பட்டால் கூடுதல் இலாபம் உண்டு. மற்றவர்களை நம்பக் கூடாது. கணவன்- மனைவி ஒற்றுமைக்காக விட்டுக்கொடுத்துப் போவது அவசியம். செலவுகள் கூடுதலாகின்றது. வருமானம் குறைகின்றது. எனவே நிதானித்துச் செயற்பட வேண்டும்.

**பூர நட்சத்திரக்காரர்களுக்கு:**

மற்றவர்களுக்கு வாக்குறுதி கொடுக்காதீர்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும். வாழ்க்கையில் பொருளாதாரப் பிரச்சினை இருக்காது. முன்னேற்றமாகவே உள்ளது. உங்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள்கூட இப்போது உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுவார்கள். மக்கள் சேவையில் உள்ளவர்கள் புதிய பொறுப்புகளைப் பெறுவார்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாத தம்பதியினருக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டும்.

**உத்திர நட்சத்திரக்காரர்களுக்கு:**

கணவன்-மனைவி உறவில் விரிசல் வராது. விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. குடும்பம் கெட்டால் குழந்தைகள் நலனும் கெடும் என்பதை உணரவேண்டும். தந்தை, மகன் உறவு சிறப்பாக இருக்காது. எனவே பிள்ளைகளால் தொல்லை வராத அளவில் பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும். தனிக் குடித்தனம் செல்ல ஆர்வம் காட்டும் பிள்ளைகளை அனுப்பி வைப்பது நல்லது. ஒரு சிலர் மருத்துவ சிகிச்சைக்கு கூடுதல் செலவு செய்வார்கள். பயணத் தில் பொருள்களை மிகவும் விழிப் பாகப் பார்த்துக் கொள்ள வேண் டும். வழக்குகள் சாதகமாகும். பணியாளர்கள் கூடுதல் வருவாயைப் பெறுவார்கள்.

**பரிகாரம்**

இந்த வருடம் சிறப்பாக அமைந்திட 27 கொண்டைக்கடலை எடுத்து மஞ்சள் துணியில் முடிந்து, அதனைத் தங்கள்வசம் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு வருடம் முடிந்த பின்பு அதனை ஏரியில், ஆற்றில் போடவேண்டும். (கடலில், கிணற்றில் போடக்கூடாது)

# எதிர்கால வாழ்க்கை



ஒரு நாள் முல்லா தெருவழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். ஒரு குடிசையின் வாசலை அவர் கடந்து சென்ற சமயம், குடிசைக்குள்ளிருந்து ஏதோ சத்தம் கேட்கவே உள்ளே சென்றார். அந்தக் குடிசையில் ஒரு ஏழை விதவைப் பெண் வசித்து வந்தாள். துணிகளைத் தைத்துக் கொடுத்து அவள் கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பத்து வயதில் ஒரு மகன் இருந்தான். அந்தக் குடும்பத்தைப் பற்றி முல்லாவுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் மீது அவருக்கு அனுதாபமும் உண்டு. வீட்டுக்குள் தாயும் மகனும் ஏதோ சச்சரவில், ஈடுபட்டிருந்தனர். 'இங்கே என்ன நடக்கிறது?' என்று முல்லா வினவினார். 'முல்லா அவர்களே இவனைப் பாருங்கள். பாடசாலைக்குப் போக மாட்டேன் என்று அடம்பிடிக்கிறான், அறிவுரை கூறிப் பார்த்தேன், அடித்து மிரட்டிப் பார்த்தேன் ஒன்றுக்கும் மசியமாட்டேன் என்கிறான்– என்றாள் தாய் வேதனை யோடு. 'குழந்தாய் நீ பாடசாலைக்குப் போக வேண்டியது அவசியமல்லவா? அது உனது எதிர்காலத்துக்கு நல்ல தல்லவா?' என்று முல்லா சிறுவனுக்கு புத்திமதி கூறினார். சிறுவன் கேட்பதாக இல்லை. நான் பாடசாலைக்குப் போகப்போவதே இல்லை என்று அடம் பிடித்தான். முல்லா சுற்றும் முற்றும் பார்த்தார். தைப்பதற்காக அந்தச் சிறுவனின் தாய் வைத்திருந்த விலை உயர்ந்த துணி ஒன்று அவர் கண்களில் பட்டது. அதை எடுத்து முல்லா துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டு விட்டார். அதைக்கண்டு தாயும் மகனும் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தனர். அம்மா முல்லா விலை உயர்ந்த துணியைக் கிழித்துப் பாழாக்கி விட்டாரே? என்று திகைப்போடு கேட்டான் சிறுவன். பாடசாலைக்குப் போக மாட்டேன் என்று உனது எதிர்கால வாழ்க்கையையே பாழாக்கிக் கொள்கிறாயே அதைவிட இந்த விலை உயர்ந்த துணி பாழானமை பெரிய விடயமா என்றார் முல்லா. இந்தச் சொற்கள் அவன் மனத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கின. உடனே புத்தகங்களை எடுத்துக் கொண்டு பாடசாலைக்குப் புறப்பட்டான். அவன் சென்றபிறகு முல்லா தாம் கிழித்த துணியின் மதிப்புக்கேற்ற விலையை அந்தப் பொண்ணுக்குக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

# கூழைக்கடா



சாம்பல் கூழைக்கடா என்பது (பெலிக்கனிடே) கூழைக்கடாக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பறவை. இந்த இனத்தின் எண்ணிக்கை மிதமான–துரித வீதத்தில் குறைந்து வருகிறது. தெற்காசியாவில் தென் பாகிஸ்தானிலிருந்து இந்தியா உட்பட கிழக்கே இந்தோனேசியா வரை கூழைக்கடாக்கள் இனப்பெருக்கம் செய்கின்றன. கூழைக்கடாக்கள் அண்டார்டிக்காவைத் தவிர ஏனைய அனைத்துக் கண்டங்களிலும் காணப்படுகின்றன. பெரிய உடலும் சிறு கால்களும் கொண்டவை கூழைக்கடாக்கள்; அவற்றின் சிறப்பம்சம் தொங்கும் பை போன்ற தாடை. ஏனைய கூழைக்கடாக்களை விடவும் பழுப்புக் கூழைக் கடாக்கள் சிறியவை; தாடையின் மேல்பகுதியில் புள்ளிகள் தென்படும். பளிச்சென்ற நிறமில்லாததும், பழுப்பு நிறமும் இவற்றை ஏனைய கூழைக்கடாக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும். கூழைக்கடா இனத்திலேயே சிறியதான பழுப்புக் கூழைக்கடா 125–152 செ.மீ. நீளமும், 4.1–6 கி.கி. நிறையும் உடையவை. தொங்குபை இளஞ் சிவப்பாகவோ, ஊதா நிறத்திலோ இருக்கும். தால்மேசியன் கூழைக்கடா என்பதே இந்த இனத்தில் பெரியதெனக் கருதப்படுகிறது. இது 15 கிலோ நிறைவரை இருக்கும். சிறகுகள் விரிந்த நிலையில் 11.5 அடி அகலம் இருக்கும். கூழைக்கடா நன்றாக நீந்தக் கூடியது. மீன் இதன் முக்கிய உணவு. கூழைக்கடாக்கள் பொதுவாக இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. வளர்ந்த நிலையில் வெண்ணிறமாக இருக்கும் பறவைகள் ஒரு வகை. இவை தரையில் கூடு கட்டி வாழ்கின்றன. ஆஸ்திரேலிய, தால்மேசிய, வெள்ளைக் கூழைக்கடாக்கள் இவற்றுள் அடங்கும். மற்றொரு வகை, வளர்ந்த நிலையில் பழுப்பு நிறம் கொண்டிருக்கும். இவை மரத்தில் கூடுகட்டும். பழுப்புக் கூழைக்கடா, புள்ளிவாய்க் கூழைக்கடா போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவவையாகும். பெரு நாட்டுக் கூழைக்கடா கடற்புறங்களில் உள்ள பாறைகளில் கூடு கட்டி வாழும்.





# அச்சும் தாத்தா

காட்டுப்பக்கம் தாத்தாவுக்கு
காடு போல தாடியாம்
மாடி மேல நிக்கும் போது
தாடி மண்ணில் புரளுமாம்

ஆந்தை ரெண்டு கோழி மைனா
அண்டங்காக்கா குருவிகள்
பாந்தமாக தாடிக்குள்ளே
பதுங்கிக் கொண்டு நின்றன

உச்சி மேல நின்ற தாத்தா
உடல் குலுங்க தும்மினார்
அச்சும் அச்சும் என்றபோது
அவை அனைத்தும் பறந்தன



# வாழ்வில் அழகைத் தருவது மகிழ்ச்சியே



செல்வம் மிகுந்த ஒரு பெண், மனநல மருத்துவரைத் தேடிச் சென்றாள். தனது வாழ்வு மகிழ்வற்றதாக மாறி விட்டதென மருத்துவரிடம் கூறிய அந்தப்பெண், மகிழ்வைக் கண்டடையும் வழிகளை அறிய விரும்பினாள். ஒரு நாள், தனது அலுவலகத்தைக் கூட்டிச் சுத்தம் செய்துவந்த பெண்ணொருத்தியை, மனநல மருத்துவர் அழைத்தார். அந்தப் பெண் வந்ததும், மருத்துவர், செல்வம் மிகுந்த பெண்ணிடம், இவர் பெயர் மரியா. இவர் தனது வாழ்வில் மகிழ்வை எவ்விதம் கண்டடைந்தார் என்பதைச் சொல்வார். தயவு செய்து கேளுங்கள் என்று கூறினார்.

மரியா, அருகிலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து, பேசத் தொடங்கினாள். என்னுடைய கணவர் மலேரியா நோயினால் இறந்தார். மூன்று மாதங்கள் சென்றபின், எனது ஒரே மகன் ஒரு கார் விபத்தில் இறந்தான. எனக்கென எவருமில்லை, எதுவுமில்லை என்று உணர்ந்தேன். உண்ணவோ, உறங்கவோ முடியவில்லை. தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் அவ்வப்போது எழுந்தது. ஒருநாள் நான் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பியபோது, ஒரு குட்டிப் பூனை தெருவில் என்னைப் பின் தொடர்ந்து வந்தது. வெளியே அதிக குளிராய் இருந்ததால், அந்தப் பூனையை வீட்டுக்குள் வர அனுமதித்தேன். பாலை ஒரு தட்டில் ஊற்றி, அதற்கு முன் வைத்தேன். அதை முற்றிலும் குடித்து முடித்த பூனைக்குட்டி, எனது கால்களில் தனது உடலைத் தேய்த்தது. அதைக் கண்டு, நான் சிரித்தேன். அப்போதுதான் உணர்ந்தேன், நான் சிரித்து பல நாள்கள் ஆகிவிட்டன என்பதை. அந்த வேளையில், எனக்குள் ஓர் எண்ணம் உதித்தது. இந்தக் குட்டிப்பூனைக்கு நான் செய்த உதவி, இதுவரை என்னிடமிருந்து காணாமற் போயிருந்த புன்னகையை மீண்டும் தந்ததே. இதேபோல், மற்றவர்களுக்கு உதவிகள் செய்தால், நான் தொலைத்து விட்ட மகிழ்வை மீண்டும் கண்டடைய முடியுமே என்று சிந்தித்தேன். அடுத்தநாள் காலை, கொஞ்சம் பலகாரம் செய்து, எனது வீட்டுக்கு அருகில் பல நாள்களாய் படுத்த படுக்கையாய் இருந்த ஒருவருக்கு அதை எடுத்துச் சென்றேன். கண்களில் கண்ணீர் வழிய, அவர் தந்த புன்னகை, என்னை மீண்டும் மகிழ்வில் நிறைத்தது. ஒவ்வொரு நாளும் எவராவது ஒருவருக்கு ஏதாவது ஒருவகையில்உதவிகள்செய்யத்தொடங்கினேன்.
அவர்களிடம் நான் கண்ட மகிழ்ச்சி, என்னையும் பற்றிக் கொண்டது. இன்று, என்னைவிட, மகிழ்வோடு உறங்கச் செல்லும் ஒருவர் இருப்பாரா என்று எனக்குத் தெரியவில்லை என்று மரியா பேசி முடித்தாள்.
மரியாவின் கதையைக் கேட்ட செல்வம் மிகுந்த அந்தப் பெண், தனது கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி,மரியாவின்கைகளைப் பற்றி, நன்றி சொன்னார். மருத்து வருக்கும் நன்றி சொல்லி விட்டு, புன்னகையோடு அவ்விடம் விட்டுச் சென்றார். நீ எவ்வளவு மகிழ்வாய் இருக்கிறாய் என்பது வாழ்வின் அழகை நிர்ணயிக்கப் போவதில்லை; உன்னால் மற்றவர்கள் எவ்வளவு மகிழ்வாய் உள்ள னர் என்பதே வாழ்வின் அழகைக்காட்டும் அளவுகோல்.



## மேர்வின், சஜின், துமிந்தவுக்கு வேட்பு மனு வழங்கப்படாது

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மேர்வின் சில்வா, சஜின்வாஸ் குணவர்த்தன, துமிந்த சில்வா ஆகியோருக்கு இம்முறை போட்டியிட வாய்ப்பளிக்கப்படமாட்டாது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் இருப்பதன் காரணமாகவே, இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு போட்டியிட இடமளிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்து பிரதி அமைச்சர் சனத் ஜெயசூரிய விலகியுள்ளார். அத்துடன் தாம் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார்.

தற்போது பாகிஸ்தானில் தங்கியுள்ள அவர், இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அறிவித்துள்ளார். (த)


### கண்ணீர் அஞ்சலி

**பொன்னையா நடராசா**

கொடை வள்ளலும் பிரபல தொழில் அதிபருமான பொன்னையா நடராசா அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து நாமும் எமது இல்லக் குழந்தைகளும் ஆழ்ந்த கவலையடைந்தோம்.

அப்பெருமகனார் எமது இல்லக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக அரிய நூல்களையும் அப்பியாசப் புத்தகங்களையும் வழங்கி ஆதரவு நல்கியமை எம்மால் என்றும் மறக்கவியலாத ஒன்றாகும். அத்துடன் பல ஆன்மீக விளம்பரங்களையும் பிரசுரித்து வழங்கி சமூகத்திற்குள் நல்லொழுக்கம் நற்பண்புகள் வளர பேருதவி புரிந்தவர்.

விதியின் கணக்கினை வென்றிட எம்மால் இயலாதே அதனால் அவர்தம் பிரிவுக்காக எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்-தி.இராசநாயகம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(c 16658)

### முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 12 05 1952

விண்ணில் 17 07 2014

அமரர் **பெரியதம்பி இராசையா**


அப்பா என்றழைத்து அருமை மொழி பேசி
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை உம் நினைவு
இனியமொழி பேசி இங்கிதமாய்
ஈன்றெடுத்த தாய் போல எமை
உலகம் போற்றிட வாழ்வித்தீரே
ஊரார் உன் புகழ் பாடவே
எமை வழிகாட்டினீரே - அப்பா
ஏணியாய் நாம் உயர
ஐயம் இன்றி உழைத்தீரே
ஒய்யாரமாய் வாழும் வேளையில் எமைவிட்டு
ஓடோடி எங்கு சென்றீர் அப்பா....
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது உம் நினைவு
என்றும் உன் புகழ் பாடி வாழ்ந்திடுவோம் அப்பா....
உங்கள் ஆசியுடன் வாழ்ந்திடுவோம் அப்பா...

(61738)(10.6)

72, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

### ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.11.1931

மறைவு 14.07.2009

அமரர் **சபாபதி வீரசிங்கம்**

ஆண்டுகள் ஆறு ஆனாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
உணர்கின்றோம் எப்போதும்
உங்கள் அன்பின் ஆழத்தையும்
முகத்தையும்
எப்போதும் நினைக்கின்றோம்
அப்பா!

நாவலடி லேன், கோக்குவில் மேற்கு, கோக்குவில்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(61743)(10.6)

### வேலையாள்கள் தேவை

**இல 330, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**
**077 410 3245, 077 778 0995**


மேலே குறிப்பிட்ட முகவரியில் அமையவுள்ள உணவகத்துக்கு வேலையாள்கள் தேவைப்படு கின்றனர்.

1) முகாமையாளர்
2) காசாளர்(கணினி அறிவு இருக்க வேண்டும்)
3) உபசரிப்பாளர்
4) ரீ மேக்கர்
5) சமையல்காரர்
6) உதவியாளர்
7) ரொட்டி மேக்கர்
8) தோசை மேக்கர்
9) யூஸ் மேக்கர்

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் 12.07.2015 காலை 9.30 மணியளவில் நேரில் வரவும். (61749)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111

### கண்ணீர் அஞ்சலி



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆசிரியை திருமதி சி. சிவராசா அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா அருணாசலம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

(60559)(10.6)

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையைச் சேர்ந்த
திருமதி ஒலிவற் அன்ரன் உதயகுமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

**இராசையா பிலிப் பிரான்சிஸ்**

அவர்களின் மரணச் செய்தியறிந்து துயர் அடைந்தோம். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வேண்டுவதுடன் இவரது இழப்பினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்தி நிற்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம் (தேசிய பாடசாலை)

(61747)(10.6)

### கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் பணியாளராக கடமையாற்றும் சி.சதீஸ் அவர்களின் அன்புத் தந்தை வல்லிபுரம் சிவரட்ணம் அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி யடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஊழியர் நலன்புரி சங்கம்
நல்லூர் பிரதேச சபை

### கண்ணீர் அஞ்சலி



பளை நகரம் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றிய காலஞ்சென்ற கோ.பத்மநாதனின் மகன்

**பத்மநாதன் பாவலன்**

05.07.2015 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமான செய்திகேட்டு மிகவும் மனம் வருந்துவதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

சி.பாலசுந்தரம் குடும்பம்.

(61754)(10.6)

## கேள்வி அறிவித்தல்

### அனுமதிக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) -2015

**வீதி விளக்குகள் கொள்வனவு செய்து பொருத்துதல்**

NP/14/44 (1)/02/02/ PSDG/So.P.Sy/2015/01 (Solar Power System)


1. வடமாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டத்திற்கான கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. **தலைவர், பெறுகைக்குழு, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு, வடமாகாணம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Shedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு (தொலைபேசி இல.024 3244115)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் எமது அலுவலகத்தில் வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை 29.07.2015 வரையான காலப்பகுதியிலிருந்து கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 07.07.2015 திகதியிலிருந்து 29.07.2015 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1500.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 29.07.2015 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்நிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77(எழுபத்தேழு நாள்கள்-14.10.2015) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44 (1)/02/02/ PSDG/So.P. Sy/2015/01 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்து பொருத்துதல் (Solar Power System) | 01 | 3 மாதங்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | ரூ.10,000.00 | 04.11.2015 |

11. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 21.07.2015 ஆம் திகதி (செவ்வாய்கிழமை) மாலை 14.30 மணிக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
முல்லைத்தீவு.
06.07.2015

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக முன்னாள் பிரதி தலைவர் **ப.சுத்தானந்தன்** அவர்களின் அன்புத் தாயும், கழக ஆர்வலர் **திருமதி திலகவதி சிவலிங்கத்தின்** அன்பு மாமியுமாகிய

**திருமதி பேரம்மா பத்மநாதன்**


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வளர்மதி முன்னேற்றக் கழகம்**
(C/16655) (10.6) **சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.**

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு வைத்திலிங்கம் (அண்ணாவி)

(சிலாவத்தை, முல்லைத்தீவு)



சிலாவத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு வைத்திலிங்கம் (அண்ணாவி) 06.07.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் சிவகுரு (அண்ணாவி) சிவகுரு கண்ணகை தம்பதியினரின் அன்பு மகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் கெங்காதரன், கமலநாதன், ஜெகநாதன் (லண்டன்), காந்திமதி, இந்துமதி, வளர்மதி காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், தவமதி ஆகியோரின் அன்பு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிலாவத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிலாவத்தை, முல்லைத்தீவு.** (c 16656)
தகவல் :- **வை.கெங்காதரன் (மகன்-ரகு)**

### திருமதி கனகம்மா துரைசிங்கம்



12/1, மணிக்கூட்டு ஒழுங்கை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா துரைசிங்கம் நேற்று (06.07.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்-சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் (பொலீஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, சந்திரதேவன் மற்றும் சந்திராதேவி, சத்திய தேவன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், விஜயசந்திரன், முத்துலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), யோகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், கவிதா (ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை), கோகுலன் (Baby Net) தர்சிகா, சுகன்யா (ஜேர்மனி) ரம்மியா (ஜேர்மனி) பிரணவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, முத்துவேலு, பரமசாமி, துரைராஜா ஆகி யோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2015) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**12/1, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.** (61757) (10.6)
தகவல்: **குடும்பத்தினர். 077 844 8666**

### வினாசித்தம்பி குமாரவேலு

**தோற்றம்** 18.04.1932 **மறைவு** 06.07.2015



நீர்வேலி மத்தி நீர்வேலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி குமாரவேலு நேற்று (06.07.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி-கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான சின்னத்தம்பி- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் மகேஸ்வரி (நீர்வேலி), சிவபாலசுந்தரம்(நீர்பாசன பணிப்பாளர் , கொழும்பு), சிவராசா (பிரான்ஸ்), நடனபாதம்(நீர்வேலி), தேவராசா(கனடா), செல்வராசா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுப்பிரமணியம், நாகேஸ்வரி, சுலோசனா, ஜெயந்தி, ஜெயானந்தி, ராஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நர்த்தகி, சங்கீதா, கௌசல்யா, Dr.ரகுராம் (பொது வைத்தியசாலை, திருகோணமலை), சகிராம், முகுந்தன், தமிழ்ச்செல்வன், லக்சனா, ஜீவனா, பவிதா, யசோதா, காலஞ்சென்ற திலக்சன், மற்றும் கம்சிகா, அபிஷான், அட்ஷயா, கௌதமன், கிரன், நிலோஜிதா, காயத்திரி, ஜெகன், ரம்யா ஆகியோரின் அன்புப் பேரனும், தேஷ்வித், ஜஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மத்தி, நீர்வேலி.** (61755)
தகவல் :- **குடும்பத்தினர்.**

# அனைத்துக் கட்சிகளுக்கும் சம உரிமை வழங்க இயலா

கொழும்பு, ஜூலை 7

பதிவு செய்யப்பட்ட அனைத்துக் கட்சிகளும் தேர் தலில் போட்டியிடாமையால் அனைத்து கட்சி களுக்கும் சம உரிமை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித் துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே மஹிந்த தேசப்பிரிய இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துக் கட்சிகளும் போட்டியிடாமையே இதற்கான காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலின்போது ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.


தேர்தல் காலங்களில் பிரதான வீதிகள் மற்றும் வீதி ஓரங்களில் உள்ள மின்கம்பங்களில் வேட்பாளர் களின் பெயர் மற்றும் இலக்கம் என்பன வண்ணப்பூச்சுக்கள் மூலம் எழுதுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு இடம்பெற்றால் குறித்த வேட்பாளர் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாறான செயல்களைக் கட்டுப்படுத்த வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் மின்சார சபைக்கு அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார். (த)

## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம் வின்சன்ற் துரைராஜா

(ஓய்வுநிலை குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர் (C.O) பரந்தன். திட்ட முகாமையாளர் (P.M) இரணைமடு)



கரவெட்டியைப்பிறப்பிடமாகவும் 5ஆம் வாய்க்கால் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் வின்சன்ற் துரைராஜா 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் களான பஸ்தியாம்பிள்ளை ஆசீர் வாதம்-அன்னம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம்-ஞானம்மா தம்பதிகளின் மருமகனும் மேரி கொன் செப்ஸனின் அருமைத் துணைவரும் வீபீஸ்அன்ரனயினஸ் (லண்டன்), எமிலி நிசாந்தினி (அவுஸ்திரேலியா), ஜெயமாறியோ விஜந் (இந்தியா) ஆகியோரின் அண்டித்தந்தையும் விஜயந்தி(லண்டன்) மரினோ டயான் (அவுஸ்திரேலியா), தர்மினி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இவாஞ்சலின், டியோனா(லண்டன்), மேகன், நேத்தன்(அவுஸ்திரேலியா), றெறன்ஸ் பிரியன் (இந்தியா) ஆகியோ ரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற அன்ரனி யோசப் (குலம்) மற்றும் ஜோசப்பின் புஸ்பராணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் P.தர்மநாயகம் (ஓய்வுநிலை நீர்பாசன பொறியியலாளர்), ஜோசப் செல்வராஜா(USA), V.J.B தவராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின்பூதவுடல் நாளை (08.07.2015) புதன்கிழமைபி.ப 3.00மணிக்கு திருப்பலிப் பூசைக்காக கரவை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் கரவை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெற்றோல்செட் ஒழுங்கை கரவெட்டி 021 226 2558** (C 16657)
தகவல் :- **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

### எஸ்.பி.நடராசா



எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய தொழிலதிபர் எஸ்.பி.நடராசா (அண்ணா தொழிலகம்) அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும்.** (61751)
**வேணி களஞ்சியம் யாழ்ப்பாணம்**
**வேணி றேடர்ஸ் கொழும்பு**
**கோகுல் கொழும்பு.**

## மரண அறிவித்தல்

### திருமதி குணசேகர அம்மா சுந்தரம்



முடமாவடியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குண்சேகர அம்மா சுந்தரம் நேற்று (06.07.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும்காலஞ்சென்றவர்களான அம்பலவி சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வசந்தமலர் மற்றும் திருச்செல்வம் , காலஞ்சென்ற வசந்தராதேவி மற்றும் ஞானச்செல்வம் (இந்தியா), கிருபாகரன்(லெபனான்), கருணாகரன்(ரஜினி மோட்டேர்ஸ்), கருணாநிதி, காலஞ்சென்ற நடேஸ் மற்றும் உதயகுமார் ஆகியோரின் அன்பு தாயாரும் காலஞ்சென்றவர்களான நடராசா, இராசையா, சுந்தரம், பரம்சோதி, வல்லிபுரம், புஸ்பராசா ஆகியோரின் அன்பு ச்சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2015) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**446, இராமலிங்கம் றோட், திருநெல்வேலி கிழக்கு, நல்லூர்.** (61758)
தகவல் :- **குடும்பத்தினர்.**

# புதிய அரசின் மூலம் நிவாரணம் தருவேன்


### கூறுகிறார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 7

விரைவில் தாம் புதிய அரசு ஒன்றை உருவாக்கவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டியிருந்தார் .

தற்போதைய அரசின் ஊடாக அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள



வில்லை எனவும், தன்னுடைய அரசின் கீழ் வழங்கப்பட்ட நிவாரணங்கள் மாத்திரமே மீதப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனால் எதிர்வரும் நாள்களில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசினால் அரச ஊழியர்களுக்கு மீண்டும் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மஹிந்த ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக நியமிக்கவில்லை என்றாலும், உருவாகவுள்ள புதிய அரசின் கீழ் பிரதமராகச் செயற்படுவதற்கான வாய்ப்பு அவருக்குக் காணப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டீ.பீ.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

வாரியபொல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (த)

# உதயங்க வீரதுங்கவின் கொள்கலன் சிக்கியது

கொழும்பு, ஜூலை 7
கடந்த மஹிந்த ஆட்சியில் ரஷ்யாவுக்கான தூதுவராக இருந்த உதயங்க வீரதுங்கவுக்குச் சொந்தமான பொருள்கள் அடங்கிய கொள்கலன் நிதி மோசடிப் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மஹிந்த ஆட்சியின் போது உதயங்க வீரதுங்க ரஷ்யாவுக்கான இலங்கையின் தூதுவராக கடமை வகித்திருந்தார். அத்துடன் உதயங்க வீரதுங்க ராஜபக்ஷ குடும்பத்தின் நெருங்கிய உறவுக்காரர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆட்சியில் இருந்து மஹிந்த வீழ்த்தப்பட்ட பின்னர் இவர் தலைமறைவாகியிருந்தார்.

உக்ரைன் போராளிகளுக்கு ஆயுதங் கடத்தினார் என உதயங்க வீரதுங்க மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. மிக் விமானக் கொள்வனவில் பெரும் நிதிமோசடியில் ஈடுபட்டுள்ள முக்கிய சந்தேகநபராக உதயங்க வீரதுங்க மற்றும் கோத்தபாய ஆகியோர் இனங் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் உதயங்க வீரதுங்கவின் இராஜதந்திரக் கடவுச் சீட்டை வெளியுறவு அமைச்சில் ஒப்படைக்கு மாறு பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அது ஒப்படைக்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடவுச்சீட்டை ஒப்படைக்கும் வரை கொள்கலனை விடுவிப்பதில்லை என வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மஹோனி தெரிவித்தார்.(த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆசிரியர் சைவப்புலவர் சைவ சித்தாந்த பண்டிதர்
**கார்த்திகேசன் கமலநாதன்**
(J.P,BA(Hons) PGDE,MA)
அவர்கள் எமது பாடசாலையில் சேவையாற்றி ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதையிட்டு பாராட்டுவதோடு அவர் மேலும் பல பதவி உயர்வுகளை பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
**யா/சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம்**

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் வீடு வாடகைக்குத் தேவை

யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தங்குவதற்கு உகந்த சகல வசதிகளுமுடைய 15 பேர் தங்கக் கூடிய குறைந்தது 5அறைகள் கொண்ட ஒரு வீடு வாடகைக்கு தேவைப் படுகின்றது. வீடு யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து ஒரு கிலோ மீ ற்றர் சுற்று வட்டாரத்துக்குள் இருக்க வேண்டும். வீடு வாடகைக்கு தர விரும்புபவர்கள் மேலதிக தகவல்கள் அடங்கிய படிவத்தை அலுவலக நேரத்தில் வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து பின்வரும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாக மூடிய கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் வீடு வாடகைக்குக் கொடுப்பதற்கான விண்ணப்பம் எனக்குறிப்பிட்டு 16.07.2015 பிற்பகல் 3.00இற்கு முன்பு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும.

பணிப்பாளர் போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.
07.07.2015 (c 16653)





வார இறுதி வகுப்புகளும் ஆரம்பம்.

Why Choose BCAS for QS & Civil Engineering?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தயேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 15 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar


**PHYSICS GROUP CLASSES**
(English Medium) A/L 2016,2017
College Lane (Near JHC)
071 226 7733 (61752)

### வீடு வாடகைக்கு

124/2, பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள 8 அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
(60132)(4.3.7) தொடர்பு: 076 536 7623

### திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு,வெளி நாட்டு மணமக்களின் ஜாதகங்கள் நிறைய உண்டு. மணமக்களைத் தேடுவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்
இல. 100 அரசடி வீதி,கந்தர்மடம்
(யாழ்/இந்து மகளிர் கல்லூரியடி)
T.P: 077 899 6281

## துயர் பகிர்கின்றோம்

### எஸ்.பி.நடராசா



எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய தொழிலதிபர் எஸ்.பி. நடராசா (அண்ணா தொழிலகம்) அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம்.
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி,
மருதனார்மடம்,
சுன்னாகம். (61756)

றோயல் சேர்விஸ் நிலையம்
(பிறைவற் லிமிட்டற்)
சாய்ராம் மோட்டர்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்.

## கேள்விப்பத்திரம்

### வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ.து)

மேற்படி சங்கத்தின் தலைமைப்பணிமனையில் உள்ள பாவிக்க முடியாத வாகனங்கள், தையல் இயந்திரங்கள், பால்சேகரிக்கும் பெட்டி, ஜெனரேட்டர், அலுமாரிகள், உட்பட இரும்புப்பொருள்கள் மூடிய கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

| இல. | கூறுவிலைக்கான பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | லான் மாஸ்ரர் (பெட்டியுடன்) | 01 |
| 02 | முச்சக்கர வண்டி | 01 |
| 03 | உழவு இயந்திரம் (ஒரு பகுதி) | 01 |
| 04 | தையல் இயந்திரம் | 04 |
| 05 | ஜெனரேட்டர் (பெரிது) | 01 |
| 06 | பால் சேகரிக்கும் பெட்டி | 01 |
| 07 | கூலர் கொம்பிறேசர் | 01 |
| 08 | அலுமாரி இரும்பு | 08 |
| 09 | சுருக்கு கதவு இரும்பு | 04 ½ |
| 10 | சுருக்கு கதவு பெரிது | 01 |
| 11 | இரும்பு அயன் சேவ் | 02 |
| 12 | கியர் பொக்ஸ் | 03 |
| 13 | இரும்பு ஸ்ரூல் | 10 |
| 14 | மேசை தராசு | 05 |
| 15 | மண்.எண்.பரல் | 16 |
| 16 | பழைய ஏசி | 01 |
| 17 | பிறிச் | 01 |
| 18 | ரியூப்லைட் | 20 |
| 19 | ½ அலுமாரி | 01 |
| 20 | பயில் அலுமாரி | 11 |
| 21 | இரும்புக் கதிரை | 20 |
| 22 | பிளாஸ்ரிக் கதிரை | 50 |
| 23 | பழைய இரும்புகள் | |

மேற்குறிப்பிட்ட பொருள்களுக்கான கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவம் ஒன்று ரூபா 100/= ஆகும். அத்துடன் மீளளிக்கக் கூடிய ரூபா 1000/= செலுத்தி சங்க காசாளரிடம் தனித்தனியாகப் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்வதுடன் பற்றுச்சீட்டின் பிரதிகளும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 20.07.2015 ஆம் திகதிக்கு முன்னர் **"தலைவர், வவுனியா பல நோக்கு கூட்டுறவு சங்கம், குட்செட் வீதி, வவுனியா"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். பொருள்களை கிழமை நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை பார்வையிடலாம்.
கேள்விப்பத்திரங்கள் 23.07.2015 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு சங்கத் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பதாரிகள் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அனைவரும் சமுகமளித்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பெறுமதியின் அரைவாசி பணத்தை உடன் செலுத்தல் வேண்டும். மிகுதி பணத்தை மூன்று நாள்களுக்குள் செலுத்தி பொருள்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

தொலைபேசி:
024 2222784,
024 2222384

தலைவர்
வ.ப.நோ.கூ. சங்கம்,
பொதிமண்டப வீதி, வவுனியா.
30.06.2015

# சமூக விரோதிகளுக்கு வேட்புமனு வேண்டாம்

## வலியுறுத்துகிறார் சோபித தேரர்

ஊழல் மோசடியாளர்கள், போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையோர் உட்பட சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அரசியல் கட்சிகள் வேட்புமனு வழங்கக் கூடாது என்றும், உயரிய சபையாக விளங்கும் நாடாளுமன்றத்துக்குத் தகுதியானவர்களையே மக்கள் தெரிவுசெய்யவேண்டும் என்றும் மாதுலுவாவே சோபித தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பவ்ரல் அமைப்பின் மார்ச்-12' பிரகடனத்துக்கு 10 இலட்சம் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டது. இதில் எத்தகைய வேட்பாளர்களுக்கு அரசியல் கட்சிகள் வேட்புமனு வழங்க வேண்டும் என்பது உட்பட சிறந்ததொரு அரசியல் கலாசாரத்துக்குரிய அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் நிகழ்வு விகாரமா தேவி பூங்காவில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சோபித தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

இவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றமானது சட்டவாக்கச் சபையாக விளங்குகிறது. அங்குதான் நாட்டுக்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்படு கின்றன. எனவே, சட்டம் பற்றி தெரிந்தவர்களையும், நாட்டுக்காக கள்ளங்கபடமற்றவகையில் சேவையாற்றக்கூடியவர்களையுமே மக்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்து அனுப்பவேண்டும். அப்போதுதான் நாட்டுக்குத் தேவையான கொள்கைகள் உருவாக்கப்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும்.

இதைவிடுத்து ஊழல், மோசடியாளர்களையும், போதைப்பொருள் வியாபாரிகளையும், பாலியல் வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களையும் நாடாளுமன்றத்துக்கு ஒருபோதும் அனுப்பக் கூடாது. முன்னைய நாடாளுமன்றத்திலும் இவ்வாறானவர்கள் இருந்தார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கட்சிகள் வேட்புமனு வழங்கக் கூடாது. மோசடியாளர்களுக்கு அனுமதி வழங்கும் ஒரு பத்திரமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இருக்கக் கூடாது. -என்றார். (த-சி)

### முடிவுக்கு

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு எத்தனை ஆசனங்களை ஒதுக்கீடு செய்வது என்பது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றன. அதன் தொடர்ச்சியாக வவுனியாவில் நேற்றுப் பேச்சு இடம்பெற்றது.

வன்னி மற்றும் மட்டக்களப்பு தேர்தல் தொகுதி என்பன தொடர்பில் பேசப்பட்டது. மட்டக்களப்பு தேர்தல் தொகுதி தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட்டது. வன்னித் தேர்தல் தொகுதி தொடர்பில், முடிவு எட்டப்பட்டாலும் அந்த முடிவில் புளொட் அமைப்புக்கு உடன்பாடு இல்லை என்று கூறப்படுகிறது. இன்றைய தினம் அது தொடர்பில் தொடர்ந்து பேச்சு நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 6, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு 2, புளொட் மற்றும் ரெலோ கட்சிகளுக்கு தலா ஓர் ஆசனம், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத்தமிழரசுக்கட்சி மற்றும் ரெலோ ஆகியவற்றுக்குத் தலா 3 ஆசனங்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு 2 ஆசனங்களும், புளொட்டுக்கு ஓர் ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளது. புளொட் அமைப்பு இரண்டு ஆசனங்கள் கோருவதால் வன்னித் தேர்தல் தொகுதி தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 4, ஏனைய மூன்று கட்சிகளுக்கும் தலா ஓர் ஆசனமும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 5, ஏனைய மூன்று கட்சிகளுக்கும் தலா ஓர் ஆசனமும், திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் (அம்பாறை நிர்வாக மாவட்டம்) இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 5, ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ரெலோ ஆகிய கட்சிகளுக்கு தலா 2, புளொட்டுக்கு ஓர் ஆசனமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, முன்னாள் போராளிகளுக்கும் தேர்தலில் போட்டியிட இடமளிக்கப்படவேண்டும் என்று போராளிகளின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு வந்தவர்களின் கோரிக்கையை இந்தக் கட்டத்தில் பரிசீலிக்க முடியாது என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நிராகரித்தார்.

அந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்குக் கால அவகாசம் போதாது என்றும் முன்னாள் போராளிகளின் பிரதிநிதிகள் என்று சொல் வோரின் பின்னணி குறித்து சந்தேகத்திற்கிடமான தகவல்கள் இருப்பதால் அவர்களின் கோரிக்கை மீது உடனடியாகச் கவனம் செலுத்துவது கடினம் என்றும் சம்பந்தன் உடனடியாகவே எடுத்துக்கூறிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

### யாழ்ப்பாணத்தில்

ஜனசெத பெரமுனக் கட்சியால் தாக்கல் செய் யப்பட்டது.

இலங்கையில் இடம்பெறவுள்ள 8ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைக் கையேற்கும் நிகழ்வு நேற்று அனைத்து மாவட்டத்திலும் ஆரம்பமானது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான வேட்புமனுத்தாக்கல் ஏற்பாடுகளை தேர்தல்கள் செயலகமும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸும் மேற்கொண்டிருந்தன. (உ-101)

### 29 கிலோ

வித்தனர். அவற்றைக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் மீன்பிடிப் படகில் இருந்த நான்கு இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்துப் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:

நேற்று திங்கட்கிழமை காலை 3.30 மணியளவில் தலைன்னார் கடற்கரைப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் படகை சோதனையிட கடற்படையினர் முயன்றனர். அப்போது தமது படகில் இருந்து மீனவர்கள் சில பொதிகளைக் கடலில் தூக்கி வீசினர்.

அந்தப் படகில் இருந்த நான்கு மீனவர்களிடமும் கடற்படையினர் விசாரணை நடத்தினர். கஞ்சாப் பொதிகளையே கடலில் வீசினார்கள் என்று மீனவர்கள் ஒப்புக்கொண்டனர். இராமேஸ்வரத்தில் இருந்து மன்னார் வாசி ஒருவருக்கு கைமாற்றுவதற்காக அதனைக் கொண்டு வந்தனர் என்று மீனவர்கள் கூறியுள்ளனர்.

அவர்களால் கடலில் வீசப்பட்ட கஞ்சா மூடைகளை கைப்பற்றிய கடற்படையினர் அதனைத் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்ததோடு 4 இந்திய மீனவர்களையும் ஒப்படைத்தனர்.

மேலதிக விசாரனைகளைத் தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். நான்கு இந்திய மீனவர்களையும், மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளையும் மன்னார் நீதின்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை தலைமன்னார் பொலிஸார் விரைவுபடுத்தியிருந்தனர். (உ-56)

### மஹிந்த

கள் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். அமைச்சர் தெரிவித்த தாவது:

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த போட்டியிடப்போவது பொய்யான விடயம் இல்லை. கசினோ சூதாட்ட விடுதிகளை நடத்தியவர்களையும், எதனோல் விற்றவர்களையும், போதைப்பொருள் கடத்தியவர்களையும் வைத்துக்கொண்டு கடந்த தேர்தல்களில் வெற்றியடைந்ததைப் போல் இம்முறையும் வெற்றியடைய முடியாது.

மஹிந்த தேர்தலில் போட்டியிடுவதால் ஐக்கிய தேசிய கட்சிக்குச் சிக்கலா? என மக்களும் கேட்கிறார்கள். அதற்குப் பதில், மஹிந்த அல்ல அவருடைய தகப்பனே வந்தாலும் எமக்குச் சிக்கல் இல்லை என்பதுதான். மஹிந்தவும் அவருடன் உள்ளவர்களும் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்.

கடந்த காலங்களில் பொலிஸார், படையினர், மாவட்டச் செயலர்கள், கிராம அலுவலர்கள் என அனைவரையும், அனைத்து வளங்களையும் சுரண்டியும், முறைகேடாக பயன்படுத்தியுமே மஹிந்த கடந்த காலங்களில் தேர்தல்களை எதிர்கொண்டார்; வெற்றியும் பெற்றார்.

அதற்கும் மேலாக ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் இந்தியாவுக்குச் சென்று புகழ்பெற்ற சோதிடர்களைச் சந்தித்து நல்லநேரம் பார்த்து, என்ன செய்யலாம் என அறிவுரைகள் கேட்டு தேர்தலை எதிர்கொண்டார். ஆனால், இறுதியாக நடந்தது என்ன என்பது அனைவருக்கும் தெரியும்.

மீண்டும் தான் தோதலில் போட்டியிடவுள்ளார் எனக் கூறிக்கொண்டிருக்கின்றார். அவருடன் உள்ளவர்களும் அப்படியே முழங்குகின்றார்கள். ஆனால் கடந்த காலத்தைப் போன்று இலங்கையின் அனைத்து வளங்களையும் சுரண்டி இம்முறைத் தேர்தலில் வெற்றிபெற முடியாது.

கடந்த காலத்தில் இங்கே சமாதானம் இருக்கவில்லை. மக்கள் ஆயுதங்கள் சொன்னதைக் கேட்டார்கள். அதனால் எம்மால் எதனையும் செய்ய முடியவில்லை. ஆனால் இப்போது அவ்வாறான நிலை இல்லை. சமாதானம் உருவாகி யிருக்கின்றது.

எமது கட் சியும் சமாதானத்தையே அதிகம் விரும்புகின்றது.இங்குள்ள மக்களும் சமாதானத்தை விரும்புகிறார்கள். இந்த நிலையில் நாங்கள் ஒன்றிணைந்து நல்லாட்சிக்கு உழைப்போம். போர் நடைபெற்ற காலத்திலும் இங்குள்ள மக்களின் நலன்களுக்காக மகேஸ்வரன் உழைத்திருந்தார். அவ்வாறே வடக்கில் நல்லாட்சிக்கும் மக்களின் நலன்களுக்காகவும் ஐ.தே.கட்சி உழைக்கும் என்றார். (உ-101)

### உருக்குலைந்த

மணிவரை போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இது அந்தப் பிரதேச மக்களிடையே பலத்த சந்தேகங்களையும் ஒருவித பதற்றமான சூழலையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-ரி-426)

### தேர்தலின்

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். வவுனியாவில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர், அரசியல் கைதிகளின் பெற்றோர் மற்றும் காணாமற்போனோரின் உறவினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினர்.

அரசியல் கைதிகள், புதிய அரசினாலும் விடுதலை செய்யப்படாமை தமக்கு ஏமாற்றம் அளிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் காணாமற்போனோர் தொடர்பான விடயத்திலும், புதிய அரசும் ஏமாற்றுவதாக அவர்கள் குறைப்பட்டனர். தமது உறவுகளைத் தேடி தினமும் தாம் செத்துப் போவதாக அவர்கள் கண்ணீருடன் தெரிவித்திருந்தனர்.

அவர்களது ஆதங்கங்களைக் கேட்டறிந்த பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பதிலளித்தார். தற்போதைய அரசு தேர்தல் காரணமாக அரசியல் கைதிகளின் விடயங்களில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர் இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான இறுதி முடிவு எடுக்கப்படும். காணாமற்போனவர்கள் தொடர்பிலும், முடிவு எட்டப்படும் என்று தெரிவித்தார் சம்பந்தன்.

இதேவேளை, காணாமற்போனோரின் உறவுகள் வவுனியா நகரில் நேற்று துண்டுப் பிரசுரங்களை நேற்று விநியோகித்துள்ளனர். காணாமற்போனோர் விடயத்தில் கவனவீர்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (உ-5)

### மின்சார சபையில்

நீருடன் ஒயில் கலந்துள்ளதாகக் கூறப்படு கின்றது. அதற்கு மின்சார சபை காரணமில்லை. எனினும் தொழிநுட்ப நிறுவனத்தினது அறிக்கை கிடைத்த பின்னர், நீர் மாசடைந்தமைக்கு மின்சார சபை காரணமாக இருந்தால் அதற்கான இழப்பீட்டை வழங்க நாம் தயாராகவே இருக்கிறோம்" என்றார் அமைச்சர்.

இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலகத்துக்கான புதிய கட்டடத் தொகுதி பழைய பூங்காவின் ஒரு பகுதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஒயில் கலந்ததான விடயம் பற்றித் தற்போது ஆராய்ந்து வருகிறார்கள். தற்போது அங்குள்ள தனியார் நிறுவனத்தினரால் தரப்பட்ட அறிக்கையில் நிலத்தடி நீர் மாசுபட்டமைக்குத் தமது நிறுவனம் காரணமில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் உரம் மற்றும் கிருமிநாசினியால் ஏற்பட்ட தாக்கமே அது என்றும் கூறியுள்ளனர். ஆனால், 2010ஆம் ஆண்டில் சுன்னாகத்துக்குச் சென்ற நான் அங்குள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடியபோது, தாங்கள் விவசாயத்துக்கு எந்தவித இரசாயனப் பொருள்களையும் பாவிப்பதில்லை என்று என்னிடம் கூறியிருந்தனர்.

இப்போது நாம் தொழிநுட்ப நிறுவனத்தினது அறிக்கையை எதிர்பார்த்துள்ளோம். அது கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-4)

### கூட்டமைப்பின்

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 தேசியப் பட்டியல் ஆசனங்களுடன் மொத்தமாக 22 ஆசனங்களைப் பெற்றிருந்தது. ஆனால் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துடன் மொத்தமாக 14 ஆசனங்களையே பெற்றது.

இந்த முறை நாம் அதிக ஆசனங்களைப் பெறவேண்டும். நிச்சயம் பெற முடியும். கடந்த வடமாகாண சபைத் தேர்தலில் வீறுகொண்டு எழுந்த மக்கள் எழுச்சி, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு – கிழக்கில் நிச்சயம் ஏற்படுமானால் நாம் அதிக ஆசனங்களைப் பெறமுடியும். இந்தப் பொதுத் தேர்தலில் 20 ஆசனங்களைப்பெற வேண்டும். இதனைப் பெறுவதன் ஊடாக நாடாளுமன்றில் பேரம்பேசும் சக்தியாக நாம் மாறி நிரந்தர அரசியல் தீர்வை விரைவுபடுத்தலாம். எமது இராஜதந்திர ரீதியிலான நகர்வுகளுக்கு, நாம் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியாக இருக்க வேண்டும். அதற்கு மக்களின் அங்கீகாரம் முக்கியம். அந்த வகையில் 20 ஆசனங்களை மக்கள் எமக்கு வாக்களிப்பதன் ஊடாக வழங்க வேண்டும்.

தென்னிலங்கைக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்திற்கும் நாம் ஒன்று பட்ட பலமிக்க சக்தியாக மீண்டும் நிரூபித்துக் காட்ட இந்தப் பொதுத் தேர்தல் நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. இதன் ஊடாக எமது உரிமைகளை நாம் விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் – என்றார். (உ-5)

### வெள்ளியன்று

கிழக்கின் 5 தேர்தல் மாவட்டங்களிலும் ஒரேநேரத்தில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்வது என்று முடிவெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சியை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வேட்பு மனுக்கையளிப்பு, யாழ்.மாவட் டச் செயலகத்திலும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தின் வேட்பு மனுக்கையளிப்பு வவுனியா மாவட்டச் செயலகத்திலும், திருகோண மலை தேர்தல் மாவட்டத்தின் வேட்பு மனுக்கையளிப்பு திருகோணமலை மாவட்டச் செயலகத்திலும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தின் வேட்பு மனுக்கையளிப்பு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திலும், திகாம டுல்ல தேர்தல் மாவட்டத்தின் வேட்பு மனுக்கையளிப்பு அம்பாறை மாவட்டச் செயலகத்திலும் இடம்பெறவுள்ளது. (உ-5)

செய்திகள் | 2015 ஜூலை 07 செவ்வாய்க்கிழமை | உதயன்

# மக்கள் ஆணையை மதியுங்கள் மைத்திரி

## முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 7
ஜனவரி 8 மைத்திரிபாலவுக்கு மக்கள் ஆணை வழங்கியது சுதந்திரக் கட்சி தலைமையைப் பெறுவ தற்கு அல்ல. மாறாக, நாட்டில் ஊழல் மோசடிகளை இல்லாது செய்யவே எனக் குறிப்பிட்ட முஜிபுர் ரஹ்மான், மஹிந்தவுக்குத் தேர்தலில் போட்டியிட மைத்திரி வாய்ப்பு வழங்கியுள்ளமையானது வாக்களித்த 62 இலட்சம் மக்களுக்கு மைத்திரி செய்யும் துரோகமாகும் என்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்குவதானது நரியிடம் கோழிகளைப் பாதுகாக்க ஒப்படைப்பதற்கு ஒப்பானதாகும். இந்த முயற்சியானது பெரும் அழிவையே ஏற்படுத்தும் எனவும் மத்திய கொழும்பு ஐக்கிய தேசியக் கட்சி பிரதான அமைப்பாளரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் புதுக்கடையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வரலாற்று ரீதியாக தோல்வியடைந்த மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் எப்படியாவது மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி அதிகாரத்துக்கு வருவதற்கே முயற்சிக்கின்றனர். இதற்காக மாற்று வழிகளிலும் சதித்திட்டங்களைத் தீட்டி வருகின்றனர்.

கடந்த 10 வருட மஹிந்த ஆட்சி யில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள், ஜனநாயக விரோதச் செயல்கள் என்பனவற்றை மக்கள் நினைவில் வைத்துள்ளனர். அத்துடன், பல கோடிக் கணக்கான அரச சொத்துகளும் மக்களின் காணிகளும் சூறையாடப்பட்டுள்ளன. சிறுபான்மையின மக்கள் நசுக்கப்பட்டு இனவாதிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டதும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலாகும் .

இன்று பொதுத் தேர்தலில் களமிறங்குவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கின்றார். இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதியளிக்கக்கூடாது. மஹிந்தவை வீழ்த்தவேண்டும் என்பதற்காகவே மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர். மஹிந்தவின் ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்



தியையே கடந்த ஜனாதிபதித் தேர்தல் உணர்த்தியுள்ளது என்பதையும் இதன்மூலமே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார் என்பதையும் அவர் புரிந்துகொள்ள வேண்டும். சுதந்திரக் கட்சியின் தலைவராவதற்கு மைத்திரிபால சிறிசேனவிற்கு மக்கள் வாக்களிக்கவில்லை. ஊழல், மோசடியற்ற நல்லாட்சியொன்று ஏற்படவேண்டும் என்ப தற்காகவும் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு இன ஒற்றுமை பேணப்பட வேண்டும் என்ற நல்ல பல காரணங்களுக்காவுமே மைத்திரிபால சிறிசேனவுக்கு மக் கள் ஆணையை வழங்கி ஜனாதி பதியாக்கினர்.

நாள்தோறும் பன்சலைகளுக்குச் சென்று அங்கு இனவாதம் பேசி அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் மஹிந்த, கடந்த காலங்களில் மேற்கொண்ட தவறுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே அதிகாரத்துக்கு வர முற்படுகின்றார். மைத்திரிபால சிறிசேன அவரது கட்சியில் மஹிந்த வேட்புமனு வழங்குவதானது நரியிடம் கோழிகளைப் பொறுப்புக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும். இவ்வாறு வேட்புமனு வழங்கப்படுமானால் அது 62 இலட்சம் மக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்யும் துரோகமாக அமைந்துவிடும்.

எனவே, மைத்திரிபால சிறிசே மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும். தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில உள்ளிட்ட இனவாதப் போக்குடைய அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்புகளைத் தோற்கடிக்கவேண்டும். இவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கே இவ்வாறு மஹிந்தவை களமிறக்கவேண்டும் என சுதந்திரக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துகின்றனர். ஆகவே, ஊழல்வாதிகளைக் காப்பாற்றாமல் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் வேண்டிக்கொள்கிறோம்–என்றார். (த)

## ஹரீன் முடிவில் உறுதி

கொழும்பு, ஜூலை 7
மைத்திரிபால சிறிசேனவும் மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்தால், அரசியலிலிருந்து விலகிக்கொள்வதாக தான் செய்த அறிவிப்பில் இதுவரை எந்த மாற்றமும் இல்லையென ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார். பதுளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை அறி வித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால அனுமதி வழங்கியதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்த வெளியிட்ட அறிவிப்பில் தனக்கு சந்தேகம் இருப்பதாக ஊவா முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் அனுமதி வழங்கப்பட்டதாக வெளியிடப்பட்ட தீர்மானத்தையடுத்து மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்த 62 இலட்சம் வாக்காளர்களும் விரக்தியடைந்து[illegible]தாகவும் அவர் குறிப்பிட்டார்.

எது எவ்வாறாயினும், ஜனாதிபதி இது தொடர்பில் தெளிவான அறிவிப்பொன்றை விடுக்காதிருப்பதனால், தான் அந்தச் செய்தியை நம்பத் தயாரில்லையெனவும் அவர் ஊட கங்களுக்கு அறிவித்துள்ளார்.

ஊவா முதலமைச்சர் தனது பதவியை விட்டு விலகுவதில் உறுதியாக இருக்கின்றமையானது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிடவுள்ளமையினாலாகும் என ஐமசுமு. தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த)

## கம்பஹாவில் கோத்தபாய; [illegible]சியப் பட்டியலில் பஸில்?



கொழும்பு, ஜூலை 7
பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவார் என்று தகவல்கள் கசிந்துள்ளன. அவர், எந்தக் கட்சியில் போட்டியிட போகின்றார் என்று தெரியவரவில்லை.

இதேவேளை, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் மீது சுமத்தப்பட்டுள்ள நிதிமோசடி குற்றச்சாட்டுகள் காரணமாக அவர், இம்முறை தேர்தலில் போட்டியிடமாட்டார் என்றும் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வருவார் என்றும் தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரமேஜயந்தவுக்கும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றதாகக் கூறப்படும் சந்திப்பின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)



மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, நேற்று திங்கட்கிழமை திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். பிரபல தொகுப்பாளரும் நடிகரும் ஆடை வடிவமைப்பாளருமான ஹிரான் யட்டோரவ் உடனான இந்த திருமண வைபவத்தில் ஜனாதிபதியும் பங்கேற்றார். (த)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு, ஜூலை 7
அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அங்குனகொலபெலஸ்ஸ என்ற இடத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் ஓட்டோச் சாரதி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோவைச் செலுத்திக்கொண்டிருந்தபோதே இனந்தெரியாதவர்களால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற வேளை ஓட்டோவில் மூவர் பயணித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை தேடிவருவதாக அங்குனகொலபெலஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர். (த)

# கோப் குழுவின் அறிக்கையை பெற்று நடவடிக்கை எடுக்குக

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 7
மத்திய வங்கி மற்றும் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் ஆராய்ந்து இறுதியாக தயாரிக்கப்பட்ட கோப் குழுவின் அறிக்கையின் பிரதியை எடுத்து அதனூடாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கோப் குழுவின் தலைவருமான டியூ. குணசேகர இந்தக் கோரிக்கையை விடுத் துள்ளார்.

எவ்வாறாயினும், செப்ரெம்பரில் கூடவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் கோப் குழுவின் அறிக்கை நிச்சயம் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் கூறி யுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரச நிறுவனங்களில் இடம் பெற்ற நிதி மோசடி தொடர்பாக கடந்த காலங்களிலும் விசாரணைகள் நடத்தப்பட்டன. எனினும், கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் கோப் குழு வின் தலைவராக என்னை நியமித்ததற்குப் பின்னர் இதுவரை 6 அறிக்கைகளை வெளியிட்டுள்ளேன்.

ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்றத்திலுள்ள ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்த அறிக்கைகளுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தனர்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகிய நிறுவனங்களும், வியட்ணாம் மற்றும் கனடா ஆகிய நாடாளுமன்றங்களும் இந்த அறிக்கைக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தன.

கடந்த 1971ஆம் ஆண்டுக்குப் பின்னர் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையே ஓரளவு நடைமுறைப் படுத்துப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டதோடு, நிதியமைச்சின் நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

கடந்த கால நாடாளுமன்ற அமர்வின்போது மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட பிணை மற்றும் முறிகள் விற்பனையில் மோசடி இடம் பெற்றதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரும்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

எனினும், தகுந்த விடயங்கள் முன்வைக்கப்படாமல் இந்த விடயத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாதென கூறிய அப்போதைய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, இது குறித்து விசாரணை நடத்தும்படி கோப் குழுவுக்குப் பணித்தார்.

சபாநாயகரது பணிப்புரைக்கமைய ஒரு மாதத்துக்குள் விசாரணை நடத்தப்பட்டு 440 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளேன். விவாதத்துக்கு உரிய விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கோப் குழுவின் அறிக்கையை எவராலும் நிராகரிக்க முடியாது. பிரதான கட்சிகள் அனைத்திற்கும் ஒரு வேண்டுகோளை முன்வைக்கின்றேன். பொதுத் தேர்தலுக்கான தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த அறிக்கையை அடுத்த நாடாளுமன்றில் சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இணைத்துக் கொள்ளுமாறு கோருகின்றேன்.

அத்துடன், ஜனாதிபதியிடமும் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். நாடாளுமன்ற செயலாளரிடம் இந்த அறிக்கையின் பிரதியைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிடம் கோருகின்றேன் என்றார். (த)

## இன்றைய மோதல்கள்

***மறுமலர்ச்சி வி.க.தொடர்***

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று இரவு 6மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து 'பி' அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அணி மோதவுள்ளது.

***சென். அன்ரனிஸ் வி.க.தொடர்***

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் அமரர் யோன் கில்லறி ஞாபகர்த்தமாக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதிக்கும் திசை அணியை எதிர்த்து யங்கர்ஸ் அணி மோதவுள்ளது.

மாலை 4மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் உடுப்புக்குளம் அலையோசை அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் அணி மோதவுள்ளது.

***வளர்மதி வி.க.தொடர்***

வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலிதோப்பு வாலிபர் அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமார் அணி மோதவுள்ளது. இரவு 7.30மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில்மோகனதாஸ்'ஏ' அணியை எதிர்த்து கச்சாய் ஜொலிகிங்ஸ் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ அணி மோதவுள்ளது. (ம-23)

***உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தொடர்***

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண்கள் அணிகளுக்கிடையில் நடத்திவரும் கொத்மலை சொக்ஸ் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதன்படி இன்றைய ஆட்டத்தில் சென்.ஜோசவாஸ் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் சம்பியனானது வேம்படி மகளிர் அணி





யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஸ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனாகியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரிஅணி மோதிக்கொண்டது. ஆரம்பத்தில் அதிரடியாக விளையாட முதல் சுற்றின் முடிவில் 14:7 என்ற அடிப்படையில் கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஆதிக்கமே அதிகரித்துக் காணப்பட்டது. இரண்டாவது சுற்றினை 9:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி பழிதீர்த்தாலும் முதல் சுற்றில் காட்டிய அதிகரித்த ஆதிக்கத்தின் காரணத்தினால் முதல் பாதியின் முடிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

மூன்றாம் சுற்றில் கொக்குவிலின் ஆதிக்கம் அப்படியே தவிடுபொடியானது.

19:3 என்ற அடிப்படையில் வேம்படி மூன்றாவது செற்றினைக் கைப்பற்ற முதல் மூன்று செற்களின் முடிவின்படி 34:24 என்று வேம்படியின் பக்கம் வெற்றிக்காற்று பலமாக வீசத்தொடங்கியது. நான்காவது செற்றில் 13:11 என்று கொக்குவில் மீண்டும் ஆதிக்கம் செலுத்தினாலும் மொத்த செற்களின் முடிவில் 46:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை அணி. ஆட்ட நாயகியாக வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியின் கீர்த்தனியும் தொடராட்ட நாயகியாக கொக்குவில் இந்துக்கல்லூரி அணியின் தர்சிகாவும் தெரிவானார்கள். (ம)

## விளையாடமலே வென்றது ஏஞ்சல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 17வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதவிருந்தது.

ஆனால் ஆட்டம் ஆரம்பமாகவேண்டிய உரிய நேரத்துக்கு யாழ்.இந்துக் கல்லூரி அணி மைதானத்தில் இல்லாத காரணத்தினால் விதிகளுக்கு அமைய மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டு கிண்ணம் கையளிக்கப்பட்டது. (ம-23)

## இராணுவத்திடம் வீழ்ந்தது இந்து இளைஞர்



யாழ்ப்பாணம், ஜூலை 7

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 96ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ரீதியாக நடந்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் அனுராதபுரம் இராணுவம் அணி வெற்றிபெற்று சம்பியனாகியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அனுரதபுரம் இராணுவ அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தின் முதலாவது செற்றிலேயே இராணுவத்தின் ஆதிக்கம் ஆரம்பமாக ஆரம்பித்தது. இந்த செற்றில் இராணுவ அணி 24 புள்ளிகளையும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 16புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. இரண்டவது செற்றும் 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இரராணுவத்திடம் செல்ல மூன்றாவது செற்றைக் கைப்பற்றியேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது இந்து இளைஞர் அணி. முயற்சிக்குப் பலனாக மூன்றாவது செற் 25:16 என்ற அடிப்படையில் இந்து இளைஞரின் வசமாகியது.

ஆனால் இந்து இளைஞரின் ஆதிக்கம் நீண்டநேரம் நிலைக்கவில்லை. நான்காவது செற் இராணுவத் தின் கட்டுப்பாட்டுக்குள் வர, முடிவில் இரணுவ அணியினர் 3:1என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

## சம்பியனானது வைகறை

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மின்னொளியில் நடந்தும் தாச்சித் தொடரின்இறுதியாட்டத்தில்புதுமட வைகறை அணி சம்பியனாகியது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியை எதிர்த்து புதுமட வைகறை அணி மோதிக் கொண்டது. இதில் புதுமட வைகறை அணி 10:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதில் சிறந்த களத்தடுப்பு வீரனாக புதுமட வைகறை அணியின் காந்தனும் சிறந்த வீரனாக அதே அணியைச் சேர்ந்த சயந்தனும் தெரிவானர்கள். (ம-23)

## சர்வதேசத்தில் சாதித்த தமிழர்

கிளிநொச்சி, ஜூலை 7

கனடா ஒன்ராரியோ மாநிலத்தின் கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் ரொரன்ரோவில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட இலங்கை சோட்டோகான் கராத்தே கழகத்தின் பயிற்றுநர் அன்ரே டினேஸ் சிரேஷ்ட கறுப்புப் பட்டி வீரர்களுக்கான காட்டா போட்டியில் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இதைவிட இந்தப் போட்டியில்கராத்தே நடுவர் சம்மேளனத்தின் நடுவர் ஆணைக்குழுவினால் நடுவருக்குரிய தகமையுடையவராக அங்கீகரிக்கப்பட்டு குறித்த தொடரில் நடுவராகவும் கடமையாற்றியுள்ளார். (ம-21)



*( ஒன்ராரியோ கராத்தே சம்மேளனத்தின் பிரதம நடுவர் சிகான் சுவாங்கோவுடன் அன்ரோ டினேஸ்.)*

## வடமாகாண மெய்வன்மைப் போட்டிகள்


மாங்குளம், ஜூலை 7

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 13ஆம் திகதி திங்கட்கிழமை வரை 5 நாள்கள் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 9.30மணிக்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ் விற்குப் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் பேரவைத் தலைவர் கந்தையா சிவஞானம்கலந்து கொள்ளவுள்ளார். வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இறுதிநாள் நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக வடமாகாண சபையின்கல்வி மற்றும்விளையாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)

# அச்சுறுத்தும் பாகிஸ்தான்

## கேள்விக்குறியாகியுள்ளது இலங்கையின் வெற்றி




இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டத்தின் நான்காம் நாள் முடிவில் பாகிஸ்தான் இரண்டாவது இன்னிங்ஸிற்காக 230–2 என்ற பலமான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மிஸ்பா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய முதல் இன்னிங்ஸிற்காக இலங்கை 278 ஓட்டங்களில் சுருண்டது. பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பாக சாஜ் 5 இலக்குகளையும் ரஹற் அலி 3 இலக்குகளையும் அஷார் அலி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

279 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற நிலையில் பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் 215 ஓட்டங்களில் சுருண்டது. பந்து வீச்சில் இலங்கை சார்பாக பிரசாத், பிரதீப், கௌசல் மூவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.

63 ஓட்டங்கள் முன்னிலைபெற்றிருந்த நிலையில் மேற்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை நேற்று முன்தின மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 228–5 என்ற நிலைமையில் இருந்தது. தொடர்ந்து நான்காம் நாளுக்காக துடுப்பெடுத் தாடுவதற்காக மத்தி யூஸ் 77 ஓட்டங்களுடனும் சந்தி மால் 39 ஓட்டங்களுடனும் கள மிறங்கினர். இணைப்பாட்டம் தொடர்ந்தும் நிலைத்திருந்தது. சதத்தினை நோக்கி மத்தியூஸ். அரைச் சதத்தைத் நோக்கி சந்திமால். இருவரினதும் இன்னிங்ஸும் இலக்கை அடைந்தது. சதம் கடந்து அசத்தினார் மத்தியூஸ். அணியின் ஓட்டம் 278ஆக இருந்தபொழுது சந்திமாலை பவிலியனுக்கு அனுப்பி இணைப்பாட்டத்தை இடைநிறுத்தினார் இம் ரான்கான். வந்த வேகத்தில் முதல் இன்னிங்ஸைப்போல் ஒரு பந்தி லேயே டக்கில் வெளியேறினார் பிரசாத். இம்ரானின் வேகம் ஆட்டத்தில் திருப்பு முனையை கொண்டு வந்தது. பின்வரிசை வீரர்கள் ஒற்றையிலக்கத்துடன் ஒருவர் பின்னர் ஒருவராக இம்ரானின் பந்தில் ஆட்டமிழந்து சென்றனர். மத்தியூஸிம் இதற்கு விதி விலக்கல்ல. முடிவில் இலங்கை யின் இன்னிங்ஸ் 313 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது.

முதல் இன்னிங்ஸ் இலங்கைக்கு கைகொடுக்க பாகிஸ்தானுக்கு வெற்றியிலக்கு 377. களத்தில் மக்சூட் மற்றும் செஷாட். ஓட்ட மெதனையும் பெறாது ஓட்டம்பிடித்தார் செஷாட். ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையில் பாகிஸ்தானின் முதல் இலக்கு பந்தாடப்பட்டது. ஐந்தே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அஷார் அலி. தற்பொழுது பாகிஸ்தான் 13–2. வரப்போகும் ஆபத்தை உணராமல் மைதானத்தில் துள்ளிக்குதித்து ஓடித்திரிந்தனர் மண்ணின் மைந்தர்கள். இணைந்தனர் மக்சூட்டும் யுனிஸ்கானும். அவசரப்படவுமில்லை. டெஸ்ட் ஆட்டம் தானே என்று அதிகம் நிதானிக்கவும் இல்லை. சீரான சராசரியில் இலக்குச்சரிவை பொருட்படுத்தாமல் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த சரிவில் இருந்து படிப்படியாக மீள ஆரம்பித்தது பாகிஸ்தான். ஆளுக்கொரு அரைச் சதமும் கடந்துவிட்டார்கள் இலக்கு மட்டும் விழுந்தபாடில்லை. பந்துகள் பழக்கப்பட இணைப்பாட்டம் நூறு, நூற்றைம்பது என்று அதி கரித்துச் சென்றுகெண்டிருந்தது. இருவரும் சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தனர். சதம் கடக்கும் பதட்டத்திலாவது இலக்கொன்று விழும் என்று எதிர்பார்த்து தவமிருந்து இலவு காத்த கிளியானார்கள் இலங்கை வீரர்கள். நேற்றைய நான்காம் நாள் முடிவில் பாகிஸ் தான் 230–2 என்று பலமான நிலையில் உள்ளது. வெற்றி பெறுவதற்கு பாகிஸ்தானுக்கு இன்ன மும் 147 ஓட்டங்கள் மட்டுமேதேவை. (ம)

# வார்த்தைப்போருக்கு தயார்


**-ஜோன்சன்**



இங்கிலாந்தின் சகல துறை வீரர் பென் ஸ்டோக்ஸை சீண்ட விரும்புவதாக ஆஸ்தி ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் தெரிவித் துள்ளார்.

இங்கிலாந்து – ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான ஆஷஸ் தொடர் நாளை இங்கிலாந்தில் தொடங்குகிறது. கடந்த ஆஷஸ் தொடரை இங்கிலாந்து 0–5 என்று இழந்தது. இதற்கு ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் முக்கிய காரணமாக இருந்தார்.

இந்த நிலையில் நாளை நடைபெறவுள்ள ஆஷஸ் தொடர் பற்றி அவர் தெரிவித்ததாவது; இங்கிலாந்து அணியில் முன்பு இணைந்து மிரட்ட பிளின் டாப், கெவின் பீற்றர்சன் ஆகியோர் இருந்தார்கள். ஆனால் தற்போதுள்ள இளம் வீரர்கள் அவர்களுக்கு ஈடுகொடுப்பார்களா? என்று தெரிய வில்லை. ஆனால் அடுத்த பிளின்டொப் என்று எதிர்பார்க்கப்படும் பென் ஸ்டோக்ஸ் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக விளையாடும்போது சாமுவேல்ஸிடம் கடும் வாதத்தில் ஈடுபட்டார். ஆகவே அவர்தான் வார்த்தை மோதலில் ஈடுபட சரியான ஆளாக இருப்பார். அவருக்கு எதிராக வார்த்தை போரில் ஈடுபட விரும்புகிறேன். விராட் கோஹ்லி மைதானத்தில் கடும் சவாலாக திகழ்வார். அவரைப் போல்தான் ஸ்டோக்ஸ் செயல்படுகிறார். இவர்கள் இருவரும் சிறந்த வீரர்கள். இங்கிலாந்து அணியில் சரியாக போரிடக்கூடிய ஒரே வீரர் ஸ்டோக்ஸ்தான் –என்றார். (ம)



**ஆஷஸ் தொடருக்கு இன்னும் இருப்பது 1 நாள் மட்டுமே!**

# கீப்பர் முதல் மேய்ப்பர் வரை டோனி என்னும் மந்திரம்

## இன்று டோனியின் 34ஆவது பிறந்த தினம்

**ஏ.விநோதவன்**
**கோப்பாய்**



பழமையான பாரம்பரியங்களைக் கொண்ட கிரிக்கெட்டின் நீண்ட கால வரலாற்றில் பலர் வந்துசென்றிருந்தாலும் சிலர்தான் நிலைத்து நிற்பவர்கள். பிராட்மன், சச்சின், சங்கா, பொண்டிங், லாரா, ரிச்சர்ட்ஸ் ஆகியோர் அவர்களில் பிரதானமானவர்கள். ஓய்வினை அறிவித்தவர்களாகவும் ஓய்வினை எதிர்வுகூறியவர்களாகவும் உள்ள இவர்களின் வரிசையில் கப்டன் கூல் டோனிக்கு தனியான இடம் இருப்பதை இந்திய அணியை வெறுப்பவர்களும் ஏற்றுக்கொள்ளத்தான் செய்வார்கள்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அடியெடுத்து வைத்த ஏனையவர்களின் வருகைக்கும் டோனியின் வருகைக்கும் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன. வரட்சிக்கும் வறுமைக்கும் ஒருகாலத்தில் பெயர்போன ராஞ்சி என்னும் நாமம் கொண்ட குக் கிராமத்தில் தான் கோடானகோடி மக்களை தனது பக்கம் கட்டிப்போட்ட அந்தச் சிறுவன் 1981ஆம் ஆண்டு இந் நாளில் பிறந்தான். பள்ளிப்பருவத்தில் உதைபந்தாட்ட கோல் காப்பாளராக வேண்டும் என்ற ஆசையை தன் மனதில் வைத்திருந்த டோனி அதை அடையவும் தவறவில்லை. ஆனால் அக்காலத்தில் பாடசாலையின் கிரிக்கெட் அணியின் இலக்குக் காப்பாளர் ஒருவர் விபத்தில் காயமடைந்ததன் காரணமாக பயிற்றுநர்களால் கிரிக்கெட்டின் இலக்குக்காப்பாளராக கட்டாய மாற்றம் செய்யப்பட்டார் டோனி. அங்குதான் டோனியை விதி வழி நடத்தியது. அன்றிலிருந்து கிரிக்கெட்டின் பக்கம் தனது கவனத்தினை திசை திருப்பிய டோனி படிப்படியாக உதைபந்தாட்டத்தை தற்காலிகமாக மறக்க ஆரம்பித்தார். கிரிக்கெட்டில் டோனி திருப்தியடைவதற்கு அவரது தற்கால மனைவியும் அக்கால நண்பியும் காதலியுமான சாக்ஷியும் காரணம்.

பந்துடனும் மட்டையுடனும் தண்டவாளங்களால் திரிந்தால் படிப்பு எங்கே ஏறுவது. ஆனால் சச்சினைப்போல் பத்தாம் வகுப்பும் அல்ல. சுமாரான கல்வியடைவைக் கொண்டு ரயில்வே நிலையத்தில் வேலையெடுத்தார். அதுவும் ரிக்கெட் கிழிக்கும் வேலை. ஆனால் ரயில்வே அணியின் இலக்குக் காப்பாளராகவும் துடுப்பாட்ட வரிசையில் மூன்றாவது வீரரா கவும் நியமிக்கப்பட்டார். இந்தியா வின் மிகப்பெரிய கழக அணியென் றால் அது ரயில்வே அணி மட்டும் தான். அந்த அணியின் நம்பிக்கை நட்சத்திரம் என்றால் தேசிய அணி யில் இணையும் சாத்தியம் மிக அருகவே இருந்தது. ரெயில்வே அணிக்காக மட்டுமல்லாது ஊரி லுள்ள கழகத்துக்கெல்லாம் விளையாடுவதற்காக நிர்வாகம் விடு முறை கொடுப்பார்களா?. 2014 ஆம் ஆண்டு டோனியின் வேலை பறிபோனது. ஆனால் அடுத்த மாதத்திலேயே இந்திய 'ஏ' அணியில் இடம் கிடைத்தது. இந்திய 'ஏ' அணிக்காக சிம்பாப்வேக்கு எதிராக தனது முதலாவது ஆட்டத்தில் களமிறங்கினார். சிம்பாப்வேயின் அத்தனை இலக்குச் சரிவும் டோனியின் கையால் அரங்கேறின. 7 பிடி யெடுப்புக்கள் 4 ஸ்டம்பிங் அனைவரினதும் ஆட்டமிழப்புக்கும் நேராக டோனியின் பெயரும் பதிவானது. இது இன்றுவரை தகர்க்கப்படாத உலகசாதனையும் கூட. முதல் ஆட்டத்திலேயே ஆட்ட நாயகனானார்.

அதே ஆண்டு டிசெம்பர் 23ஆம் திகதி பங்களாதேஷிற்கு எதிராக தனது முதல் ஒருநாள் ஆட்டத்தில் களமிறங்கினார். இலக்குக்காப்பாளர் என்ற காரணத்தினால் மைதானத்தின் பலவீனமான திசைகளை இலகுவில் இனங்கண்டு தனது முதல் ஆட்டத்தில் தலைவராக இருந்த ட்ராவிட்டுக்கே ஆலோசனை கூறினார். தனது மூன்றாவது ஆட்டத்தில் இலங்கைக்கு எதிராக 183 ஓட்டங்களை விளாசித்தள்ளி துடுப்பாட்ட வீரராகவும் தன்னை நிரூபித்தார். இதனால் இரண்டே வருடத்தில் இந்திய அணியின் தலைவரானார். உலகக்கிண்ணங்களை ஒன்றும்விடாமல் வரிசையாகக் கைப்பற்றினார்.

தனித்துவமான தலைமைத்துவத்தால் கப்டன் கூல் என்று அழைக்கப்பட்டார்.

கிரிக்கெட்டில் ஒரு தலைவராக அத்தனையும் சாதித்து இந்தியாவை இமயத்தின் உச்சிக்கு கொண்டு சென்ற டோனியிடம் தற்பொழுது ஓய்வு தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகளுக்கு அவர் வைக்கும் பதில் "அடுத்த உலகக் கிண்ணம்" முடியாதா என்ன? இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

# அமெரிக்காவால் நிலைகுலைந்தது ஜப்பான்





பெண்கள் உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஜப்பானை 5–2 என்ற கணக்கில் இலகுவில் வீழ்த்தி மூன்றாவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றியது அமெரிக்கா.

ஆட்டத்துடன் அமெரிக்க வீராங்கனைகளின் ஆதிக்கமும் ஆரம்பமாகத் தொடங்கியது. 3ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்து கோல் கணக்கினை ஆரம்பித்தார் லாய்ட். அடுத்த 2வது நிமிடத்தில் மேலும் ஒரு கோலை விளாசி ஜப்பானுக்கு அதிர்ச்சியளிக்க முதல் ஐந்து நிமிடங்களிலேயே அமெரிக்கா சார்பாக இரண்டு கோல்கள் பதிவானது. அதன்பின் 14ஆவது நிமிடத்தில் ஹோலிடே ஒரு கோல் அடிக்க 16ஆவது நிமிடத்தில் லாய்ட் மேலும் ஒரு கோல் அடித்தார். இந்த நான்கு கோல்களுக்கும் பதிலாக ஜப்பானால் ஒருகோல் மட்டுமே பதிவு செய்யப்பட முதல் பாதியின் முடிவில் அமெரிக்கா 4–1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

அமெரிக்காவுக்குச் சாதகமாக கிட்டத்தட்ட உறுதியான வெற்றி வாய்ப்புடன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. 52ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீராங் கனை ஜான்ஸ்டன் தவறுசெய்ய அது ஜப்பானுக்கு சார்பான கோலாக பதிவானாது. 54ஆவது நிமிடத்தில் அமெரிக்கா வீராங் கனை ஹீத் மைதானத்தின் மத்திய பகுதியில் வைத்து நேராக ஒரு கோலை விளாச அமெரிக்கா 5–2 என்ற கணக்கில் ஜப்பானை வீழ்த்தி 3ஆவது முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.(ம)

# மீண்டும் ஹமில்டன்

உலக கார்ப்பந்தயத் தொடரின் ஒன்பதாவது சுற்றில் இங்கிலாந்து வீரரான ஹமில்டன் பந்தய தூரமான 306 கிலோ மீற்றர் இலக்கை ஒரு மணி 31 நிமிடம் 27.7 வினாடிகளில் கடந்து முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளார்.

நடந்து முடிந்த 9சுற்றுக்களில் அவர் பதிவு செய்த 5ஆவது வெற்றி இதுவாகும். ஜேர்மனி வீரர்கள் ராஸ்பெர்க் 2ஆவதாகவும், செபஸ்டியன்- வெட்டல் 3ஆவதாகவும் வந்தனர். 19 சுற்றுகளை கொண்ட இந்த போட்டியில் இதுவரை நடந்துள்ள 9 சுற்று முடிவில் ஹமில்டன் 194 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ராஸ்பெர்க் 177 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.(ம)




## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல்யமான தொலைத் தொடர்பு நிலையத்துக்கு பெண் பணியாளர்கள் தேவை. ஏற்கனவே தொலைத் தொடர்பு நிலையத்தில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கொம்பியூட்டர் ரைப்பிங் தெரிந்தவர்களும் வேண்டும். மாத சம்பளம் 10,000/=

தொடர்புகளுக்கு: 071 340 3400

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

## மாபெரும் கருத்தரங்கு பொருளியல்

சிரேஷ்ட ஆசான் பொருளியல் உதயன்

- யூலை 8,9,10,13 ஆகிய தினங்களில் 8.00 - 12.00 மணிவரை நடைபெறும்.
- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்
- அனைத்து மாணவர்களுக்கும் கையேடுகள் வழங்கப்படும்.
- நகரின் மத்தியில் இங்கு மட்டுமே ஆசிரியரின் கருத்தரங்கு நடைபெறும்.

ECONOMICS HALL

நாவலர் றோட், யாழ்ப்பாணம். தொடர்பு: 0776624387




# முதல்முறையாக நான்காவது சுற்றுக்குள்

# அடியெடுத்துவைத்தார் வன்டேவெஜ்

சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் மிகவும் உயரிய தொடரான விம்பிள்டன் ரென்னிஸ்தொடர் தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் வன்டேவெஜ் முதன்முதலாக 4ஆவது சுற்றுக்குள் நுழைந்து சாதனை படைத்துள்ளார்.


வன்டேவெஜ் 6–2, 6–0 என்ற நேர் செற்றில் ஆஸ்திரேலிய முன்னணி வீராங்கனை சமந்தா ஸ்டோசுரை ஊதித்தள்ளி விம்பிள்டன் தொடரில் முதல்முறையாக 4ஆவது சுற்றுக்குள் நுழைந்தார். மற்றொரு ஆட்டத்தில் விக்டோரியா அஸரென்கா 6–4, 6–4 என்ற நேர் செற்றில் பிரான்ஸின் மிலாடெனோவிச்சை வீழ்த்தினார். இன்னொரு ஆட்டத்தில் 6ஆம் நிலை வீராங்கனை செக்குடியரசின் லூசி சபரோவா 3–6, 6–3, 6–1 என்ற செற் கணக்கில் அமெரிக்காவின் ஸ்டீபன்சை வீழ்த்தி 4ஆவது சுற்றை உறுதி செய்தார். (ம)

# விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முடிவுகள்

சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் மிகவும் உயரிய தொடரான விம்பிள்டன் ரென்னிஸ்தொடர் தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் மூன்றாவது சுற்று ஆட்டத்தில் வாவ்ரிங்கா, ஜோகோவிச் இருவரும் நேர்செற்களில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

வாவ்ரிங்கா தன்னை எதிர்கொண்ட பெர்னாண்டோ வெர்டஸ்கோவை 6–4, 6–3, 6–4 என்ற நேர்செற் கணக்கில் எளிதில் தோற்கடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். வாவ்ரிங்கா அடுத்து பெல்ஜியத்தின் டேவிட் காபினை எதிர்கொள்கிறார்.

மற்றொரு ஆட்டத்தில் ஆஸ்திரேலிய இளம் வீரர் நிக் கைஜியோஸ் 5–7, 7–5, 7–6, 6–3 என்ற செற் கணக்கில் 7ஆம் நிலை வீரர் கனடாவின் மிலோஸ் ராவ்னிக்குக்கு அதிர்ச்சி அளித்தார். நடப்பு சம்பியனும் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரருமான செர்பியாவின் ஜோகோவிச் தன்னை எதிர்த்த ஆஸ்திரேலியாவின் தாமிக்கை 6–3, 6–3, 6–3 என்ற நேர் செற்றில் விரட்டியடித்தார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 7.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.